


# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

# உள்ளடக்கம்

**(01) நிறுவனம் பற்றிய பக்கப்பார்வை ........ 1**
1.1 நிறுவனம் பற்றிய தகவல்கள் ........ 2
1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, முக்கிய பெறுமானங்கள் மற்றும் முக்கிய நோக்கங்கள் 3
1.3 பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் - 2022 ........ 5
1.4 கைத்தொழில்களுக்கு வழங்கப்படும் முக்கிய சேவைகளும் வசதிகளும் ........ 6
1.5 நிறுவன அமைப்பு ........ 7
1.6 சபையின் முக்கிய பிரிவுகள் ........ 8

**(02) முகாமைத்துவ மீளாய்வு ........ 9**

**(03) சிறப்பான செயலாற்றுகை சிறப்புக்கூறுகள் - 2022 ........ 14**
3.1 தேசிய கைத்தொழில் கண்காட்சி ........ 15
3.2 தேசிய கைத்தொழில் சிறப்பு விருது விழா - 2022 ........ 16
3.3 ஏக்கல கைத்தொழிற் பேட்டையில் கைத்தொழில்களின் எரிசக்தி வினைத்திறனை முன்னேற்றுவதற்கான முன்னோடிக் கருத்திட்டம் ........ 17
3.4 பின்னைய பொறியியல் தொழில்நுட்பத்தை உபயோகித்து மின்சார மோட்டார் வாகனமொன்றின் மூலமாதிரியைத் தயாரித்தல் ........ 18
3.5 IDB இற்கும் மஹிந்த்ரா ஐடியல் லங்கா தனியார் கம்பனிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் ........ 18
3.6 “Getup – Start Up for a wealthy Nation” தேசிய நிகழ்ச்சித்திட்டம் ........ 19
3.7 கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ........ 20
3.8 கனிய வளங்கள் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்திசெய்தல் ........ 21
3.9 பௌதிக ரீதியான முன்னேற்றம் - 2022 ........ 22
3.10 பிரிவுகளின் வருமானப் பரம்பலை வரைபு ரீதியாகக் காட்டல் ........ 33
3.11 2023 ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்கள ........ 34

**(04) பிரிவுகளின் முன்னேற்றம் சிறப்புக்கூறுகள் ........ 36**
4.1 நிருவாகப் பிரிவு ........ 37
4.2 முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவை நிலையம் ........ 41
4.3 பொறியியல் பிரிவு ........ 47
4.4 கைத்தொழில் பேட்டைப் பிரிவு ........ 61
4.5 சந்தைப்படுத்தல் பிரிவு ........ 70
4.6 திட்டமிடல் பிரிவு ........ 77
4.7 பிராந்திய அபிவிருத்திப் பிரிவு ........ 82
4.8 தொழில்நுட்ப சேவைப் பிரிவு ........ 91
4.9 தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் ........ 98
4.10 இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் ........ 103

**(05) நிதிசார் மீளாய்வு ........ 109**
5.1 விரிவான நிதிநிலைக் கூற்று ........ 111
5.2 விரிவான வருமானக் கூற்று ........ 112
5.3 உரிமைமாற்றக் கூற்று ........ 113
5.4 காசுப்பாய்ச்சல் கூற்று ........ 114
5.5 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களும் ........ 115

**(06) நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மீளாய்வு ........ 145**

# தலைப்பெழுத்துச் சொற்பட்டியல்

| | | |
|---|---|---|
| AD | - | நிர்வாகப் பிரிவு |
| ATRDC | - | பொருத்தமான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் |
| BMICH | - | பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் |
| BPVB | - | இலங்கை கொதிகலன் மற்றும் அழுத்த இயந்திர சபை |
| BSC | - | பித்தளைப் பாண்டங்கள் சேவை நிலையம் |
| CDLPF | - | தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் |
| CEDACS | - | முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவை நிலையம் |
| CNC | - | கணினி எண்முறைக் கட்டுப்பாடு |
| CSC | - | பொதுவான சேவை நிலையம் |
| CTB | - | இலங்கை போக்குவரத்துச் சபை |
| DS | - | பிரதேச செயலாளர் |
| ED | - | பொறியியல் பிரிவு |
| E-commerce | - | இலத்திரனியல் வாணிபம் |
| EnMS | - | எரிசக்தி முகாமைத்துவ முறைமை |
| EPC | - | மின் முலாமிடல் நிலையம் |
| EU | - | ஐரோப்பிய ஒன்றியம் |
| FD | - | நிதிப் பிரிவு |
| GDP | - | மொத்த தேசிய உற்பத்தி |
| HDFC | - | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் |
| HODs | - | பிரிவுத் தலைவர்கள் |
| ICC | - | சர்வதேச வாணிப சபை |
| ICT | - | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் |
| IDB | - | கைத்தொழில் அபிவிருத்திச் சபை |
| IEC | - | சர்வதேச மின் தொழில்நுட்பவியல் ஆணைக்குழு |
| IED | - | கைத்தொழில் பேட்டைப் பிரிவு |
| INBAR | - | சர்வதேச மூங்கில் மற்றும் பிரம்பு தாபனம் |
| IoT | - | பொருள்களின் இணையம் (டிஜிட்டல் கருவிகளையும் மின்னணுப் பொருள்களையும் மனிதர்களுடன் மெய்நிகர் முறையில் இணைக்கும் ஒரு திறன்மிகு நவீன கட்டமைப்பு. |
| ISO | - | சர்வதேச தரநிர்ணயக் கட்டளைகள் நிறுவனம் |
| IT | - | தகவல் தொழில்நுட்பவியல் |
| JAS | - | ஜப்பான் விவசாய தர நியமங்கள் |
| KPIs | - | முக்கிய செயல்திறன் குடிகாட்டிகள் |
| Ltd | - | வரையறுத்த |
| MD | - | சந்தைப்படுத்தல் பிரிவு |
| MFIF | - | நடுத்தர அதிர்வெண் தூண்டு (கிளர்மின்) உலை |
| MOU | - | புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| MPI | - | திட்டமிடல் மற்றும் முதலீட்டு அமைச்சு |
| MSMEs | - | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் |
| MT | - | மெட்ரிக் தொன் |
| NAITA | - | தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை |
| NBT | - | தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி |
| NMRA | - | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை |
| NVQ | - | தேசிய தொழில் தகைமைகள் |
| PD | - | திட்டமிடல் பிரிவு |
| PPP | - | தனியார் - பொது கூட்டாண்மை |
| RDD | - | பிராந்திய அபிவிருத்திப் பிரிவு |
| RPDSC | - | இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் |
| R&D | - | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி |
| SCX | - | உப ஒப்பந்தப் பரிமாற்றம் |
| SDB | - | சணச அபிவிருத்தி வங்கி |
| SEs | - | சுயதொழில் முயற்சியாளர்கள் |
| SoP | - | பதவி உயர்வுத் திட்டம் |
| SoR | - | ஆட்சேர்ப்புத் திட்டம் |
| TSD | - | தொழில்நுட்ப சேவைப் பிரிவு |
| TVEC | - | மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு |
| UNIDO | - | ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு |
| UNOPS | - | கருத்திட்ட சேவைகளுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் |
| USAID | - | சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை |
| USDA | - | ஐக்கிய அமெரிக்க விவசாயத் திணைக்களம் |
| VAT | - | பெறுமதி சேர் வரி |



# (01) நிறுவனம் பற்றிய பக்கப்பார்வை

## 1.1 நிறுவனம் பற்றிய தகவல்கள்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB) 1966 ஆம் ஆண்டில் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதன் இன்றைய வடிவில் 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இச்சட்டத்திற்கு இணங்க கைத்தொழில் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை ஊக்கப்படுத்துவதற்காக கைத்தொழிலாளர்களுக்கு நிதி, தொழில்நுட்ப மற்றும் நிருவாக உதவியை வழங்குவதுடன், நாட்டின் கைத்தொழில் துறை அபிவிருத்தியில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய செயற்படு கரமாகவும் முக்கிய நிறுவனமாகவும் அது விளங்குகிறது. இலங்கையில் கைத்தொழில்களை ஊக்கப்படுத்தல், அபிவிருத்தி செய்தல் என்பவற்றுடன் அவற்றுக்கு வசதியளிப்பது இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முதன்மை நோக்கமாகும். இன்று அது நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அரச துறையின் அனைத்து கைத்தொழில் முயற்சிகளின் உரிய ஒருங்கிணைப்புக்கும் இடைத் தொடர்புடைய வளர்ச்சிக்கும் உதவுமுகமாக பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. மேலும் இலங்கையின் இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் நோக்குடன் கைத்தொழில் ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்துவதற்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப செயன்முறைகளையும் முறைமைகளையும் முன்னேற்றுவதற்கும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு பொருத்தமான தொழில்நுட்பங்களையும் உபகரணங்களையும் அபிவிருத்தி செய்வதற்கும் மிகச் சிறப்பாக உபயோகப்படுத்துவதற்கும் உரிய செயன்முறைகளையும் கழிவுப்பொருள்களைக் கொண்டு உற்பத்திகளை மேற்கொள்ளும் முறைகளைக் கண்டுபிடிப்பதிலும் ஈடுபடுகிறது. இதுதவிர, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை சர்வதேச வர்த்தகத் துறையில் வெளிநாட்டுச் சந்தைக்கு உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதை ஊக்கப்படுத்துவதுடன், இலங்கையின் எந்தவொரு கைத்தொழில் முயற்சிக்கும் அல்லது கைத்தொழில் ஏற்றுமதிக்கும் அது தொடர்பாக தேவைப்படும் சேவைகளையும் வசதிகளையும் வழங்குகிறது. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதன் தோற்றம் முதல் கடந்த 53 வருட காலத்தில் அரசாங்கங்கள் மாறியவுடன் பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்கியது. தற்போது கைத்தொழில் அமைச்சின் நிருவாக நோக்கெல்லையின் கீழ் ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தொழிற்படுகிறது.

**எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:**

615, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவ.

011-2605111

011-2605111

www.idb.lk

dg@idb.gov.lk

## 1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, முக்கிய பெறுமானங்கள் மற்றும் முக்கிய நோக்கங்கள்

### தொலைநோக்கு

இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்துக் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்தல்"

### பணிக்கூற்று

"இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்துக் கைத்தொழில்களையும் ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான மூலோபாய, தொழில்நுட்ப மற்றும் வர்த்தக அடிப்படையினை வழங்குதல்"

### முக்கிய பெறுமானங்கள்




- **வாடிக்கையாளர் சேவைகள்:**

  *"வாடிக்கையாளரின் மகிழ்ச்சியைத் தக்கவைத்துக்கொள்ளல்"*

- **பொறுப்புடைமையும் நேர்மைத்திறமும்:**

  *"செயலொன்றுக்கான அர்ப்பணிப்பு, பொறுப்புக்கூற வேண்டியமை, நேர்மைக் கடப்பாடு"*

- **கற்றலும் அபிவிருத்தியும்:**

  *"மிகச் சிறந்த செயல்நிறைவேற்றத்திற்காக ஊழியரின் திறமை, அறிவு, மற்றும் நிபுணத்துவத்தை முன்னேற்றுதல்"*

- **குழு வேலைகள்:**

  "பொதுவான இலக்கொன்றை அடைவதற்கான உடனுழைப்பு முயற்சி"

## முக்கிய நோக்கங்கள்



1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சபைச் சட்டத்தில் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளவாறு சபையின் நோக்கங்கள் வருமாறு:-

- நாட்டின் கைத்தொழில்களின் ஊக்குவிப்பு, மேம்படுத்துகை மற்றும் அபிவிருத்தியில் உதவுதல்.
- நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அரசதுறை அனைத்து கைத்தொழில் நிறுவனங்களின் உரிய ஒருங்கிணைப்புக்கும் இடைத்தொடர்புடைய வளர்ச்சிக்கும் உதவுதல்.
- இலங்கையின் இயற்கை வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளலும், கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பச் செயன்முறைகளையும் முறைமைகளையும் முன்னேற்றுதலும், உள்நாட்டு கைத்தொழில்களுக்குப் பொருத்தமான தொழில்நுட்பத்தையும் கருவிகளையும் விருத்திசெய்தலும், கழிவுப்பொருள்களை வினைத்திறனுடன் பயன்படுத்திக் கொள்வதற்கான செயன்முறைகளையும் முறைமைகளையும் கண்டுபிடித்தலும் என்ற நோக்கங்களை முன்வைத்து கைத்தொழில் ஆராய்ச்சிகளை ஊட்டி வளர்த்தல்.
- உள்நாட்டு கைத்தொழில் உற்பத்திகள் வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படுவதை ஊக்குவித்தல்.
- மூலதன, கடன், சந்தைப்படுத்தல், முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப வசதிகளையும் சட்ட ஆலோசனைகளையும் வழங்குதலும் உட்பட, இலங்கையிலுள்ள யாதேனும் கைத்தொழில் நிறுவனமொன்றுடன் அல்லது தொழில்முயற்சியொன்றுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதற்குத் தேவைப்படும் எல்லா சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல்.

### சபையின் செயற்பாடுகள்


- சபையின் சவால்மிக்க கடமை பொறுப்புக்களின் இடைவெளிகளைப் பொறுப்பேற்கும் செயற்பாடுசார் மற்றும் நடவடிக்கைசார் அணுகுமுறைகளைப் பிரதிபலிக்கும் விசேட செயற்பாடுகளும் துறைகளும் தொடர்பில் பல்வேறு பிரிவுகளும் முகவராண்மைகளும் சபையினால் நிறுவப்பட்டுள்ளன.

- பல அமைச்சுக்களின் கீழ் இயங்கிய கைத்தொழில் அபிவிருத்திச் சபை, 2020 ஆம் ஆண்டு முதல் கைத்தொழில் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்படுகிறது.

## 1.3 பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் - 2022

| இல. | பதவி | பெயர் | நிறுவனம் | காலப்பகுதி | |
|---|---|---|---|---|---|
| | | | | நியமனத் திகதி | நியமனம் முடிவடையும் திகதி |
| 1. | தவிசாளர் | திரு. உபசேன திசாநாயக்க | கைத்தொழில் அபிவிருத்திச் சபை | 01.01.2020 | 23.03.2022 |
| 2. | தவிசாளர் | திரு. சுனில் குணவர்தன | கைத்தொழில் அபிவிருத்திச் சபை | 24.03.2022 | 14.09.2022 |
| 3. | தவிசாளர் | வைத்தியர் சாரங்க அலகப்பெரும | கைத்தொழில் அபிவிருத்திச் சபை | 15.09.2022 | 15.09.2025 |
| 4. | சபையின் பதவிவழியால் நியமிக்கப்படும் உறுப்பினர் | திரு. சத்துர மொஹொட்டிகெதர | நிதி அமைச்சு | 27.01.2021 | 02.03.2022 |
| 5. | சபையின் பதவிவழியால் நியமிக்கப்படும் உறுப்பினர் | திரு. கே.ஜி.ஆர்.ஜி.ஆர். விக்ரமவர்தன | தேசிய திட்டமிடல் திணைக்களம் | 28.08.2020 | 28.08.2023 |
| 6. | சபை உறுப்பினர் | திரு. ஆலோக்க என். வாஹலவத்த | - | 01.01.2020 | 17.03.2023 |
| 7. | சபை உறுப்பினர் | திரு. ஏ.ஏ.என்.புத்திக்க விமலசிறி | - | 01.01.2020 | 01.01.2023 |
| 8. | சபை உறுப்பினர் | திரு. எம்.ஆர்.விமல் ஜயவர்தன | - | 01.01.2020 | 24.03.2022 |
| 9. | சபை உறுப்பினர் | திரு. எச்.ஆர்.பீ.பீரிஸ் | - | 01.01.2020 | 01.01.2023 |
| 10. | சபை உறுப்பினர் | திரு. கே.அத்துல ஹப்புதந்திரி | - | 15.12.2021 | 24.03.2022 |
| 11. | சபை உறுப்பினர் | திரு. என்.ஜி.பண்டிதரத்ன | கைத்தொழில் அமைச்சு | 22.01.2021 | 24.03.2022 |
| 12. | சபையின் பதவிவழியால் நியமிக்கப்படும் உறுப்பினர் | திரு. பி.கே.ஆர்.பாலசூரிய | நிதி அமைச்சு | 23.03.2022 | 25.01.2023 |
| 13. | சபையின் நோக்குநர் | திரு. கே.ஜி.ஆர். விமலசூரிய | கைத்தொழில் அமைச்சு | 01.06.2022 | 01.06.2025 |
| 14. | சபை உறுப்பினர் | திரு. சுரங்க மெண்டிஸ் | - | 30.07.2022 | 30.07.2025 |
| 15. | சபை உறுப்பினர் | திரு. எச்.எம்.ரஞ்சித் கிரிஎல்ல | - | 08.08.2022 | 08.08.2025 |


## 1.4 கைத்தொழில்களுக்கு வழங்கப்படும் முக்கிய சேவைகளும் வசதிகளும்




### சபையின் முழுதுமளாவிய பணிகள்

- சபையின் நோக்கங்களில் நன்கு சிந்தித்து உள்ளடக்கப்பட்டுள்ள சேவைகளை வழங்குதல்.
- அரசின் கைத்தொழில் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் உதவுதல்.
- கைத்தொழில் ஊக்குவிப்பும் அபிவிருத்தியும் சம்பந்தமான அனைத்துப் பணிகளும் தொடர்பில் கைத்தொழில்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

## 1.5 நிறுவன அமைப்பு



தவிசாளர்
HM 2-1
பணிப்பாளர் நாயகம்
HM 1-3
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நடவடிக்கை)
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி)
HM 1-2
பணிப்பாளர் - நிருவாகம் (1)
பணிப்பாளர் - நிதி (1)
பணிப்பாளர் - திட்டமிடல் (1)
பணிப்பாளர் - சந்தைப்படுத்தல் (1)
பணிப்பாளர் - மு.அ.ம.சே.நி. (CEDACS) (1)
பணிப்பாளர் - கைத்தொழிற் பேட்டைகள் (1)
பணிப்பாளர் - பிராந்திய அபிவிருத்தி (1)
பணிப்பாளர் - தொழில்நுட்ப சேவைகள் (1)
பணிப்பாளர் - பொறியியல் (1)
MM 1-2
உ.ப. / பி.ப. (4)
கணக்காளர்கள் (3)
உ.ப. / பி.ப. (3)
உ.ப. / பி.ப. (3)
உ.ப. / பி.ப. (3) நூலகர் (1) முறைமை நிருவாகி (1)
உ.ப. / பி.ப. (2)
உ.ப. / பி.ப. (2)
உ.ப. / பி.ப. (25)
உ.ப. / பி.ப. (10) பொறியியலாளர் (2)
உ.ப. / பி.ப. (1) பொறியியலாளர் (7)
உள்ளக கணக்காய்வாளர் (1)
பணிப்பாளர் சபை செயலாளர் (1)
JM 1-1
நிருவாக அலுவலர் (02) வழங்கல் அலுவலர் (01) பாதுகாப்பு அலுவலர் (01) போக்குவரத்து அலுவலர்(01)
கணக்கு அலுவலர் (1)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ. (3)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ. (2) . விற்.அலு. (3)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ. (2) அச்சீட்டு அலுவலர் (1) வெப் மாஸ்டர் (1)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ . (2) அத்தியட்சகர் (7)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ. (2)
சி.தொ.ஊ. அ. (25)
அபி.அலு./ சி.தொ.ஊ.அ. (15) நிரு.அ.(1)
அபி.அலு/ சி.தொ.ஊ.அ. (1) சிரே.பொறி.உ. (9)
உள்ளக கணக்காய்வு அலுவலர் (1)
தவிசாளரின் நேர்தொடர்பு உதவியாள் (1)
MA 5-2
உதவிப் பணியாட்குழு [ தொ.ஊ.அ. (EPO) / (94) புள்ளிவிபரவியல் அலுவலர் / (01) திட்ட வடிவமைப்பாளர் (1)
MA 2-1/MA 1-
உதவிப் பணியாட்குழு:
(கணக்குப் பதியுநர் / வரைவாளர் / பொறியியல் உதவியாளர் / கணினி கிரா.ஃபிக் வடிவமைப்பாளர் / நூலக உதவியாளர் / ஆய்வுகூட உதவியாளர் / முகாரி / வரைவு உதவியாளர் /
முகாமைத்துவ உதவியாளர் / புள்ளிவிவரவியல் ஆய்வாளர் / விற்பனை உதவியாளர் / களஞ்சியசாலைப் பொறுப்பாளர் / செய்துகாட்டுநர் / பயிற்சிப் போதனாசிரியர் (184)
PL 1/PL 2/PL 3
உதவிப் பணியாட்குழு : (திறன் வேலைகள் / அலுவலக சிறு பணியாளர் / வெளிக்கள உதவியாளர் / களஞ்சியசாலை வேலையாள் /வேலையாள்) (266)

## 1.6 சபையின் முக்கிய பிரிவுகள்

| இல. | பிரிவின் பெயர் | | பிரிவுத் தலைவர் |
|---|---|---|---|
| 01. | நிருவாகப் பிரிவு (AD) | - | திரு. சமிந்த ராமசுந்தர |
| 02. | பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD) | - | திரு. பீ.பீ.பீ.எஸ்.திக்வெல்ல |
| 03. | திட்டமிடல் பிரிவு (PD) | - | திரு. ஜே.டீ.ஹேமகுமார சில்வா |
| 04. | சந்தைப்படுத்தல் பிரிவு (MD) | - | திரு. எச்.எம்.எஸ்.சமரகோன் |
| 05. | கைத்தொழிற் பேட்டைப் பிரிவு (IED) | - | திரு. டப்ளியு.ஏ.லால் பிரியந்த |
| 06. | பொறியியல் பிரிவு (ED) | - | திரு. டப்ளியு.ஏ.பீ.கபில நிஷாந்த |
| 07. | முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவை நிலையம் (CEDACS) | - | திரு. ரி.எம்.குமார |
| 08. | தொழில்நுட்ப சேவைப் பிரிவு (TSD) | - | திரு. எச்.ஏ.பீ.குணவர்தன |
| 09. | நிதிப் பிரிவு (FD) | - | திரு. உபுல் அபேசூரிய |
| 10. | தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் (CDLPF) | - | திரு. அமரநாத் விமலசிங்க (பிரதிப் பணிப்பாளர் |
| 11. | இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் (RPDSC) | - | திருமதி ரி.எஸ்.டி. த சில்வா (பிரதிப் பணிப்பாளர்) |

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனைத்துப் பிரிவுகளினாலும் மேற்கொள்ளப்படும் பணிகள், நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. திட்டமிடல், நிருவாகம், நிதி ஆகியன நடவடிக்கைப் பிரிவைச் சாரும். சபையின் அபிவிருத்தி அலுவல்களை ஏனைய பிரிவுகள் மேற்கொள்கின்றன. 25 அலுவலகங்களைக் கொண்ட மாவட்ட அலுவலக வலையமைப்பு பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் கீழ் இயங்குகின்றது. கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் கீழ் 16 கைத்தொழிற் பேட்டைகள் இயங்குகின்றன. உள்நாட்டு தொழில்முனைவோருக்கு உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்திக்கான வசதியளிப்பதும் அறிவுப் பரிமாற்றமும் தொடர்பில் பொறியியல் பிரிவும் தொழில்நுட்ப சேவைப் பிரிவும் தலையிட்டு நடவடிக்கை எடுக்கின்றன.



# (02) முகாமைத்துவ மீளாய்வு

- தவிசாளர் விடுக்கும் செய்தி
- பணிப்பாளர் நாயகம் விடுக்கும் செய்தி

# தவிசாளர் விடுக்கும் செய்தி



இலங்கையில் மிகவும் போட்டிகரமான தொழில்முயற்சி அபிவிருத்திச் சேவைகளை வழங்கும் அரச நிறுவனம் என்ற வகையில் ஐந்து தசாப்தங்களுக்கும் கூடுதலான காலமாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை (MSMEs) ஊக்குவித்து அபிவிருத்தி செய்யும் பொறுப்பை கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) சிரமேற்கொள்கிறது. 2022 ஆம் ஆண்டிற்கு IDB இன் வருடாந்த செயலாற்றுகையை நினைவூட்டுவதற்கும் மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கும் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

IDB இன் 2022 ஆண்டறிக்கைக்கு நான் இச்செய்தியை விடுக்கும் வேளையளவில் இலங்கை பொருளாதார நெருக்கடி நிலையில் உள்ளது. அது, மக்களின் வாழ்வாதாரத்தின் மீது பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளது. கொவிட் பெருந்தொற்றின் தாக்கம் காரணமாக ஏற்பட்ட பின்னடைவுகளும் அதனைத்தொடர்ந்து எழுந்த பொருளாதார நெருக்கடியும் நாட்டின் பொருளாதார சீரழிவு மீது பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளது. IDB உம் அத்தாக்கத்திலிருந்து மீளவில்லை. இச்சவால் மிகுந்த காலப்பகுதியில் இலங்கைவாழ் மக்களையும் தொழில்முயற்சிகளையும் வலுவூட்டும் அத்துடன் மிகவும் பயனுறுதி வாய்ந்தவையாக மாற்றுவதற்கான எமது நெறிமுறைகளை தொடர்ந்தும் பேணி வருவதுடன், இப்பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கைத்தொழில்களுக்கு எமது உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை வழங்குவதற்காக பெரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றோம். எமது IDB குழுவினாலும் வியாபாரப் பங்காளர்களினாலும் தொடர்ந்தும் வழங்கப்படும் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் குறித்து நான் மிகவும் பெருமிதமடைகின்றேன். அதன்மூலம் நெருக்கடி முழுவதிலும் கைத்தொழில்கள், தொழில்முயற்சிகள், தேசத்திற்கு பாரியளவில் உதவுவதற்கு முக்கிய செயற்பொறுப்பொன்றை ஆற்ற எம்மால் முடிந்தது. சேவைகளின் தரத்தை அதிகரித்து மூலவாய்ப்புவளமுள்ள கைத்தொழிலாளர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கான ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் முடுக்கிவிட்டு IDB அமுல்படுத்தியுள்ளது. உள்ளடங்கலான மற்றும் அணுகக்கூடிய சேவைகளும் பேண்தகு செயல்முனைப்புகளும் ஊடாக கைத்தொழில்களுக்கும் சமூகங்களுக்கும் உதவுவதற்காக முடுக்கிவிடப்பட்டுள்ள எமது நிகழ்ச்சித்திட்டங்களின் நன்மைகளை இன்று நாம் காண்கின்றோம். 2022 ஆம் ஆண்டில் IDB க்கு மீண்டும் ஒருமுறை கோடிட்டுக்காட்டத்தக்க செயலாற்றுகையொன்றை வழங்க இது காரணமாக அமைந்துள்ளது. புதிய, தற்போதுள்ள, எதிர்காலத்தில் உருவாக்கப்படும் கைத்தொழில்களின் அதிகரிக்கும் கேள்விக்குத் தீர்வு காண்பதற்கு எமது சேவைகளை மேம்படுத்த வேண்டும் என்பதை நாம் கண்டுகொண்டுள்ளோம். வளங்களையும் இயல்திறனையும் அதிகரிப்பதற்கு கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள கணிசமானவர்களுடன் நாம் மூலோபாய ரீதியான சில பங்காண்மைகளிலும் (MOUs) கைச்சாத்திட்டோம். IDB கைத்தொழிற் பேட்டைகளின் உற்பத்திக் கைத்தொழில்களின் எரிசக்தி வினைத்திறனை முன்னேற்றுவதற்கான கருத்திட்டமொன்று எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிதி அணுகுமுறை, சந்தை அணுகுமுறை, தொழில்முயற்சி அபிவிருத்தி உதவி அணுகுமுறை ஆகிய விடயங்கள் தொடர்பில் இப்பங்காண்மைகளை செயல்வலுப்படுத்தும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில்நுட்பப் பங்காளராவதற்கு USAID அமைப்பு விருப்பம் வெளியிட்டுள்ளது. மேலும், மஹிந்த்ரா வாகன

உதிரிப்பாகங்களை உள்ளூரில் உற்பத்திசெய்ய ஆரம்பித்தல், தரக் கட்டுப்பாட்டு நியமங்களைப் பேணுவதற்கு அவசியமான தொழில்நுட்ப சோதனைகளை மேற்கொள்ளல் என்பவற்றுடன் மூன்றாம் தரப்பு தரச் சான்றுப்படுத்தலுக்கு மஹிந்த்ரா ஐடியல் லங்கா தனியார் கம்பனிக்கு ஏற்பிசைவு அளிக்கப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையான உள்நாட்டு மற்றும் சர்வதேச காட்சிப்படுத்துநர்கள் இணைந்து ‘கைத்தொழில் 2022’ தேசிய கைத்தொழில் கண்காட்சியை ஒழுங்குசெய்தமை இவ்வாண்டில் இடம்பெற்ற மற்றுமொரு முக்கிய நிகழ்வாகும். இலங்கையின் அனைத்துக் கைத்தொழில்களின் ஆற்றல்களையும் இயல்திறன்களையும் விரிவுபடுத்துவதற்கு இந்நிகழ்வு வலிகோலியது. ஆகையால், பாரிய கம்பனிகளும் பல்தேசியக் கம்பனிகளும் அவர்களது உற்பத்திகளைக் காட்சிப்படுத்துவதற்கு இணைந்து கொண்டன. மீளாய்வு ஆண்டு முன்னெப்போதும் இல்லாதவாறு சவால் மிகுந்ததாக விளங்கியது. IDB குழுவின் செயலாற்றுகையானது எமது பணியாட்குழு அங்கத்தவர்களதும் ஏனைய பிராந்திய அலுவலகங்களின் சிறப்புநிலைகளை அடைந்து கொள்வதோடு ஒரே அணியாக எதிர்காலத்தை உருவாக்க இணைந்து பணியாற்றும் அர்ப்பணிப்பு, உழைப்பு, சிறப்பான செயலாற்றுகை என்பவற்றைப் பிரதிபலிப்பதாகும்.

மேற்சொன்ன அனைத்திற்கும் தலைமைத்துவம் வழங்கி IDB ஐ நாட்டின் மிக முக்கிய சிறிய, நடுத்தர மற்றும் பாரிய கைத்தொழில்களை அபிவிருத்திசெய்யும் ஒரு நிறுவனமாக மாற்றுவதற்கு பணிப்பாளர் நாயகம் திரு. பீ.எல்.யூ.ரத்னமலல அவர்கள் வழங்கிய பங்களிப்பையும் தலையீட்டையும் அர்ப்பணிப்பையும் நன்றியுடன் நினைவுகூர விரும்புகின்றேன். ஆண்டினுள் பணிப்பாளர் சபையின் அர்ப்பணிப்பையும் வழிகாட்டலையும் நினைவுகூரக் கிடைத்ததையிட்டு உண்மையில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும், 2022 ஆம் ஆண்டில் IDB இன் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உயர் முகாமைத்துவம், பணிப்பாளர்கள், திணைக்கள மற்றும் பிரிவுத் தலைவர்கள், பணியாட்குழு உள்ளிட்ட ஏனைய உதவிப் பணியாட்குழுவினர் வழங்கிய சேவைகளுக்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

**சுனில் குணவர்தன**
**தவிசாளர்**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை**

# பணிப்பாளர் நாயகம் விடுக்கும் செய்தி



உள்நாட்டுக் கைத்தொழில் எதிர்நோக்கும் சமகால சவால்கள் தொடர்பில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலையீடு பற்றி சுருக்கமாக விளக்கமளிப்பதுடன், 2022 ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஆண்டறிக்கைக்கு எனது கருத்துரையையும் அபிப்பிராயத்தையும் வழங்கக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியது.

கொவிட்-19 பெருந்தொற்று தணிந்துசெல்லும் ஒரு போக்கு தென்பட்டபோதும், உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு மேலும் நிவாரணமளிக்கும் ஓர் ஆண்டாக 2022 ஆம் ஆண்டு அமையவில்லை. நாட்டின் மோசமான வர்த்தக மீதி மக்கள் வாழ்வின் மீதும், உள்நாட்டுக் கைத்தொழில்களின் குறிப்பாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் செயற்பாட்டின் மீதும் நேரடியாக தாக்கம் செலுத்தும் முக்கிய பல துறைகளில் பிரதிபலித்தது. நாடளாவிய எரிபொருள் பற்றாக்குறை கைத்தொழில்கள் எதிர்நோக்கிய அவ்வாறான ஒரு தீர்க்கமான பிரச்சினையாக விளங்கியது. பெரும்பாலான கைத்தொழில்களுக்கு தமது நாளாந்த நடவடிக்கைகளுக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும்போது அரசாங்கத்தின் விசேட கவனத்தை ஈர்க்கச் செய்வதற்கும் உதவுவதற்கும் IDB ஒத்துழைப்பை வழங்கியது. இது தவிர, 450 கைத்தொழில்களுக்கு தமது உற்பத்தி மற்றும் சேவைகளை காட்சிப்படுத்துவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கண்காட்சியை BMICH இல் 04 நாட்கள் வெற்றிகரமாக நடாத்துவதற்கு IDB இயலுமை பெற்றது. பரிசளிப்பு விழாவில் கோடிட்டுக் காட்டத்தக்க கைத்தொழில்களின் இறுதிப் போட்டியாளர்களுக்கு நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி கண்காட்சிக்கு கண்காட்சியாளர்களாக பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. உள்நாட்டுக் கைத்தொழில் துறைகளின் பரந்ததொரு வீச்சை கொண்டதாக 2022 தேசிய கைத்தொழில் சிறப்பு விருது விழா வெற்றிகரமாக நடந்தேறியது. இடைநிறுத்தப்பட்டவை அல்லது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டவை என்ற அடிப்படையில் ஏராளமான பொருள்களின் இறக்குமதித் தடை இந்நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குப் பற்றாக்குறையின் மற்றுமொரு பெறுபேறாகும். இறக்குமதி செய்யப்படும் குறித்துரைத்த பண்டங்களை வகையீடு செய்யும்போது, இறக்குமதித் தடையை அமுல்படுத்துவதன் மூலம் உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைக் குறைப்பதில் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு IDB உதவியது. திடீர் பொருளாதாரத் தாக்கமும் இலங்கை ரூபாவின் பெறுமதியிறக்கமும் காரணமாக உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு தேவைப்படும் மூலப்பொருள்களையும் துணையுறுப்புகளையும் இறக்குமதி செய்யும்போது உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு உதவுவதற்கு சபைக்கு நேரிட்டது. இதனிடையே, உள்ளக செயற்பாட்டின் ஊடாக வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு IDB முகாமைத்துவம் மேலதிக முயற்சி எடுத்தது. புதிய தவிசாளரின் கீழ் IDB நிரல் அமைச்சுடன் இணைந்து உள்நாட்டுக் கைத்தொழில்களின் தீர்க்கமான பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்கி "Get Up, Start Up, for a Wealthy Nation" என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை முடுக்கிவிட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காணிப் பிரச்சினை, திரவத்தன்மை, உரிமம் வழங்குதல், கொள்கை வகுப்பு மற்றும் கைத்தொழிலாளரின் கண்ணோட்டத்தில் நாடுபூராவும் தொழில்முயற்சிக் கலாசாரம் பற்றிய பிரச்சினைகளுக்கு உயர் முன்னுரிமை அளித்தது. இப்புதிய அணுகுமுறையுடன் மூலோபாய

ரீதியான கவனிப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் உள்நாட்டுக் கைத்தொழில்களின் அபிவிருத்தி மீது தேசிய அபிவிருத்தி அமைச்சுக்களின் கவனத்தை ஈர்க்கச் செய்வதற்கும் பொதுத் திறைசேரியுடனும் அனைத்து மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து பங்கீடுபாட்டு அரச நிறுவனங்களுடனும் IDB பேச்சுவார்த்தைகளை நடாத்தியது. அதேபோல், ஆண்டுமுழுதும் நிருவாக மற்றும் நிதி ஒழுக்காற்றைப் பேணுவதற்கு IDB முகாமைத்துவத்தினால் அவசியமான முக்கிய பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆண்டுமுழுதும் வழங்கிய ஆலோசனைகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் கௌரவ அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன். அதேபோல், IDB பணியாட்குழுவை வெற்றியை நோக்கி நகர்த்துவதற்கான செயல்முனைப்புகளும் வழிகாட்டல்களும் சார்பாக மூன்று தவிசாளர்களுக்கும் சபைக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன். IDB இன் இன்றைய தவிசாளரான வைத்தியர் சாரங்க அலகப்பெரும அவர்கள் தலைமையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய அணுகுமுறைகள் உள்நாட்டுக் கைத்தொழிலுக்கும் IDB க்கும் சிறந்த உந்துசக்தியொன்றை வழங்குமென்று நான் எதிர்பார்க்கின்றேன். இறுதியாக, கைத்தொழில் துறையில் IDB இன் இருப்பை நிலைபெறச்செய்வதற்கு வழங்கும் அர்ப்பணிப்பையும் ஒத்துழைப்பையும் முன்னிட்டு IDB சிரேட்ட முகாமைத்துவத்திற்கும் IDB பணியாட்குழுவுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன்.

**பீ.எல்.யூ.ரத்னமலல,**
**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை**



# (03) விசேட செயலாற்றுகை சிறப்புக்கூறுகள் - 2022

3.1 தேசிய கைத்தொழில் கண்காட்சி

3.2 தேசிய கைத்தொழில் சிறப்பு விருது விழா - 2022

3.3 ஏக்கல கைத்தொழில் பேட்டையில் கைத்தொழில்களின் எரிசக்தி வினைத்திறனை மேம்படுத்துவதற்கான முன்னோடிக் கருத்திட்டம்

3.4 பின்னைய பொறியியல் தொழில்நுட்பத்தை உபயோகித்து மின்சார மோட்டார் வாகனமொன்றின் உள்நாட்டு மூலமாதிரியுருவைத் தயாரித்தல்

3.5 IDB இற்கும் மஹிந்த்ரா ஐடியல் தனியார் கம்பனிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுதல்

3.6 "Getup – Start Up for a Wealthy Nation" தேசிய நிகழ்ச்சித்திட்டம்

3.7 கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

3.8 கனிய வளங்கள் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்

3.9 பௌதிக ரீதியான முன்னேற்றம் - 2022

3.10 பிரிவுகளின் வருமானப் பரம்பலை வரைபு ரீதியாகக் காட்டல்.

3.11 2023 ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்கள்

## 2022 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான முன்னேற்ற மீளாய்வு

2022 ஆம் ஆண்டில் இந்நாட்டின் வர்த்தக சமூகத்தை ஊக்குவிப்பதற்கு பல்வேறு உதவிகளையும் ஆதரவுச் சேவைகளையும் IDB வழங்கியது. மேலும் நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளின் (MSMEs) அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு தொடர்பான மூலோபாயங்களைத் திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்கும் சபை கடப்பட்டுள்ளது. இந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக மூலவாய்ப்புவளமுள்ள தொழில்முயற்சிகளுக்கு சந்தையை விஸ்தரிக்குமுகமாக அமைச்சுடன் இணைந்து பல நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஆரம்பிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் IDB இணைந்துள்ளது.

### விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள்

#### 3.1 தேசிய கைத்தொழில் கண்காட்சி





*மூலம் : கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

“கைத்தொழில்-2022” தேசிய கைத்தொழில் கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது. முன்னாள் பிரதமர் திரு. மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் கைத்தொழில் அமைச்சர் திரு. விமல் வீரவங்ச ஆகியோரின் தலைமையில் அது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான தேசிய மற்றும் சர்வதேச காட்சிப்படுத்துநர்களின் பங்கேற்புடன் அது நடைபெற்றது. அக்கண்காட்சி இலங்கையின் சகல கைத்தொழில்களினதும் திறமைகளையும் இயலளவுகளையும் விரிவுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தமையால், பாரிய கம்பனிகளும் பல்தேசியக்

கம்பனிகளும் அவர்களின் மூலப்பொருள்கள், சாதனங்கள், உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள், கூறமைதிகள் மற்றும் துணையுறுப்புக்களைக் காட்சிப்படுத்துவதற்கு இதில் இணைந்து கொண்டன.

இதன் முக்கிய நோக்கங்களாவன:-

- **உற்பத்தி மற்றும் சேவைக் கண்காட்சி** – தேசிய மற்றும் சர்வதேச சந்தைக்கான உற்பத்திகள், சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உற்பத்திசெய்யும் போது உள்நாட்டுக் கைத்தொழில்களின் சிறந்த ஆற்றல்களையும் இயலளவுகளையும் காட்சிப்படுத்துதல்.

- **தொழில்முயற்சி இசைவு அமர்வுகள்** – பல்தேசியக் கம்பனிகள், பாரியளவான கைத்தொழில்கள், அரசாங்கத்துடன் தொடர்புடைய கம்பனிகள் முதலியவற்றுடன் வர்த்தகத் தொடர்புகளின் ஊடாக உலக சந்தை வழங்கற் சங்கிலிகளுடன் இணைவதற்கு உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- **உற்பத்தியை ஆரம்பித்துவைத்தலும் அறிமுகப்படுத்தலும்** – தேசிய மற்றும் சர்வதேச சந்தைக்கு புதிய உற்பத்திகளையும் சேவைகளையும் அறிமுகப்படுத்துவதற்காக உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு அரங்கொன்றை அமைத்தல்.

- **உற்பத்தி அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் போன்றே தொழில்நுட்பமும் புத்தாக்கமும் பற்றிய தகவல்களையும் கருத்துக்களையும் பரிமாறிக்கொள்ளல்** – இலங்கையில் போட்டிகரமான, புத்தாக்க மற்றும் தாக்குப்பிடிக்கும் கைத்தொழில் துறையொன்றை அபிவிருத்திசெய்யும் போது புதிய மற்றும் ஆக்கபூர்வமான கருத்துக்களை விருத்தி செய்தல்.

- **கைத்தொழிலின் சிறப்புநிலைகளை அடையாளம் காணல்** - கைத்தொழில்களின் கோடிட்டுக் காட்டப்படும் செயலாற்றுகைகளை மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி அடையாளங்கண்டு பரிசு வழங்குதல்.

## 3.2 தேசிய கைத்தொழில் சிறப்பு விருது விழா - 2022

Industry Excellence - Platinum Winners

Category - Small

Sector - Electrical and electronics and allied industries

Entrepreneur/Industry - **Mr. W.A.V.K. Silva,Managing Director, Asian Chill Equipments (PVT) Ltd**





*மூலம் : கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைப் பிரகடனத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டவாறு, 'நாட்டுக்குப் புத்துயிரூட்டும் கைத்தொழில் மறுமலர்ச்சிக்கு' வழிவகுக்கும் மற்றுமொரு முன்னோக்கிய நகர்வாக முன்னாள் கைத்தொழில் அமைச்சர் திரு. விமல் வீரவங்ச அவர்களின் கருத்துருக்களுக்கும் வழிகாட்டல்களுக்கும் அமைய, கைத்தொழில் அமைச்சின் நெறிப்படுத்தலுடன் 'தேசிய கைத்தொழில்

சிறப்பு விருது வழங்கல்-2022’ விழா இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

இவ்விருது விழா, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் தலைமையில் பத்தரமுல்ல “வோட்டர்ஸ் எட்ஜ்” ஹோட்டலில் நடைபெற்றது.

இதன் சில நோக்கங்களாவன:

- தெரிவுசெய்யப்பட்ட 20 கைத்தொழில் துறைகளினூடாக நாடுபூராவும் பரந்துள்ள தலைசிறந்த கைத்தொழிலாளர்களைக் கண்டுபிடித்து, அவர்களை ஏற்றிப்போற்றுதலும் விருது வழங்குதலும்.

- இந்நாட்டின் தலைநகரில் நடைபெறும் பகிரங்க கண்காட்சிகளின்போது மாகாண மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளில் கைத்தொழிலாளர்களுக்கு உதவியாக இருத்தல்.

- தொழில்முயற்சி முன்னேற்றல்களுக்கும் விஸ்தரிப்புகளுக்கும் கைத்தொழிலாளர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குதல்.

### 3.3 ஏக்கல கைத்தொழிற் பேட்டையில் கைத்தொழில்களின் எரிசக்தி வினைத்திறனை முன்னேற்றுவதற்கான முன்னோடிக் கருத்திட்டம்

ஏக்கல கைத்தொழிற் பேட்டையில் கைத்தொழில்களில் எரிசக்தி வினைத்திறனை மேம்படுத்தும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில்நுட்ப பங்காளரொருவராவதற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை (USAID) விருப்பம் வெளியிட்டுள்ளது.

மின் கட்டணங்களின் செலவுத் தெறிப்புநிலையை மேம்படுத்தல், மீள்பிறப்பாக்க சக்திப் பாவனையை அதிகரித்தல், கேள்விக்குரிய முகாமைத்துவத்தை முன்னேற்றுதல் என்பவற்றுடன் உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மையின் (USAID) இலங்கை எரிசக்தி வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்தும் பங்காளர், Chemonics International நிறுவனமாகும். USAID – S/L எரிசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒத்துழைப்புடன் ஜா-எல, ஏக்கல IDB கைத்தொழிற் பேட்டையில் 15 கைத்தொழில்களின் எரிசக்தி வினைத்திறனை முன்னேற்றுவதற்கான முன்னோடிக் கருத்திட்டம் IDB இனால் முடுக்கிவிடப்பட்டுள்ளது.



*மூலம் : கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

### 3.4 பின்னைய பொறியியல் தொழில்நுட்பத்தை உபயோகித்து மின்சார மோட்டார் வாகனமொன்றின் தேசிய மூலமாதிரியுருவை (Prototype production) தயாரித்தல்



*மூலம் : கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் பின்னைய பொறியியல் தொழில்நுட்பத்தை உபயோகித்து இலாபகரமான மின்சார மோட்டார் வாகனமொன்றின் தேசிய மூலமாதிரயைத் தயாரிப்பதற்கான ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. Dilango Cars தனியார் கம்பனியின் இணைத் தாபகரான திரு. டிலன்த மாலகமுவ அவர்களுடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஜப்பான் மோட்டார் வாகன உற்பத்திக் கம்பனியொன்றின் அனுசரனையின் கீழ் Dilango Cars தனியார் கம்பனியுடன் இணைந்து இந்த உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

### 3.5 IDB இற்கும் மஹிந்த்ரா ஐடியல் லங்கா தனியார் கம்பனிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுதல்



*மூலம் : கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

கைத்தொழிலில் வெற்றிகரமான பயணமொன்றை ஆரம்பிப்பதற்கு மஹிந்த்ரா ஐடியல் லங்கா தனியார் கம்பனியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஊடாக மஹிந்த்ரா வாகன உதிரிப்பாகங்களை உள்ளூரில் உற்பத்தி செய்வதற்கும், தரக் கட்டுப்பாட்டு நியமங்களைப் பேணுவதற்கு அவசியமான தொழில்நுட்ப சோதனைகளை மேற்கொள்வதற்கும், மூன்றாம் தரப்பு தரச் சான்றிதழொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.6 "Getup – Start Up for a Wealthy Nation" தேசிய நிகழ்ச்சித்திட்டம்






*மூலம் : கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

இந்நாட்டுக் கைத்தொழில்களிலும் தொழில்முயற்சிகளிலும் புத்தாக்கங்களை ஏற்படுத்தும் நோக்கில் கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் சகல அரச மற்றும் அரசல்லாத நிறுவனங்களின் உதவியுடன் "Get Up – Start Up for a Wealthy Nation" என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டம் பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சரான (வைத்தியர்) ரமேஷ் பத்திரண அவர்கள் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப (BMICH) வளவில் நினைவு வைபவம் நடைபெற்றது.

கைத்தொழில் பொருளாதாரமொன்றைக் கொண்ட செல்வந்த நாடொன்றை உருவாக்கும் நோக்குடன் இத்தேசிய நிகழ்ச்சித்திட்டம் முடுக்கிவிடப்பட்டுள்ளதுடன், இன்னும் சில நிகழ்ச்சித்திட்டங்களும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. செல்லிட செயலியொன்றை (IDB Mobile App) உபயோகித்து தொழில்முயற்சியாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் புதிய தொழில்நுட்ப இயங்குதளமொன்றை அமைத்துருவாக்குதல், கைத்தொழில் துரித அழைப்பு இலக்கம் - 1995, WhatsApp இலக்கம் - 070-5001995 மற்றும் "Business Clinic" என்ற நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல் ஆகியன இந்நிகழ்ச்சித்திட்டத்தில் அடங்கும்.

மேலும், உயர் பாடசாலை மாணவர்களுக்கு தரம் 9 இலிருந்து முயற்சியாண்மை பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு"முயற்சியாண்மை வட்டம்" (Entrepreneurial Circle) என்ற கருத்துருவை பாடசாலைகளில் அறிமுகப்படுத்துதல், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களின் கைத்தொழில்களில் முதலீடு செய்வதற்கு பாரிய முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் IDBக்கு "முதலீட்டாளர் குழாமொன்றை" (Investor Pool) அமைத்தல் என்பவற்றுடன் தொழில்முயற்சியாளர்களுக்கு குறைந்த வட்டிக்கு கடன் வசதியளிப்பதற்கு HDFC வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. நாட்டின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்யக்கூடிய வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களாக மாறுவதற்கேற்ற தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காக முச்சக்கர வண்டி ஓட்டுனர்களுக்கான தொழில்முயற்சிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

சணச அபிவிருத்தி வங்கியுடன் (SDB) ஒத்துழைத்து டிஜிட்டல் வங்கியாக்கம் மற்றும் அபிவிருத்தி வழங்கற் சங்கிலி முகாமைத்துவம், IDB இனால் Dialog Enterprise உடன் இணைந்து SMEs களை டிஜிட்டல்மயமாக்கல். "செல்வந்த நாடொன்றுக்கான ஒரு வழிகாட்டல்" (Guide for a Wealthy Nation) என்ற சிற்றேட்டை வெளியிடுதல், ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகளுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான வர்த்தகக் கண்காட்சி வசதிகளை வழங்குதல். மேலும், புதிய கைத்தொழில்களை முன்னேற்றுவதற்காக மேலும் பல ஒழுங்கமைப்புகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களில் ஈடுபட்டு இன்னும் பல சிறப்பான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இது தவிர, இலங்கையில் திறந்த பொருளாதாரத்தை அமுல்படுத்த முன்னர் கைத்தொழில் அபிவிருத்தியின் நிலை மற்றும் உற்பத்திக் கைத்தொழில்களின் போக்கை மாற்றுதல் ஏற்றுமதி குறைவடைவதற்கும்

இறக்குமதி அதிகரிப்பதற்கும் காரணமாக அமைந்தது. அது, இந்நாட்டின் பொருளாதாரத்தைப் பாதித்துள்ளதாக கைத்தொழில் அமைச்சர் சுட்டிக் காட்டினார். அதேபோல் “Get Up – Start Up for a Wealthy Nation” என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தேசிய உற்பத்தி அதிகரிப்புடன் இறக்குமதிப் பதிலீட்டு உற்பத்திகளும் அதிகரிக்கும். இறக்குமதியைக் குறைப்பதன் மூலம் ஏற்றுமதி அபிவிருத்தியை பலப்படுத்துவதற்கு பாடசாலை முயற்சியாண்மை வட்டங்களிலிருந்து சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் உள்ளிட்ட அனைத்து தொழில்முயற்சியாளர்களும் உள்ளடங்கும் வகையில் முழுதுமளாவிய சமூகம் வலுவூட்டப்படுகிறது.

மாலைதீவு, இந்தோனேசியா, எகிப்து, நேபாளம், ஈரான் முதலான நாடுகளின் உயர்ஸ்தானிகர்களும் தூதுவர்களும், இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, மேலதிக செயலாளர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலகப்பெரும, அரச மற்றும் அரசல்லாத அமைப்புக்களின் அதிகாரிகள், சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஒழுங்கமைப்புக்களின் அதிகாரிகள் அடங்கலாக சிறப்பதிதிகள் பலரும் கலந்து இந்நிகழ்வில் கொண்டனர்.

## 3.7 கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்



*மூலம் : கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் (IDB), இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. அதன் மூலம் தொழில்முயற்சியொன்றின் நடவடிக்கைகள் மற்றும் தொடர்ச்சியின் (contiuity) மீது தாக்கம் செலுத்தும் தொழில்முயற்சி சார்ந்த இடர்களைக் குறைப்பதற்கு கைத்தொழில் பிரிவிற்கு காப்புறுதி உத்தரவாதமொன்றை வழங்குவதன் மீது முக்கிய கவனம் ஈர்க்கப்பட்டுள்ள. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கைத்தொழில்கள் சார்ந்த கைத்தொழில் பிரிவிற்கமைய காப்புறுதிப் பொதியை (Insurance Package) வழங்கும். கைத்தொழில் அபிவிருத்தியின் முன்னோக்கிய பாதை மற்றும் இலங்கையில் முயற்சியாண்மைக் கலாசாரமொன்றை ஆரம்பிப்பது எவ்வாறு என்ற பரப்பில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலகப்பெரும அவர்கள் விளக்கமளித்தார். IDB இன் பணிப்பாளர் நாயகம் திரு. பீ.எல்.யூ. ரத்னமலல அவர்கள், பிரதிப் பொது முகாமையாளர் திரு. மஹேஷ் கமகே அவர்கள், வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## 3.8 கனிய வளங்கள் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்



*மூலம் : கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

இலங்கையில் கனிய வளங்கள் சார்ந்த கைத்தொழில்களை முன்னேற்றும் நோக்கில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட பிரிவுகளை அறிவூட்டும் மாநாடொன்று கொழும்பில் நடைபெற்றது. கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எல்.சீ.பத்திராஜ, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் வைத்தியர் சாரங்க அலகப்பெரும, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் நாயகம் திரு. பீ.எல்.யூ.ரத்னமலல, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் ஆர்.சஜீவன், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. சுரேஷ் த மெல், வரையறுக்கப்பட்ட இலங்கை கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி உதேனி தஸநாயக்க உள்ளிட்ட சிறப்பதிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். கனிய வளங்களுக்கு கூடிய பெறுமதி சேர்க்கும் திறன் மற்றும் இந்நாட்டின் குறிப்பிட்ட கைத்தொழில் பிரிவினரின் அறிவை மேம்படுத்தும் தேவை குறித்து IDB இன் தவிசாளர் இங்கு விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கலாநிதி எல்.பீ.எஸ்.ரோஹித்த, எச்.ஆர்.பரணவிதான ஆகியோரினால் ''மைக்காவிற்கு பெறுமதிசேர்க்கப்பட்ட கைத்தொழில் செயலி'' (Value Added Industrial Application of Mica) மற்றும் ''படிகத்திற்கு பெறுமதிசேர்க்கப்பட்ட கைத்தொழில் செயலி'' (Value Added Industrial Application of Quartz) என்ற தொழில்நுட்ப சேவைப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட இரு புத்தகங்கள் வெளியிடப்பட்டன. கருத்தரங்கு முழுவதிலும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு பயன்படுத்தக்கூடிய கனிய வகைகளும் இலங்கையில் உற்பத்திசெய்யக்கூடிய முடிவுப் பொருள்களும் பற்றி விசேடமாக அறிவூட்டப்பட்டது.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் (கனிய அளவைகள்) திரு. நலின் த சில்வா, தம்ஸில ரிஸோஸஸ் தனியார் கம்பனியின் தலைவர் கலாநிதி சந்துன் தல்பதாது, பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலைப் பேராசிரியர் கலாநிதி எல்.பீ.எஸ்.ரோஹித்த, எம்.எம்.ரீ.ஜீ.பிட்டிவல மற்றும் கனியம் சார்ந்த கைத்தொழில்கள்சார் நிபுணரொருவரான திரு. ரயன் ரொக்வுட் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் நிறைவில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை மத்திய வங்கி, தேசிய பெறுகைத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் சிரேட்ட அதிகாரிகளுடன் துறையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக திறந்த கலந்துரையாடலொன்றில் ஈடுபடுவதற்கு இதில் கலந்துகொண்டோருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

### 3.9 பௌதிக ரீதியான முன்னேற்றம் - 2022

நிறுவனத்திற்கு வாய்ப்பான முறையில் முடிவெடுப்பதில் முகாமையாளர்களைத் தூண்டுவதற்கு செயலாற்றுகை அளவீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகையால், சிறந்த செயலாற்றுகை அளவீட்டுத் தொழில்நுட்பமொன்று இருப்பதன் முக்கியத்துவமானது யதார்த்தமானதும் நம்பகமானதுமான இலக்கொன்று காணப்படுவதாகும். பிரதான சேவை - நெகிழ்வுப்பாங்கான நிறுவனமொன்றாக கைத்தொழில் அபிவிருத்திச் சபை, நிறுவனத்தின் பலத்தைக் கவனத்திலெடுத்து வரவு, செலவு மற்றும் நீண்டகால சொத்துக்களின் பெறுகை மற்றும் ஏனைய மூலவாய்ப்புவளமுள்ள காரணிகள் போன்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணிகளைப் பயன்படுத்தி முகாமையாளர்களுக்கான கருத்திட்ட இலக்குகளும், பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளும் (KPIs) தயாரிக்கப்பட்டுள்ளன.

**3.9.1 அட்டவணை: தற்போது அமுல்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்**

| இல. | கருத்திட்டம் | ஒதுக்கீடு ரூபா மில்லியன் | செலவு ரூபா மில்லியன் | நிதிசார் முன்னேற்றம் (%) | பௌதிக ரீதியான முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| 01 | IDB இல் கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைத்தலும் நவீனமயப்படுத்தலும் | 25 | 17 | 68 | 75 |

**அட்டவணை 3.9.2 : பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| விபரம் | 2022 | |
|---|---|---|
| | நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
| தொழில்நுட்பப் பரிமாற்று மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 317 | 5315 |

**அட்டவணை 3.9.2 : IDB இன் முக்கிய செயற்பாடுகளின் முன்னேற்றம்**

| இல. | செயற்பாடு | முன்னேற்றம் (2022.12.31 இல் உள்ளவாறான) |
|---|---|---|
| 01 | புதிய கைத்தொழில்களை உருவாக்குவதற்கு உதவியளித்தல் | 164 |
| 02 | தற்போதுள்ள கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கு உதவியளித்தல் | 460 |
| 03 | தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 403 |
| 04 | தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 14 |
| 05 | உலோகம்சார் கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருளாக உலோக மீந்த பாகங்களை வழங்குதல் | 1392 மெட்ரிக் தொன் |


| | | |
|---|---|---|
| 06 | இறப்பர் உற்பத்திக் கைத்தொழிலுக்கு இறப்பர் சேர்மானங்களை வழங்குதல் | 28841 கி.கிரா. |
| 07 | உணவுப்பொருள் ஆய்வுகூடம் ஊடாக் உணவுப் பரிசோதனை அறிக்கைகளை விநியோகித்தல் | 314 (தொழில்முனைவோர்) |
| 08 | லக்கம் சந்தைப்படுத்தல் நிலையம் ஊடாக சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் | 330 (தொழில்முனைவோர்) |
| 09 | இயந்திர உபகரணங்களை செய்துருவாக்கல், மதிப்பீட்டு அறிக்கைகள், CNC வசதிகள் முதலியவற்றுக்காக பொறியியல் சேவைகளை வழங்குதல் | 241 (தொழில்முனைவோர்) |

உற்பத்தி, விற்பனை, சந்தைப்படுத்தல், உழைப்பைப் பயன்படுத்தல், செலவுகள் சம்பந்தப்பட்ட தரவுகளை குறித்துக்கொள்வதானது நிறுவனத்தில் தற்போது சிறப்பாக இயங்கும் துறைகளும் கூடுதல் கவனம் கிடைக்க வேண்டிய துறைகளும் எவை என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவும். மறுகோணத்தில் நிறுவனம்சார் முன்னேற்றத்தை மீளாய்வுசெய்வது ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு உதவும். நிறுவனத்தின் இலக்கிட்ட செயற்பாடுகளில் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யும் போது ஊழியர்களுக்கு கம்பனியின் வெற்றிநிலைக்காக அவர்களின் பங்களிப்பு குறித்த கருத்தொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன், அது கூடுதல் தொழில் திருப்திக்கும் காரணமாக அமையும். ஊழியர்களுக்கு நம்பகமான இலக்குகளை வழங்குதல், முடிவுகளை அளவிடுதல், அவற்றை பணியாட்குழுவுக்கு நாளாந்தம் தொடர்பாடல் செய்தல் சிறப்பாக இயங்கும் அல்லது தானாகவே இயங்கும் ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு உதவும். இத்தகைய உந்துகையானது பணியாட்குழுவை நீண்டகாலம் வேலை செய்யத் தூண்டுதல், முன்னேற்றுவதற்கான மார்க்கங்களை கலந்துரையாடுதல், விளைதிறனை முன்னேற்றுவதற்கு தீர்வுகளை முன்வைப்பதைத் தாண்டிச் செல்லும்.

**அட்டவணை 3.9.4 : நிறுவனத்தின் செயல்திறன் குறிகாட்டிகள்**
**(செயல் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டது)**

| இல. | பெறுபேறு | செயல்திறன் குறிகாட்டிகள் (KPIs) | திரண்ட | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு |
| 1 | நிறுவப்பட்ட புதிய கைத்தொழில்கள் (தொடக்கநிலை) | நிறுவப்பட்ட புதிய கைத்தொழில்களின் எண்ணிக்கை (தொடக்கநிலை) | 300 | 153 |
| 2 | தற்போதுள்ள கைத்தொழில்களை முன்னேற்றுதல் | முன்னேற்றிய தற்போதுள்ள கைத்தொழில்களின் எண்ணிக்கை | 700 | 452 |
| 3 | நிறுவப்பட்ட/ முன்னேற்றிய நுண்பாகக் கைத்தொழில்கள் | நிறுவப்பட்ட/ முன்னேற்றிய நுண்பாகக் கைத்தொழில்களின் எண்ணிக்கை | 500 | 533 |

### வரைபு 3.9.1 : IDB பெறுபேறுகளின் பொழிப்பு - 2022




கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் இந்நாட்டின் வர்த்தக சமூகத்தை ஊக்குவிப்பதற்கு 2022 ஆம் ஆண்டில் பல்வேறு உதவி மற்றும் ஆதரவுச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை (MSMEs) மேம்படுத்துவதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பில் மூலோபாயங்களைத் திட்டமிடுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் சபை கடப்பட்டுள்ளது. இந்நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக மூலவாய்ப்புவளமுள்ள தொழில்முயற்சிகளுக்காக சந்தையை விஸ்தரிப்பதற்கு IDB அமைச்சுடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கிறது. செலவுகள், விற்பனைகள் அல்லது இலாபங்கள் போன்ற துறைகளில் ஆகக் குறைந்த பெறுபேறுகளை நோக்குவதன் மூலம் எமக்கு அத்தகைய பெறுபேறுகள் எவ்வாறு அல்லது ஏன் கிடைத்துள்ளன? எமது செயலாற்றுகையை முன்னேற்றுவது எவ்வாறு என்பதைப் புரிந்துகொள்வதற்கு உதவாது. ஆண்டின் இறுதிப் பெறுபேறுகள் அத்தியாவசியமாக சுட்டிக்காட்டாத துறைகளில் இலக்குகளை அமைப்பதும் முன்னேற்றத்தை அளவிடுவதும் இலாபத்தின் அடுக்குக்குறி வளர்ச்சிக்கு (exponential growth) துண்டுதளிக்கும் ஏராளமான துறைகளில் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு துணை வரும்.

### அட்டவணை 3.9.5 : முன்னேற்றப் பொழிப்பு - 2022

| இல. | முக்கிய செயற்பாடு | துணைச் செயற்பாடுகள் | செயல்திறன் குறிகாட்டி | திரண்ட இலக்கு | திரண்ட அடைவு |
|---|---|---|---|---|---|
| 01 | கைத்தொழில் தேவைப்பாடு களை மதிப்பீடு செய்தல் (மாவட்ட வாரியாக) | முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | நடத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை | 25 | 4 |
| | | | பங்குபற்றிய தொழில்முனைவோரின் எண்ணிக்கை | 1500 | 156 |
| | | வேறு பிரிவுகள் மூலம் அடையாளங்கண்ட/ பயிற்றப்பட்ட கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல் | அடையாளம் கண்ட/ பயிற்றப்பட்டுள்ள கைத்தொழில்களின் எண்ணிக்கை | 125 | 77 |
| | | கைத்தொழில்களைத் தெரிவுசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் - புதிய/ தற்போதுள்ள/ நுண்பாக கைத்தொழில்கள் | அடையாளம் கண்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | 1600 | 2692 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 02 | தொழில் முயற்சி பற்றிய அறிவை முன்னேற்றுதல் | குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் (சந்தைப்படுத்தல், தொழில்நுட்ப, முகாமைத்துவ, விளைதிறன், பொதியாக்கல் முதலான) | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 406 | 403 |
| | | | உதவியளித்த தொழில்முனைவோரின்/ கைத்தொழில்களின் எண்ணிக்கை | 6305 | 7704 |
| | | கைத்தொழில் சான்றிதழ் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல் (தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல்) | நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | 7 | 14 |
| | | | பயிற்றப்பட்ட தொழில்முனைவோரின்/ கைத்தொழில்களின் எண்ணிக்கை | 124 | 247 |
| | | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களை அடைந்துகொள்ளலும் விநியோகித்தலும் | அடைந்துகொண்ட அத்துடன்/ அல்லது விநியோகிக்கப் பட்ட தொழில் நுட்பங்களின் எண்ணிக்கை | 5 | 6 |
| 03 | கைத்தொழில் உதவியையும் ஆலோசனை யையும் வழங்குவதன் மூலம் வாய்ப்பான சூழலொன்றை உருவாக்குதல் | பொறியியல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் - புதிய/ தற்போதுள்ள/ நுண்பாக கைத்தொழில்கள் | அடையாளம் காணப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | 850 | 684 |
| | | இறப்பர் சார்ந்த உற்பத்திகள் மற்றும் உற்பத்திச் செயன்முறையின் பண்புத்தரத்தை அதிகரித்தல் பற்றிய மதியுரை | உற்பத்திகளின் எண்ணிக்கை | 3 | 8 |
| | | - கழிவுப்பொருள்களைக் குறைத்தல்<br>- கழிவுப்பொருள் மீள்சுழற்சி<br>- எரிசக்தி பேணலுக்கான உற்பத்தி மார்க்கங்களை அபிவிருத்தி செய்வதில் உதவுதல் | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 4 | - |
| | | உள்நாட்டு இறப்பர் பெருந்தோட்டத் துறையினரின் இயற்கை இறப்பருக்கு பெறுமதி சேர்த்தல் (MPI உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ்) | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 2 | 2 |
| | | தொழில்முனைவோருக்கு/ நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் தகவல்களை வழங்குதல் | தொழில்முனைவோரின்/ நிறுவனங்களின் எண்ணிக்கை | 12 | 26 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சிவில் பொறியியல்சார் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் | பூர்த்திசெய்த சேவைகளின் எண்ணிக்கை | 150 | 113 |
| | | மின் பொறியியல்சார் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் | பூர்த்திசெய்த சேவைகளின் எண்ணிக்கை | 100 | 91 |
| | | கருத்திட்டங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 2 | 3 |
| | | உலோகக் கைத்தொழில் அபிவிருத்தியும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்திக்கு பெறுமதிசேர்த்தலை அபிவிருத்தி செய்வதற்கான பொறியியல்சார் உதவியும் | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 6 | - |
| 04 | மூலப் பொருள்களை வழங்குவதன் ஊடாக வழங்கற் சங்கிலியைப் பலப் படுத்துவதும் தராதார நியமங்களை முன்னேற்றுதலும் | கித்துள் சீவுவதற்கான கெஸ்பர் போத்தல்களின் விற்பனை | விற்பனைசெய்த போத்தல்களின் எண்ணிக்கை | 5000 | 2544 |
| | | வார்ப்படக் கைத்தொழிலுக்கான மூலப்பொருள்களை வழங்குதல் | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 400 | 387 |
| | | | அளவு (MT) | 2000 | 1114 |
| | | பகுதியளவு வர்த்தக செயற்பாடுகள் (உலர்ந்த இறப்பர்) | அளவு (kg) | 36000 | 28841 |
| 05 | உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தை இருப்பை பலப்படுத்துவதற்கு உதவுதல் | வியாபாரக் குறியிடல், பொதியிடல்/ லேபலிடல்/ கட்டாயமான சான்றுறுதிப்படுத்தல்கள், பதிவுகள், வாடிக்கையாளர் தர நியமங்கள்/ சுங்க மற்றும் தீர்வை வரிகள்/ கடல் மற்றும் வான் பண்டப் போக்குவரத்து/ ஏற்றுமதித் திட்டமிடலும் புரபோர்மா இன்வொயிஸ் முதலியவற்றுக்காக சந்தைப்படுத்துதல் உதவியை வழங்குதல் - புதிய/ தற்போதுள்ள/ நுண்பாகக் கைத்தொழில்கள் | உதவியளிக்கப் பட்டவற்றின் எண்ணிக்கை | 675 | 1480 |
| | | ‘லக்கம்’ காட்சிக்கூடங்கள் ஊடாக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல் | கைத்தொழில்களின் எண்ணிக்கை/ வழங்கப்பட்டுள்ள வாய்ப்புகளின் எண்ணிக்கை | 20 | 9 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 06 | தொழில் முயற்சிகளின் போட்டி நிலையை முன்னேற்றுவதற்கு வசதியளித்தல் | மனித, நிதி மற்றும் பௌதிக வளங்களின் மூலோபாயத் திட்டங்கள், தீர்மானம் எடுத்தல், ஏற்பாடுசெய்தல், தலைமைத்துவம் வழங்குல், உந்துகை மற்றும் கட்டுப்பாடு/வினைத்திறனை அதிகரிக்கும் செயன்முறையில் உதவியளித்தல் - புதிய/ தற்போதுள்ள/ நுண்பாக கைத்தொழில்கள் | உதவி அளிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | 500 | 374 |
| | | தொழில்முயற்சி உரிமையாளர்களுக்கு முகாமைத்துவத் திறன்களை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டம் | நடாத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை | 5 | 1 |
| | | | தொழில்முயற்சி உரிமையாளர்களின் எண்ணிக்கை | 150 | 35 |
| 07 | நிதிய அல்லது வேறு நோக்கங்களுக்காக தொழில் முயற்சி அறிக்கைகளை அபிவிருத்தி செய்தல் | விலைமதிப்பீட்டு அறிக்கைகள், கருத்திட்ட சாத்தியவள அறிக்கைகள், உற்பத்திச் சான்றிதழ்கள், பரிசோதனை அறிக்கைகள், தொழில்நுட்ப அறிக்கைகள்/ கைந்நூல்கள் என்பவற்றைச் சோதனையிடுதல், பரிசோதித்தல் மற்றும் தயாரித்தல். | அறிக்கைகளின் எண்ணிக்கை | 355 | 127 |
| | | கைத்தொழில் அபிவிருத்தித் துறைகளை அடையாளம் காணலும் வெளி நிதியங்களுக்கு (வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு) கருத்திட்டப் பிரேரணைகளை/ கருத்துருத் தாள்களைத் தயாரித்தலும். | தயாரிக்கப்பட்ட/ சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளின்/ கருத்துருத் தாள்களின் எண்ணிக்கை | 43 | 17 |
| | | ஆண்டறிக்கையைத் தயாரித்தல் | தயாரித்த அறிக்கைகளின் எண்ணிக்கை | 1 | 1 |
| | | IDB இன் வருடாந்த செயல்திட்டத்தையும் பெறுகைத் திட்டத்தையும் தயாரித்தல் | தயாரித்த அறிக்கைகளின் எண்ணிக்கை | 2 | 2 |
| | | மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் பின் வருடாந்த மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல் | தயாரித்த மாதாந்த முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை | 12 | 12 |
| | | | தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் எண்ணிக்கை | 1 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 08 | உள்நாட்டு மற்றும் உலகளாவிய நியமங் களுடன் தொழில் முயற்சி இசைவை முன்னேற்றுவதற்கு வசதி அளித்தல். | கைத்தொழில்களில் காணப்படும் சட்டவிதிகளுடன் இயைபாக்குவதற்கு வசதியளித்தலும் உதவுதலும் (தொழில்முயற்சிகளைப் பதிவு செய்தலும் உரிமங்களையும் அனுமதிப் பத்திரங்களையும் வழங்குதலும்/ புதுப்பித்தலும், தொழிற்சட்டங்கள், வரிப் பதிவு, சுங்க ஆவணங்கள், புலமைச் சொத்து சட்டம் முதலானவை) புதிய/ தற்போதுள்ள/ நுண்பாக கைத்தொழில்கள் | உதவியளித்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | 1300 | 674 |
| | | பின்னாய்வு உதவியை வழங்குதல் | பின்னாய்வுகளின் எண்ணிக்கை | 5000 | 833 |
| | | கைத்தொழிலாளர்களுக்கு பதனிடல் வசதிகளை வழங்குதல் | வசதியளிக்கும் கைத்தொழில்களின் எண்ணிக்கை | 120 | 144 |
| | | பட்டக் கல்வி பயிலுநர்கள்/ NAITA பயிலுநர்களுக்கு பயிற்சியளித்தல் | பயிற்சிபெறுநர்களின் எண்ணிக்கை | 12 | 12 |
| | | கைத்தொழில் தேவைப்பாடுகளுக்கான பொறிமுறை, செய்துருவாக்கல், வெப்பப் பரிகரிப்பு வார்ப்படஞ்செய்தல், மின் உலோக முலாமிடல், CNC இயந்திர உபகரணங்கள் சேவை, காய்ச்சி ஒட்டுதல் வேலைகள் போன்ற பொறியியல் சேவைகளை வழங்குதல். | வழங்கப்பட்டுள்ள சேவைகளின் எண்ணிக்கை/ உதவிய கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 426 | 512 |
| | | ஏனைய கைத்தொழில்களுக்கு கலப்பு வார்ப்படப் பொருள்களையும் ஏனைய பொருள்களையும் வழங்குதல் | வழங்கப்பட்டுள்ள சேவைகளின் எண்ணிக்கை/ உதவியளித்த கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 120 | 148 |
| | | புதிய இயந்திர சாதனங்களையும் சாதனங்களையும் திட்டமிடுதலும் தயாரித்தலும் | உருவாக்கப்பட்டுள்ள பொறிகள் மற்றும் சாதனங்களின் எண்ணிக்கை | 4 | - |
| | | தகவல்களை வழங்குதல்/ பரப்புதல் | தகவல்களை வழங்கிய நபர்களின் எண்ணிக்கை | 300 | 526 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | "கைத்தொழில்" சஞ்சிகையை வெளியிடுதல் | தொகுதிகளின் எண்ணிக்கை | 200 | 50 |
| | | கைத்தொழிற் பேட்டைகளின் ஒருங்கிணைந்த தரவுத்தளமொன்றை முன்னேற்றுதலும் IDB இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்தலும் | முன்னேற்றிய கைத்தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை | 15 | 1 |
| 09 | கைத்தொழில்களின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்துதல் | தற்போதைய கைத்தொழிற் பேட்டைகளை நவீனமயப்படுத்தலும் முன்னேற்றுதலும் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதலும் கைத்தொழிற் பேட்டைகளை மேலும் அபிவிருத்தி செய்தலும் | முன்னேற்றப்பட்ட மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட கைத்தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை | 8 | - |
| | | பொத்தபிட்டிய கைத்தொழிற் பேட்டையின் உரித்தை கையகப்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும் | உரித்தை கையகப்படுத்திய பின் அபிவிருத்தி செய்யப்பட்ட கைத்தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை | 1 | - |
| | | மிகிந்தலையிலுள்ள கைத்தொழிற் பேட்டையை விஸ்தரிப்பதற்காக அருகிலுள்ள காணிகளை அடையாளம் கண்டு அபிவிருத்திசெய்தல் | அபிவிருத்தி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் | 5 | - |
| | | ஒவ்வொரு கைத்தொழிற் பேட்டையின் கைத்தொழில்களுக்கான காணிகளை அடையாளம் காணல், தெரிவுசெய்தல், ஒதுக்குதல். | ஒதுக்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | 30 | 33 |
| | | தெரிவுசெய்யப்பட்ட முதலீட்டாளர்களுடன் அவர்களின் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக அபிவிருத்தி செய்யப்பட்ட காணித் துண்டுகள்/ கட்டிடங்களின் சட்டபூர்வ ஆவணங்களில் கையொப்பமிடல் | புதிதாக நிறுவப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | 10 | 11 |
| | | | அபிவிருத்தி செய்யப்பட்ட தற்போதுள்ள கைத்தொழில்களின் எண்ணிக்கை | 10 | 8 |
| | | | உருவாக்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை | 500 | 356 |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சட்டரீதியான நடவடிக்கைகள் மூலம் அல்லது அவர்களின் விருப்புடன் தோல்வியடைந்த கைத்தொழில்களை கையகப்படுத்திக் கொள்ளலும் தகுந்த முதலீட்டாளர்களுக்கு ஒப்படைத்தலும் | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 10 | 16 |
| | | புதிய கைத்தொழிலாளர்களுக்கு குத்தகை ஒப்பந்தங்களை வழங்குதல் | வழங்கப்பட்ட குத்தகை ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | 20 | 20 |
| 10 | நிறுவனத்தின் சிபார்சுகளுடன் அனுமதித்தல் | நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான சிபார்சுகள் - புதிய/ தற்போதுள்ள/ நுண்பாக கைத்தொழில்கள் | பெற்றுக்கொண்ட வசதிகளின் எண்ணிக்கை | 425 | 227 |
| | | சுதேச கைத்தொழில்களினால் பயன்படுத்தப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளையும் கழிவுப்பொருள்களையும் ஏற்றுமதியாளர்கள் பரிசோதித்தலும் சோதனையிடுதலும் சிபார்சுக் கடிதங்களை வழங்குதலும். | வழங்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 24 | 7 |
| | | இடைநிறுத்தப்பட்ட, தற்காலிகமாக இடைநிறுத்தப்படட தொகுதியின் கைத்தொழில் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு பரிசோதித்தலும் சோதனையிடுதலும் சிபார்சுக் கடிதம் வழங்குதலும். | வழங்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 6 | - |
| | | கைத்தொழில்களுக்கு வசதியளிப்பதற்காக மூலவாய்ப்புவளமுள்ள சர்வதேச ஒழுங்கமைப்புகளுடனும் அவர்களின் இலங்கை பங்காளர்களுடனும் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல். | சர்வதேச ஒழுங்கமைப்புகளுடன் கட்டியெழுப்பிய தொடர்புகளின் எண்ணிக்கை | 5 | 3 |
| | | குத்தகை உரிமையை அடகுவைக்க வாய்ப்பளிப்பதன் மூலம் கைத்தொழிலாளர்களுக்கு கடன் வசதி பெற்றுக்கொள்ள உதவுதல் | அவ்வாறு உதவப்பட்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 10 | 7 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | மாதிரிப்பொருள் பரிசோதனைகளுக்காக ஆய்வுகூட வசதிகளை வழங்குதல். | இறப்பர் உற்பத்திகளுக்கான தரச் சான்றுப்படுத்தலும் செயன்முறைகளின் அபிவிருத்தியும் | அறிக்கைகளின் எண்ணிக்கை | 120 | 150 |
| | | உலோகங்களின் இரசாயன மற்றும் பொறிமுறைசார் பண்புகளுக்கான பரிசோதனை அறிக்கைகளை சோதனையிடுதலும் பரிசோதித்தலும் வழங்குதலும் | வெளியிடப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 50 | 82 |
| | | உணவுப்பொருள் ஆய்வுகூட சோதனைகளை மேற்கொள்ளல் | சோதனை அறிக்கைகளின் எண்ணிக்கை | 600 | 314 |
| 12 | ஏனைய நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு | வேறு நிறுவனங்களினால் ஒழுங்குசெய்யப்படும் வர்த்தக சந்தைகளிலும் கண்காட்சிகளிலும் கலந்துகொள்ளல் | பங்குபற்றிய வர்த்தக சந்தைகளின்/ கண்காட்சிகளின் எண்ணிக்கை | 4 | - |
| | | உப ஒப்பந்த வசதி அளித்தல் | வசதியளிக்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | 20 | 2 |
| | | தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில் துறைகளுக்காக கொள்வனவாளர்-விற்பனைக் கூட்டங்களை நடாத்துதல் | நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | 4 | 1 |
| | | | கலந்துகொண்ட தொழில்முனைவோரின் எண்ணிக்கை | 40 | - |
| | | ஒதுக்கப்பட்ட உலோகங்களை அடிப்படையாகக்கொண்ட மூலப்பொருள் கைத்தொழில்களுக்கு ஒப்படைத்தல் | விநியோகிக்கப்பட்ட மெட்ரிக் தொன்களின் (MT) எண்ணிக்கை | 1000 | 3559 |
| | | NVQ சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளித்தல் | வசதியளிக்கப்பட்ட தொழில்முனைவோரின் எண்ணிக்கை | 10 | 18 |
| 13 | விசேட கைத்தொழில் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட செயற்பாடுகள் | SME clinics/ SME வாரங்களை ஒழுங்குசெய்தல் | நடாத்தப்பட்ட SME clinics/ SME வாரங்களின் எண்ணிக்கை | 25 | 4 |
| | | இலங்கை கைத்தொழில் கண்காட்சியை ஒழுங்குசெய்தலும் அதிசிறப்பான தொழில்முனைவோரைப் பாராட்டுதலும் தெரிவுசெய்தவர்களுக்கு தேசிய விருது வழங்கும் விழாவை நடாத்துதலும். | நடாத்தப்பட்ட கண்காட்சிகளதும் விருது வழங்கல் விழாக்களதும் எண்ணிக்கை | 1 | 1 |
| | | மாகாண மட்ட கண்காட்சிகளை நடாத்துதல் | நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கை | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | விளக்கமான வீடியோ பக்கத்தோற்றமொன்றை உருவாக்குவதற்காக தொழில்முனைவோரின் வர்த்தகநிலையங்களுக்குச் சென்று அவர்களின் வீடியோ சாட்சிகள், தரவுகளை பராமரித்தல். | வீடியோ பக்கத் தோற்றங்களின் எண்ணிக்கை | 2 | - |
| | | பாதணிகள் வர்த்தகக் கண்காட்சியை ஒழுங்குசெய்தலும் நடாத்துதலும் | நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கை | 1 | - |
| | | எமது வாடிக்கையாளருடன் தொடர்பையும் அணுகும் தன்மையையும் வளர்ப்பதற்காக ‘Call IDB’ என்ற செல்லிட செயலியை விருத்தி செய்தல் | மேற்கொண்ட வாடிக்கையாளர் விசாரித்தல்களின் எண்ணிக்கை | 100 | 1 |
| | | கைத்தொழில் உற்பத்திக் கிராமங்களை மேம்படுத்தல் | பயனடைந்த தொழில்முனைவோரின் எண்ணிக்கை | - | - |
| 14 | இறக்குமதிப் பதிலீட்டு உற்பத்திகளும் உற்பத்தியை மேம்படுத்தலும் | உற்பத்தி வணிகமயமாக்கலின்போது கைத்தொழில்களுக்கு வசதியளித்தல். (இறக்குமதிப் பதிலீட்டு) | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 10 | - |
| | | இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களை ஏற்படுத்தல் | கைத்தொழில்களின் எண்ணிக்கை | 5 | 11 |
| | | சுதேச கைத்தொழில்கள்/ அரச நிறுவனங்களுக்கு இயந்திரங்கள்/உபகரணங்கள் உற்பத்தியும் வழங்கலும் (இறக்குமதிப் பதிலீட்டு) | பதலீடு செய்யப்பட்டுள்ள இயந்திர சாதனங்கள்/ உபகரணங்களின் எண்ணிக்கை | 80 | - |
| 15 | கைத்தொழிற் பேட்டைகளின் அடிப்படை பயன்பாட்டுச் சேவைகளை உறுதிப் படுத்தலும் சம்பந்தப்பட்ட உற்பத்தி வசதிகளைப் பேணிச் செல்லலும் | மாதாந்த வாடகை மற்றும் கட்டணங்களை சேகரித்தல் | ஈட்டிய வருமானம் - வாடகை (ரூ.மி.) | 60 | |
| | | | ஈட்டிய வருமானம் - நீர்க் கட்டணம் (ரூ.மி.) | 6 | - |
| | | | ஈட்டிய வருமானம்- குத்தகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் (ரூ.மி.) | 20 | - |
| | | | | 0.8 | - |
| | | | காணி விலைமதிப்பீட்டுக் கட்டணங்கள் (மாற்றல்) (ரூ.மி.) | 2.5 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கடன் சேகரிப்பு | நிலுவைத் தொகைகளையும் ஏனைய அறவிடற்பாலவற்றையும் சேகரித்தல் (ரூ.மி.) | 20 | - |
| | | | ஈட்டிய வருமானம் - கைத்தொழிற் பேட்டைகளைப் பராமரிப்பதற்கு சுழல் நிதியமொன்றை நிறுவுதல் | 12 | - |
| 16 | உணவு ஆய்வுகூட வசதிகளை முன்னேற்றுதல் | உள்ளக கட்டுமானங்கள்/ வசதிகளின் அபிவிருத்தியும் தரச் சான்றுப்படுத்தல் செயன்முறையும் | தரச் சான்றிதழ்களின் அபிவிருத்தி % | | 100 |
| 17 | பெறுகைத் திட்டம் | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் முன்னேற்றலும் | செலவு நிலை % | | 77 |
| | | மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல் | செலவு நிலை % | | 105 |
| | | அபிவிருத்திச் செலவுகள் | செலவு நிலை % | | 47 |

### 3.10 பிரிவுகளின் வருமானப் பரம்பலை வரைபு ரீதியாகக் காட்டல்




இந்நாட்டின் பொருளாதாரம் பற்றி எடுத்து நோக்கின், வரலாற்றில் ஒரு திருப்புகட்டமாக 2022 ஆம் ஆண்டு அமைந்தது. இருப்பினும், பல சிரமங்களுக்கு மத்தியிலும் நடுத்தர பொருளாதார நிலையொன்று மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது. உலக பொருளாதார பின்னடைவைப் பொருட்படுத்தாமல், இலங்கைப் பொருளாதாரம் அதன் முன்னெடுப்புகளினுள் சுபீட்சமடைந்ததுடன், வேகமாக வளரும் பொருளாதாரங்களில் ஒன்றாக எழுந்தது. இது, இந்நாட்டின் முழுதுமளாவிய நிறுவனங்கள் மீது பாதிப்புச் செலுத்தியுள்ளதுடன், முக்கிய சேவைகளை இலக்காகக்கொண்ட நிறுவனமொன்றாக IDB இந்தக் காலப்பகுதியில் பல்வேறு அபிவிருத்திச் செயன்முனைப்புகளை மேற்கொள்ளத் துணிந்தது. அவற்றின் பெறுபேறுகள் முழு நிறுவன செயலாற்றுகையில் கவர்ச்சிகரமான விகிதங்களாக பிரதிபலித்தது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொலைநோக்கை அடைந்துகொள்வதற்கு முயற்சிக்கும்போது, இலங்கையின் கைத்தொழில்களின் மேம்பாடு, ஊக்குவிப்பு, அபிவிருத்தி, வசதியளிப்பு என்பன முக்கிய செயற்பொறுப்பாக அமையும். இன்று அது பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அரச துறைகளின் அனைத்துக் கைத்தொழில் முயற்சிகளின் உரிய ஒருங்கிணைப்பொன்றுக்கும் இடைத்தொடர்புடைய

வளர்ச்சிக்கும் உதவுமுகமாக பல்வேறு சேவைகளை வழங்குகிறது. கைத்தொழில் பிரிவை ஊக்குவித்தலும் வலுவூட்டுதலும் எந்தவொரு நாட்டிலும் நீண்டகால வெற்றிநிலையை அடைந்து கொள்வதற்கு இன்றியமையாத ஒரு காரணியாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் எமது உற்பத்திகளின் போட்டிநிலையைப் பேணுவதற்காக உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றுதல், கிரயத்தைக் குறைத்தல், விளைதிறனை அதிகரித்தல், வர்த்தகக் குறியின் பெறுமதியை அதிகரித்தல் என்பன மிக மிக முக்கியமானவையாகும். தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கான மூலோபாய ரீதியான முக்கியத்துவம் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை ஊக்குவிப்பதன் மீதும் மேம்படுத்துவதன் மீதும் IDB இன் முழுதுமளாவிய முயற்சிகள் முக்கியமாக இலக்கிடப்பட்டுள்ளன. மேற்குறித்த விடயங்களின் அடிப்படையில் கடந்தாண்டில் IDB இன் நிறுவன கலாசாரத்தில் பெரிதும் தேவைப்படுத்தப்பட்ட மறுசீரமைப்பை மேற்கொள்வது எமது மிக முக்கிய முன்னுரிமையாக இருந்தது. ஆகையால், IDB நீண்டகால நோக்கங்களை உள்ளடக்குவதற்கும் செயற்பாட்டு வினைத்திறனையும் நிதிசார் சாத்தியவளத்தையும் முன்னேற்றுவதற்கும் மூலோபாய ரீதியான மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள், நிருவாக மற்றும் நிதித்துறைகள் உள்ளிட்ட செயற்பாட்டுப் பிரிவுகள் தவிர IDB இன் அனைத்துப் பிரிவுகளும் கூட்டாக இயங்கின.

IDB இன் அபிவிருத்திப் பிரிவுகளின் ஊடாக ஈட்டப்படும் வருமானத்தை ஒப்பிடும்போது, கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருள்கள்/ பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை வழங்குவதன் மூலம் உயர் ஆண்டு வருமானமொன்றை ஈட்டி சந்தைப்படுத்தல் பிரிவு மிகச் சரியாக அதற்கான பங்களிப்பை நல்கியுள்ளது. IDB என்பது சேவை/ வாடிக்கையாளர் சார்பான நிறுவனமொன்றாக இருந்த போதும், ஒவ்வொரு பணியும் ஊழியரும் வாடிக்கையாளரின் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் வெளிப்படுத்தப்படாத தேவைகளை நிறைவேற்றுவதன் மீது கவனம் செலுத்துகிறது. மேலும், வழங்கப்படும் சேவைகள் பற்றி வாடிக்கையாளர்கள் திருப்தியடைவார்களாயின் மாத்திரம் தாம் வெற்றியடைந்துள்ளதாக IDB திடமாக நம்புவதுடன், நிதிப் பெறுமானங்களின் அடிப்படையில் கூடுதல் கனதியில்லாமல் தமது வாடிக்கையாளர்களுக்காக எடுக்கப்படும் முயற்சிகள் குறித்த ஒவ்வொரு தீர்மானத்தையும் மதிப்பீட்டுக்கு உட்படுத்துகிறது.

## 3.11 2023 ஆம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள்

### (1) ஜா-எல ஏக்கல IDB கைத்தொழிற் பேட்டையின் உற்பத்திக் கைத்தொழில்களின் எரிசக்தி வினைத்திறனை அதிகரிப்பதற்கான முன்னோடிக் கருத்திட்டம் - 2022/2023

கருத்திட்டத்தின் மூலம் கைத்தொழில்களுக்கு பின்வரும் சேவைகள் வழங்கப்படும்:-

அ. விரிந்தளவிலான எரிசக்தி கணக்காய்வுகளின் ஊடாக அவர்களின் எரிசக்தி வினைத்திறனை (மின்சாரம்) முன்னேற்றுவதற்கு இலவசமான ஆலோசனைச் சேவைகள். (தெரிவுசெய்யப்பட்ட பாரியளவு எரிசக்தியுடன்கூடிய கைத்தொழில்களுக்கு)

ஆ. தெரிவுசெய்யப்பட்ட அனைத்துக் கைத்தொழில்களின் உரிய அதிகாரிகளை/ பணியாட்குழு அங்கத்தவர்களை இலவசமாக எரிசக்தி முகாமையாளர்களாக பயிற்றுவித்தல்.

இ. கைத்தொழில்களின் பங்களிப்புடன் எரிசக்தி வினைத்திறன் மாற்றுவழிகளை அமுல்படுத்துவதற்கு இலவச தொழில்நுட்ப ஆலோசனையையும் உதவியையும் வழங்குதல்.

ஈ. எரிசக்திக் கணக்காய்வின் போது சிபார்சுசெய்யப்பட்ட தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கைத்தொழில் அமைச்சின் ஊடாக நிதியுதவி வழங்குவதற்கு உதவுதல்.

உ. முறையான கண்காணிப்புச் சேவைகள்.

### (2) இலங்கையில் கைத்தொழில்களின் காலநிலை மாற்றத் துலங்கலைத் துரிதப்படுத்தல்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, எரிசக்தி, வள வினைத்திறன் தொழில்நுட்பங்கள் மற்றும் நன் நடைமுறைகளை ஈடுபடுத்துவதை துரிதப்படுத்துவதற்கான தொழில்நுட்பம்சார், கொள்கைசார், ஒழுங்குறுத்துகைசார் மற்றும் நிதிசார் கருவிகளையும் பொறிமுறைகளையும் திட்டமிடுதலும் அமுல்படுத்துதலும் ஊடாக இலங்கையின் கைத்தொழில் துறையில் காலநிலை மாற்றத் துலங்கலை அதிகரிப்பது இக்கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

### (3) இலங்கையில் விளைதிறனுடைய பின்னைய அறுவடை முறைமைகளை அமுல்படுத்துவதற்கான கருத்திட்டமொன்றை முன்மொழிதல்

கைத்தொழில் பிரிவை ஊக்குவிப்பதும் வலுவூட்டுதலும் எந்தவொரு நாட்டினதும் நீண்டகால பொருளாதார வெற்றிநிலையை அடைந்துகொள்வதற்கு இன்றியமையாத ஒரு காரணியாகும். 2022 ஆம் ஆண்டில், இந்நாட்டின் வர்த்தக சமூகத்திற்கு பெரும்பாலான துணைநிலைச் சேவைகளை வழங்குவதற்கு IDB இணைந்து கொண்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் எமது உற்பத்திகளின் போட்டிநிலையைப் பேணுவதற்கு உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றுதல், செலவைக் குறைத்தல், விளைதிறனை அதிகரித்தல், வர்த்தகக் குறியின் பெறுமதியை அதிகரித்தல் ஆகியன மிக முக்கியமானவையாகும். தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான மூலோபாய ரீதியான முக்கியத்துவம் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை (SMIs) ஊக்குவிப்பதும் மேம்படுத்துவதும் மீது IDB இன் முக்கிய கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் IDB இன் நிறுவனம்சார் கலாசாரத்தினுள் இன்றியமையாத மறுசீரமைப்புகளை மேற்கொள்வதும், எதிர்காலத்திலும் இப்பரந்தளவிலான பொறுப்புக்கு தோள்கொடுப்பதற்கு IDB ஐத் தயார்படுத்தி, அதற்கு அவசியமான மனித வள நவீனமயப்படுத்தலுக்கு நிறுவனக் கட்டமைப்பை மீளமைப்பது இவ்வாண்டில் எமது மிக முக்கிய முன்னுரிமையாக அமைந்தது.





# (04) பிரிவுகளின் முன்னேற்றம் சிறப்புக்கூறுகள்

**4.1** நிருவாகப் பிரிவு

**4.2** முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவை நிலையம்

**4.3** பொறியியல் பிரிவு

**4.4** கைத்தொழிற் பேட்டைப் பிரிவு

**4.5** சந்தைப்படுத்தல் பிரிவு

**4.6** திட்டமிடல் பிரிவு

**4.7** பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

**4.8** தொழில்நுட்ப சேவைப் பிரிவு

**4.9** தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம்

**4.10** இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம்


# 4.1 நிருவாகப் பிரிவு

## 4.1.1 அறிமுகம்

சபையின் மனிதவள முகாமைத்துவ மற்றும் மனித வள அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தையும் ஏற்பாடு செய்தல், அமுல்படுத்தல், மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றுக்கான பொறுப்பை IDB இன் நிருவாகப் பிரிவு வகிக்கின்றது. மேலும், வியாபார இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கில் அலுவலக அலுவல்களைத் தயார் செய்தல், வகையீடு செய்தல், ஒழுங்கு செய்தல், நிருவகித்தல் இப்பிரிவின் வகிபாகத்தில் அடங்கும். மேலும், நிருவாகப் பிரிவு நிறுவனத்தின் ஒட்டுமொத்த திணைக்களங்களின் வினைத்திறனான செயலாற்றுகையை உறுதிப்படுத்தும் முக்கிய பிரிவுகளில் ஒன்றாகும். ஆட்சேர்ப்பு நடைமுறையையும் (SoR), பதவியுயர்வு நடைமுறையையும் (SoP) தயாரித்தல், முறை சார்ந்த ஆட்சேர்ப்பை மேற்கொள்ளல், செயலாற்றுகை மதிப்பீடு, ஊழியர் ஓய்வுறுத்தல், ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல், உள்நாட்டுப் பயிற்சிகளை ஒழுங்கு செய்தல், ஊழியர் இழப்பீட்டுத் திட்டங்களை முகாமை செய்தல் முதலியன இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மற்றும் சில கருமங்களாகும்.

**அட்டவணை 4.1.1 : பதவியினர் முகாமைத்துவம்**

| வகையீடு | அனுமதித்த பதவியினர் எண்ணிக்கை | தற்போதுள்ள பதவியினர் எண்ணிக்கை | பதவி வெற்றிடங்கள்/ (மேன்மிகைகள்) |
|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 12 | 4 | 8 |
| மூன்றாம்நிலை மட்டம் | 252 | 159 | 93 |
| இரண்டாம்நிலை மட்டம் | 184 | 139 | 45 |
| முதனிலை மட்டம் | 266 | 173 | 93 |
| **மொத்தம்** | **714** | **475** | **239** |



## 4.1.2 மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

| இல | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற பணியாட் குழுவினர் எண்ணிக் கை | நிகழ்ச்சித் திட்ட காலவரை | மொத்த முதலீடு (ரூ) | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (வெளிநாட்டு/ உள்நாட்டு) | நிதி ஒதுக்கீடு/ பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 01 | செலவு மற்றும் கொடுப்பனவு நடைமுறையும் நிதி ஒழுங்குவிதிகளும் | 02ண | 1 நாள் | 18,000 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 02 | ISO 50001 : 2018 எரிசக்தி முகாமைத்துவ முறைமையின் (EnMS) மதியுரை அபிவிருத்தி | 01 | 4 நாட்கள் | 32,500 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 03 | இலங்கையில் ICC மத்தியஸ்தம் (Arbitration) பற்றிய கலப்பாக்கக் கருத்தரங்கு | 02 | 1 நாள் | 10,000 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 04 | வள வினைத்திறனும் தூய உற்பத்தி பற்றிய மதியுரை அபிவிருத்தியும் - 2022 | 02 | 5 நாட்கள் | 65,000 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 05 | ஓ.ஃப்செட் லித்தோகிரே.ஃபி பற்றிய சான்றிதழ் பாடநெறி | 01 | 1 நாள் | 30,000 | உள்நாடு | திறன் அபிவிருத் தி |
| 06 | மூலிகை/உணவுக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் நெய், நல்லெண்ணெய், தேய்காய் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், ஏனைய ஆவியாகா எண்ணெய் வகைகளில் கழிவுப்பொருள்களை அடையாளம் காணும் செயலமர்வு | 01 | 1 நாள் | 10,800 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 07 | மூலிகை/ உணவுக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் நெய், நல்லெண்ணெய், தேய்காய் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், ஏனைய ஆவியாகா எண்ணெய் வகைகளில் கழிவுப்பொருள்களை அடையாளம் காணும் செயலமர்வு | 01 | 1 நாள் | 11,200 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 08 | Solid works தொடக்கநிலைப் பாடநெறி | 04 | 1 நாள் | 60,000 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 09 | மூலிகைச் செடிகள், அழகுக் கலைப் பதார்த்தங்களில் தரக் கட்டுப்பாடு பற்றிய பாடநெறி | 02 | 1 நாள் | 11,500 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 10 | ISO/IEC 17025:2017 இன்படி ஆய்வுகூட தர முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தல் | 01 | 2 நாட்கள் | 12,000 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 11 | லீவு அலுவலரின் கடமைகளும் பொறுப்புக்களும் | 01 | 1 நாள் | 5,000 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 12 | நவீன திருத்தங்களின்படி நொத்தாரிசுகளின் கடமைகள் | 01 | 1 நாள் | 1,500 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 13 | அரசதுறை உள்ளக கணக்காய்வு நடைமுறைகளின் மூலக்கோட்பாடுகள் | 01 | 2 நாட்கள் | 7,500 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 14 | தொழில் சட்டத்தின் நடுத்தர கால அபிவிருத்திகள் பற்றிய செயலமர்வு | 03 | 1 நாள் | 30,000 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 15 | உந்துகை நிகழ்ச்சித்திட்டம் | 475 | 3 நாட்கள் | 1,274,784 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 16 | இணையத்தள அபிவிருத்தியும் உருவாக்கமும் | 01 | 4 மாதங்கள் | 60,000 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 17 | உணவு துப்புரவேற்பாடும் தரச் சான்றிதழும் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 02 | 6 நாட்கள் | 12,000 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 18 | இருப்பு முகாமைத்துவம், சரக்கிருப்புக் கட்டுப்பாடு, கணிப்பீட்டுச் சபை பற்றிய செயலமர்வு | 01 | 1 நாட்கள் | 7,500 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |
| 19 | இலங்கையின் பொருளாதார மீட்சி பற்றிய வழிகாட்டலுக்கான சர்வதேச மாநாடு | 03 | 1 நாள் | 30,000 | உள்நாடு | ஆற்றல் விருத்தி |

*அட்டவணை 4.1.2 : காலவரையினுள் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்*

பயிற்சி மற்றும் அபிவிருத்தி, பெரும்பாலான நிறுவனங்களில் முன்னுரிமைப் பட்டியலிலுள்ள முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாக இருப்பதுடன், ஊழியர்களுக்கு உரிய பயிற்சி மற்றும் அபிவிருத்தி அமர்வுகளை ஒழுங்கு செய்வதில் பெரும் பெறுமதியொன்று உள்ளது. பயிற்சியின் மூலம் ஊழியர்களுக்கு புதிய திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கும், தற்போதுள்ள திறனை முன்னேற்றிக்கொள்வதற்கும், சிறந்த செயலாற்றுகையொன்றை அடைந்துகொள்வதற்கும், விளைதிறனை அதிகரித்துக்கொள்வதற்கும் வாய்ப்பளிக்கும். நிறுவனத்தின் வினைத்திறன் மீது விளைதிறனும் செயலாற்றுகையும் பற்றிய பயிற்சி நேரடித் தாக்கம் செலுத்தும். முன்பு குறிப்பிட்டவாறு, பயிற்சியின் மூலம் ஊழியர்களுக்கு தமது

பொறுப்புக்கள், அறிவு, தொழில் செய்வதற்குத் தேவையான திறன்கள் பற்றிய மிகச் சிறப்பான அறிவை வழங்கும். ஆற்றல்களை விருத்திசெய்யும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ஊழியர்களுக்கு தொழில் புரியும் இடத்தில் மிகவும் பயன்கூர், நிலைத்திருக்கக்கூடிய திறன்களையும் ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்வதற்கு ஆற்றல் கிடைக்கும். அது, செயலாற்றுகை மீது நேர்ப்படியான தாக்கமொன்றை ஏற்படுத்தக்கூடியவாறு அவர்களின் நம்பிக்கையை அதிகரிக்கும். திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் தொழில் செயலாற்றுகையை அதிகரித்தல், விளைதிறனை அதிகரித்தல், தொழில் திருப்தியை அதிகரித்தல், ஊழியர்களை தக்கவைத்துக்கொள்ளும் விகிதங்களை அதிகரித்தல் உள்ளிட்ட பல நன்மைகள் கிடைக்கும். அது தொழில் முன்னேற்றத்திற்கான சந்தர்ப்பங்கள், திட நம்பிக்கை உயர் வெற்றிகளுக்கும் காரணமாக அமையும். ஒவ்வொருவருக்கும் சிற்சில குறைபாடுகள் இருக்கும் என்பதுடன், பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் ஊடாக அத்தகைய குறைபாடுகளை சீர்செய்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும். பயிற்சி அமர்வுகள் மூலம் ஊழியர்களின் குறைபாடுகளையும் பலவீனங்களையும் சரிசெய்து கொள்ளலாம். சம்பந்தப்பட்ட நபர்களை இலக்கிடுவதற்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தித் தேவைகளை வீழ்த்துவதற்கும் புதிய திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அத்தியாவசியமான பயிற்சி அமர்வுகளை வழங்குவது நிறுவனமொன்றுக்கு முக்கியமானதாகும். இச்சூழமைவில் தேவைப்படுகின்றவாறு ஒவ்வொருவரின் கடமைகளையும் நிறைவேற்றக்கூடிய, குழுவொன்றாகச் செயலாற்ற அல்லது தொடர்ச்சியான உதவிகளும் மேற்பார்வையும் இன்றி சுயாதீனமாக செயலாற்றக்கூடிய பூரண அறிவுள்ள பணியாட்குழுவொன்றை உருவாக்குவதற்கு நிறுவனமொன்றின் நிருவாகப் பிரிவு குறிப்பிடத்தக்க செயற்பொறுப்பொன்றை ஆற்றுகின்றது.

### 4.1.3 செயலாற்றுகை – 2022

**அட்டவணை 4.1.3 : 2022 ஆம் ஆண்டின் பிரிவின் செயலாற்றுகை சிறப்புக்கூறுகள்**

| # | செயற்பாடு | எண்ணிக்கை |
|---|---|---|
| **1** | **HRM - ஆட்சேர்ப்புகள்** | |
| **(i)** | ஆட்சேர்ப்புகள் (பணியாட்குழு) | 08 |
| **(ii)** | பதவி விலகல்கள் | 19 |
| **(iii)** | ஓய்வுபெறல்கள் | 17 |
| **(iv)** | பதவியை விட்டு நீங்கல்கள் | 04 |
| **2** | **HRD – பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | |
| **(i)** | உள்நாட்டுப் பயிற்சிகள் | 19 |
| **(ii)** | வெளிநாட்டுப் பயிற்சிகள் | 00 |
| **3** | **HRM – ஊழியர் நலன்புரி** | |
| **(i)** | பணிக்கொடைக் கடன் - 96 பேர் | ரூ. 20,415,337.26 |
| **4** | பாதுகாப்பு முகாமைத்துவம் | |
| **(i)** | பாதுகாப்புக் கிரயம் | ரூ. 28,110,356.10 |
| **5** | கையுதிர்ப்பு | |
| **(i)** | நடாத்தப்பட்ட பொருள் கணக்கெடுப்புகள் | 01 |
| **6** | **அஞ்சல், தொலைத்தொடர்புக் கட்டணங்கள்** | |
| **(i)** | அஞ்சல் கட்டணங்கள் | ரூ. 633,220.00 |
| **(ii)** | தொலைத்தொடர்புக் கட்டணங்கள் | ரூ. 5,873,377.99 |

## 4.2 முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவை நிலையம் (CEDACS)

### 4.2.1 அறிமுகம்

முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவை நிலையம், 1989 திசெம்பர் மாதம் 15 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரம் மூலம் நெசவுக் கைத்தொழில் மற்றும் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் விசேட பயிற்சிப் பிரிவொன்றாக நிறுவப்பட்டது. இப்பிரிவினால் நாடளாவிய ரீதியில் முகாமைத்துவத் திறன்கள் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி பற்றிய பயிற்சி வழங்கப்படுகிறது. CEDACS பிரிவானது பயிற்சி அலகு, நூலகம் மற்றும் தகவல் கூடம், தகவல் தொழில்நுட்ப அலகு, அச்சீட்டு அலகு என்ற நான்கு அலகுகளை உள்ளடக்கியது. தற்போது முக்கிய தொழில்முயற்சிகள் மற்றும் புதிய கைத்தொழில்கள், தொனிப்பொருள்கள் பற்றிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரையும் எதிர்கால தொழில்முனைவோரையும் அறிவுறுத்தும் பொறுப்பு இவ்வனைத்து உப பிரிவுகளுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தீவு முழுவதிலும் முகாமைத்துவத் திறன்களும் முயற்சியாண்மை அபிவிருத்தியும் பற்றிய பலதரப்பட்ட பயிற்சிகளை வழங்குவது இப்பயிற்சி அலகின் முக்கிய பொறுப்பாகும். சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை முன்னேற்றுதல், ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான நூலக வசதிகள், மதியுரைச் சேவைகள், கைத்தொழில் தகவல்களை வழங்குதல், நூலக மற்றும் தகவல் அலகு அலுவலர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப அலகினால் IDB இல் வலையமைப்பு மற்றும் தகவல் வசதிகள் வழங்கப்படுகிறது. தொழில்முனைவோரின் ICT திறன்கள் முன்னேற்றப்படுவதுடன் இணையத்தளம் அபிவிருத்தி செய்யப்படுகிறது. அறிக்கைகள், கைந்நூல்கள், பத்திரங்கள் உள்ளிட்ட ஆவணங்களை அச்சிடும் பணியை அச்சீட்டு அலகு மேற்கொள்கிறது. CEDACS பிரிவு இலங்கையில் புதிய முகாமைத்துவ மூலோபாயங்களை அறிமுகப்படுத்தல், தொழில்நுட்ப அறிவை வழங்குதல், மதியுரைச் சேவைகளை வழங்குதல், டிஜிட்டல் சந்தைப்படுத்தல், நடமாடும் தொழில்நுட்பம், இ-வாணிபம் மற்றும் இணையப்பொருள்கள் (IoT) முதலான துறைகளில் தொழில்முனைவோரின் ICT திறன்களை முன்னேற்றுவதன் ஊடாக புதிய தொழில்முயற்சிக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கு இணைந்துள்ளது. அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு CEDACS பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சில பணிகள் பின்வருமாறு:

#### CEDACS க்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள்

- முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- தொழில்முயற்சி உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- விளைதிறன் முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- முகாமைத்துவத் திறன்களை அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- தொழில்முயற்சியாளர்களுக்கு வணிக மற்றும் தொழில்முயற்சிப் பயிற்சியளித்தல்.
- சமூக ஊடக சந்தைப்படுத்தல், இணையத்தள அபிவிருத்தி, drop shipping மற்றும் Crypto வர்த்தகம் பற்றிய செயலமர்வுகளை நடாத்துதல்.
- இணைய மற்றும் மின்னஞ்சல் வசதிகளை வழங்குதல்.
- டிஜிட்டல் சந்தைப்படுத்தலை முன்னேற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்.
- எண்ணிமமுறை (டிஜிட்டல்) செயலிகளின் (Digital Applications) அபிவிருத்தியும் நிகழ்நிலை ஊடாக பணமீட்டல் பற்றிய கருத்தரங்குகளை நடாத்துதலும்.
- வெளியீடுகளின் விற்பனை.
- நூலக நூல்களின் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) தொகுப்பை முன்னேற்றுதல்
- கைத்தொழில் தகவல்களை ஒழுங்கமைத்தல்.
- நிகழ்நிலை தரவுத்தளத்தில் IDB சேவைநாடிகளைப் பதிவுசெய்தல்.

- கைத்தொழிலாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் IDB பணியாட்குழு முதலியோருக்கு கைத்தொழில் தகவல்களை வழங்குதல்.
- நூல் விபரக்கொத்து தரவுகள், உள்நாட்டு இயந்திரங்களையும் உற்பத்திகளையும் உருவாக்குநர்கள், அறிக்கைகள், இலங்கை தரக் கட்டளைகள், உதவி வழங்கும் நிறுவனங்கள், சட்டங்கள் பற்றிய தரவுத் தளங்களைப் பராமரித்தலும் இற்றைப்படுத்தலும்.
- கைந்நூல்கள், பக்கேஜ்கள், பத்திரங்கள், சுட்டிகள் (Indexes), சிற்றேடுகள் (brochures) முதலிய வெளியீடுகளை உருவாக்குதலும் நிகழ்நிலைப்படுத்துதலும்.

### 4.2.2 பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள்

#### (1) ஏற்றுமதி நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்






*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

(01) கிராந்துருகோட்டே மகாவலி C வலயத்தின் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்ற ஸ்கிரீன் பிரின்டிங் அச்சீட்டு முறையில் பயிற்சி



*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

(02) மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் வளவ வலயத்தில் நடைபெற்ற தொழில்முயற்சி உருவாக்க நிகழ்ச்சித்திட்டம்



*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

(03) அம்பிலிபிட்டிய, வளவ மகாவலி வலய பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற இலத்திரனியல் உபகரணங்கள் திருத்த வேலைப் பயிற்சி



*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

(04) மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் தெஹிஅத்தகண்டிய வலயத்தில் இடம்பெற்ற முகாமைத்துவத் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்



*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*


அட்டவணை 4.2.1 : பிரிவுகளின் ஆண்டிறுதி முன்னேற்றம்

| இல. | செயற்பாடுகள் | திரண்ட நிதிசார் முன்னேற்றம் (ரூ) |
|---|---|---|
| 1 | **நுண்பாக கைத்தொழில்களை உருவாக்குதல்** | |
| 1.1 | வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு தமக்கே உரிய தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும், எதிர்பார்த்த தொழிலுக்கு NVQ சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கும் தொழில்முயற்சி மற்றும் தொழில் உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தலும் நடாத்துதலும். | 575,000 |
| 2 | **தற்போதைய கைத்தொழில்களை முன்னேற்றுதல்** | |
| 2.1 | முகாமைத்துவத் திறன் அபிவிருத்தி, முயற்சியாண்மை அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் பற்றிய பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல். | 434,000 |
| 3 | **ICT சம்பந்தமான செயலமர்வுகளை நடாத்துதல்** | |
| 3.1 | சமூக ஊடக சந்தைப்படுத்தல், இணையத்தள அபிவிருத்தி, drop shipping மற்றும் Crypto வர்த்தகம் பற்றிய TVEC இல் பதிவுசெய்த நான்கு நாள் செயலமர்வுகளை நடாத்துதல். | 1,785,000 |
| 3.2 | நான்கு நாள் திறன் அபிவிருத்தி செயலமர்வில் கலந்துகொண்டவர்களில் தெரிவுசெய்யப்பட்ட ஆட்களுக்கு எண்ணிமமுறை (டிஜிட்டல்) சந்தைப்படுத்தல் பற்றிய 12 நாள் உயர் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | 643,000 |
| 3.3 | வெளிநிலை நிதியளிப்பு ஒழுங்கமைப்புகளுடன் இணைந்து இளைஞர்களுக்கு சமூக ஊடக சந்தைப்படுத்தல், இணையப்பொருள்கள் (IoT), ∴பிவர் (Fiverr), செல்லிட செயலிகளின் அபிவிருத்தி பற்றிய ICT சார் பல்வகைப்படுத்திய செயலமர்வுகளை நடாத்துதல். | 213,000 |
| 4 | **விசேட சேவைகள்** | |
| 4.1 | தகவல்களை வழங்குதல்/ பரப்பீடு செய்தல் | 293,481 |
| | **முழு மொத்தம்** | **3,943,481** |




**அட்டவணை 4.2.2. : வருடாந்த உள்ளபடியான வருமான ஒப்பீடு**

| ஆண்டு | உள்ளபடியான வருமானம் (ரூ) |
|---|---|
| 2019 | 3,426,093 |
| 2020 | 2,605,850 |
| 2021 | 2,051,830 |
| 2022 | 3,943,481 |




தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களில் (SMIs) உள்ள மூலோபாய ரீதியான முக்கியத்துவம் காரணமாக அக்கைத்தொழில்களை ஊக்குவிப்பதன் மீதும் மேம்படுத்துவதன் மீதும் கவனம் செலுத்துவது இப்பிரிவின் முக்கிய பொறுப்பாகும். அது, தொழில்முனைவோருக்கும் கைத்தொழில் தொழில்நுட்பத் தகவல்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும். ஆண்டிற்குரிய முன்னேற்றத்தைக் கருத்திற்கொள்ளும் போது தொடர்ச்சியாக இலாபமீட்டும் ஆற்றலின் மீது இப்பிரிவின் வெற்றிநிலை தங்கியுள்ளது என்பது புலப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளில் வருமானமீட்டல்களின் வீழ்ச்சி ஏற்பட்டபோதும், இந்நாட்டில் நிலவிய பொருளாதார, சமூக சமநிலைமைகள் அதற்கு முக்கியமாக காரணமாக அமைந்தது. மேற்குறித்த அட்டவணையையும் வரைபையும் கவனிக்கும் போது உலக பொருளாதார செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவால் செயல்குன்றச்செய்து கைத்தொழில் பிரிவிலும் பாரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய COVID-19 பெருந்தொற்று காரணமாக 2019-2021 ஆண்டுகளில் உள்ளபடியான வருமானம் வீழ்ச்சி அடைந்திருப்பதாகப் புலப்படுகிறது. ஒவ்வொரு பிரிவும் மூலம் ஆண்டு முழுவதிலும் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் வெற்றிநிலையின் மீதும் வளர்ச்சியின் மீதும் இலாபத்தன்மை தாக்கம் செலுத்துவதனால், பிரிவொன்றுக்கு அது மிகவும் முக்கியமானதாகும். 2022 ஆம் ஆண்டில், பிரிவின் முழுதுமளாவிய வருமானத்தை அதிகரிப்பதற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த செயலமர்வுகள் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கியுள்ளது. கைத்தொழில் பிரிவின் ஊக்குவிப்பும் வலுவூட்டலும் எந்தவொரு நாட்டினதும் நீண்டகால பொருளாதார வெற்றிநிலையை அடைந்து கொள்வதற்கு இன்றியமையாத ஒரு காரணியாகும். 2019-2022 காலப்பகுதியில் இந்நாட்டின் வர்த்தக சமூகத்திற்கு ஏராளமான துணைநிலைச் சேவைகளை வழங்குவதற்கு IDB தொடர்புபட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் எமது உற்பத்திகளின் போட்டி நிலையைப் பேணுவதற்காக உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றுதல், கிரயத்தைக் குறைத்தல், விளைதிறனை அதிகரித்தல், வர்த்தகக் குறியின் பெறுமதியை முன்னேற்றுதல் என்பன மிகவும் முக்கியத்துவம் பெறும்.

## 4.3 பொறியியல் பிரிவு

### 4.3.1 அறிமுகம்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொறியியல் பிரிவு இந்நாட்டின் பேண்தகு கைத்தொழில் அபிவிருத்திக்காக சபையின் தொலைநோக்கை அமுல்படுத்துவதற்கு பங்களிப்புச்செய்யும் முக்கிய பிரிவாக இயங்குகிறது. 2022 ஆம் ஆண்டில் பொறியியல் பிரிவின் செயற்பாடுகள் தற்போதுள்ள மற்றும் புதிய/ மூலவாய்ப்புவளமுள்ள கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருள்களையும் இயந்திராதிகளையும் தெரிவு செய்தல், திட்டமிடுதல்/ அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழில்நுட்பம்/ செயன்முறை பற்றிய அறிவை வழங்குவதற்காக வழிநடாத்தப்பட்டது. மேலும், தொழில் கட்டளைகளின் பேரில் கைத்தொழிலாளர்களுக்கு பதனிடல், வார்ப்பு மற்றும் முடிவுச் சேவைகளை வழங்குவதற்கு அவர்கள் பொறுப்பு வகிக்கின்றனர். ஏனைய செயற்பாடுகளிடையே பொறியியலுக்குரிய பாடத்துறைகளில் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல், இயந்திர உபகரண மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குதல், வார்ப்புத் துறைக்கு ஆய்வுகூட சோதனைச் சேவைகளையும் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட இயந்திர உபகரணங்களையும் விற்பனை செய்தல் என்பன அடங்கும்.

**பொறியியல் பிரிவின் முக்கிய நோக்கங்கள்**

1. IDB இன் ஏனைய பிரிவுகளுக்கு அவர்களின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவியையும் துணைகளையும் அடையாளம் காணல், அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் மனங்கவர் சேவைகளை வழங்குவதற்கு தற்போதுள்ள வளங்களை அதிசிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் அதனை நிறைவேற்றுவதற்கு முயற்சித்தல்.
2. கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பொருத்தமான தொழில்நுட்பத்தையும் செயலிகளையும் இனங்கண்டு கிராமிய சமூகத்தவரின் வாழ்வாதாரத்தை பேண்தகு விதத்தில் கட்டியெழுப்புவதற்கு அவற்றை வழங்குதல்.
3. சுதேச கைத்தொழில்களில் உற்பத்திசெய்யப்பட்ட உலோகங்களும் அலோக உற்பத்திகளின்/ பண்டங்களின் உற்பத்திக் காரணிகளும் (உழைப்பு, தொழில்நுட்பம் மற்றும் மூலப்பொருள்கள்) ஆராய்வதற்கும் அத்தகைய கைத்தொழில்களில் காணப்படும் இடைவெளிகளை அடையாளம் காண்பதற்கும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுதல், இறக்குமதியைக் குறைப்பதற்கும் சுதேச உற்பத்திகளுக்கு வெளிநாட்டுச் சந்தைகளைத் திறந்துவிடும் பொருட்டு பேண்தகு அடிப்படையில் இடைவெளிகளை நிரப்புவதற்கு அவசியமான சூழல் மாற்றங்களை ஏற்படுத்துதல்.
4. உபகரணங்கள், இயந்திராதிகள், பொறித்தொகுதிகள் மற்றும் உற்பத்தி வசதிகளை மதிப்பீடு செய்தலும், கைத்தொழில்களுக்கு நிலைவர அறிக்கைகளையும் மதிப்பீட்டு அறிக்கைகளையும் தயாரித்தலும்.
5. பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை மீள்சுழற்சி செய்வதற்கு உள்ளூர் உலோகக் கைத்தொழில்களுக்கான வார்ப்பட வசதிகளை அபிவிருத்தி செய்தலும், அதன்மூலம் உலோக இறக்குமதியையும் பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களின் ஏற்றுமதியையும் குறைத்தலும்.

**பிரிவின் முக்கிய இலக்குகள்**

1. சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களின் தொழில்நுட்ப மற்றும் திறன் இடைவெளியை அடையாளம் கண்டு, பேண்தகு அபிவிருத்தியொன்றை அடைந்து கொள்வதற்காக அவற்றை பேண்தகு விதத்தில் நிறைவேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

2. அடிப்படைத் திறன்களின் ஊடாக பெறுமதிசேர் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் பொறியியல் பிரிவின் வருமான/காசுப்பாய்ச்சலை அதிகரித்தல்.

3. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயன்முறைகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக புதிய திட்டங்கள், விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திராதிகளின் இறக்குமதிகளை மட்டுப்படுத்தலும் அத்தகைய பண்டங்களை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தலும்.

4. பொருத்தமான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (ATRDC) - பன்னல.

### 4.3.2 பிரிவின் கட்டமைப்பு




**(1) பொறியியல் அலுவலகத்தின் ஊடாக வழங்கப்படும் சேவைகள்**

- பொறித்தொகுதி, சாதனங்கள், கருவிகள் என்பவற்றை மதிப்பீடு செய்தலும் பொறித் தொகுதிகளுக்கான தகுதிநிலை அறிக்கையையும் மதிப்பீட்டு அறிக்கையையும் சமர்ப்பித்தலும்.
- கைத்தொழில் அமைச்சினதும் ஏனைய சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களினதும் உதவியுடன் இயந்திரங்கள் மற்றும் பாகங்களின் உற்பத்தியில் பெறுமதி சேர்க்கும் பணியை சான்றுப்படுத்துதல்.
- உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு கிரய முறைகளை அறிமுகப்படுத்தல்.
- உற்பத்திகளை சான்றுப்படுத்தலும் அறிக்கைகளை விநியோகித்தலும்

- உற்பத்திகளை அபிவிருத்திசெய்வதற்கு தனியார் தரப்புக்களுடன் இணைந்து வியாபார முன்மொழிவுகளையும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் தயாரித்தலும் அமுல்படுத்தலும்.
- கைத்தொழில் சாத்தியவள அறிக்கைகள்.
- தொழிற்பயிலுநர்கள், பட்டப் பயில்நிலையினர், பயிற்சிபெற்ற மற்றும் ஓரளவு பயிற்சி பெற்ற தொழில்முனைவோர் மற்றும் NAITA பயிலுநர்களுக்கு பயிற்சியளித்தல்.
- பரிசோதித்த பின் பொறியியல்சார் தேவைப்பாடுகளின் அடிப்படையில் கைத்தொழில் கொள்கைகளுக்கு அமைய அமைச்சிற்கும் சுங்கம் முதலியவற்றுக்கும் சிபார்சுகளையும் கடிதங்களையும் விநியோகித்தல்.
- கருத்திட்டங்களை வகுத்தமைத்தலும் மதிப்பீடு செய்தலும்.
- பொறித்தொகுதிகளதும் இயந்திரங்களதும் தளக்கோலத்தை வடிவமைத்தல்.
- செயல்முறைத் தொழில்நுட்பம் பற்றிய தொழில்நுட்ப அறிவை வழங்குதல்.

### (2) வேலைக்களங்களின் ஊடாக வழங்கப்படும் சேவைகள்

பிரதானமாக கைத்தொழில்துறைக்கு பொறியியல் வேலைக்கள சேவைகளை வழங்குதல்.












*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

- உலோகப் பாகங்கள் (metallic components), கடைசல்பொறிப் பாகங்கள் (parts with lathe), திரித்தல் (milling), வடிவாக்கல் (shaping), துளையிடல்( drilling) முதலான இயந்திரங்களின் பொறியீடு.
- பிளாஸ்ரிக் வார்ப்பச்சுக்களையும் இறப்பர் வார்ப்பச்சுக்களையும் தயாரித்தல்.
- இரும்புருக்குக் கூறுகளுக்கான வெப்பப் பரிகரிப்பு (heat treatment).
- மேற்பரப்பு அரைப்பும் உருளை வடிவிலான அரைப்பும்.
- உலோக வில் (metal arc) மற்றும் ஒட்சி அசிற்றிலின் உருக்கியொட்டல் (oxy-acetylene welding) மூலம் புனைதல்.
- சிறிய மற்றும் நுண்பாக கைத்தொழில்களுக்குத் தேவையான இயந்திராதிகளையும் கருவிகளையும் சாதனங்களையும் தயாரித்தல்.
- இயந்திர உபகரணங்களுக்கான தளக்கோலம் அமைத்தல் (Layout), நிறுவுதல் (Installation) பற்றிய உசாவுகை.
- நிறுவனத்தின் உள்ளக பிரிவுகளுக்கு தேவைப்படும் சேவைகளை வழங்குதல்.

**(3) வார்ப்பட அலகின் (Foundry Unit) பொறியியல் செயற்பாடுகள்**





*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

- உலோகத்தை அடிப்படையாகக்கொண்ட கூறமைதிகளின் உற்பத்தி.
- இயந்திராதிகளதும் சாதனங்களதும் உற்பத்தி.
- இறக்குமதிப் பதிலீட்டு உற்பத்தி.
- சாம்பல் வார்ப்பிரும்பு (Grey cast iron) மற்றும் நீட்டத்தக்க (நீள்தகு) வார்ப்பிரும்பு (Ductile cast iron) பாகங்களின் வார்ப்பு.
- அலுமினியம், செம்பு, பித்தளை மற்றும் வெண்கல கூறமைதிகளின் வார்ப்பு.
- வார்ப்பு மாதிரியுருக்களை (patterns for casting) அமைத்தல்.
- வார்ப்பு மணல் (foundry sand) சோதனை.
- உலோகங்களின் சோதனை.

**(4) உலோகவியல் ஆய்வகத்தினால் (Metallurgy Lab) வழங்கப்படும் சேவைகள்**

- பதார்த்தங்களையும் தயாரிப்புகளையும் சோதித்தலும் மெய்யுறுதிப்படுத்தலும் (Testing and verification of material and products)
- ஒளி காழல் நிறமாலைமானியினால் (Optical emission spectrometer) 32 உலோகங்களின் இரசாயன உள்ளடக்க சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- உலோகங்களுக்கான சோதனைகள் (Testing of Metal)
  - o வன்மை (கடினத்தன்மை) சோதனை (Hardness test)
  - o இழுவிசைச் சோதனை (Tensile test)
  - o நீட்டலியல்பு (நீட்டற்றகவு) சோதனை (Elongation test)
  - o துகள் நெருக்க (நெருக்கற்றகவு) சோதனை (Compression strength test)
  - o உலோகங்களுக்கான நுண் கட்டமைப்புச் சோதனை (Metallurgical test)
- வார்ப்பு மணல் அச்சுச் சோதனைகள் (Testing of Foundry Molding Sand)
  - o ஈரப்பற்றுப் பரிசோதனை (Moisture test)
  - o மொத்த களிமண் உள்ளடக்கப் சோதனை (Total clay content test)
  - o ஊடுதிறன் (பங்கூடுபுகுதிறன்) சோதனை (Permeability test)
  - o வினைமிகு களிமண் உள்ளடக்க சோதனை (Active clay content test)
  - o துகள் நெருக்க (நெருக்கற்றகவு) சோதனை (Compression test)
  - o சிலிக்கா மணல் துணிக்கை அளவுகளை வேறுபிரிக்கும் சோதனை (Grain size distribution test)




*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

### (5) CNC இயந்திர உபகரணங்கள் நிலையத்தின் பொறியியல்சார் செயற்பாடுகள்



*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

- கணினி எண்முறைக் கட்டுப்பாட்டு (CNC) பொறிமுறையாக்க சேவைகள்.
- CNC 5 axis Milling & 2 axis Lathe கடைச்சல் இயந்திர (கடையி) பொறிமுறையாக்க சேவைகள்.
- டை மற்றும் வார்ப்பச்சு சேவைகள்.
- டை மற்றும் வார்ப்பச்சுக் கைத்தொழிலின் தேவைகளை நிறைவுசெய்தலும் தகுந்த தீர்வுகளை வழங்குதலும்.
- முப்பரிமாண அச்சீடு (3D Printing) உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பப் பயிற்சிகள் மூலம் தொழில்முனைவோரை வலுவூட்டுதல்.

### (6) மாத்தறை, பொதுவான சேவை நிலையம் (CSC) ஊடாக வழங்கப்படும் சேவைகள்

- உலோகப் பாகங்கள் (metallic components), கடைசல்பொறிப் பாகங்கள் (parts with lathe), திரித்தல் (milling), வடிவாக்கல் (shaping), துளையிடல்( drilling) முதலிய இயந்திரங்களின் பொறியீடு.
- உலோக வில் மற்றும் ஒட்சி அசிற்றிலின் உருக்கியொட்டல் (Metal arc and Oxy-acetylene welding) மூலம் செய்துருவாக்கல்.
- சிறிய மற்றும் நுண்பாக கைத்தொழில்களுக்குத் தேவையான இயந்திராதிகளையும் கருவிகளையும் சாதனங்களையும் தயாரித்தல்.
- இயந்திர உபகரணங்களுக்கான தளக்கோலம் அமைத்தல் (Layout), நிறுவுதல் (Installation) பற்றிய உசாவுகை.
- நிறுவனத்தின் உள்ளக பிரிவுகளுக்குத் தேவைப்படும் சேவைகளை வழங்குதல்.

### (7) சிவில் பொறியியல் அலகின் பணிகள்

கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான ஏற்பாடுகளைச் செய்யும் சிவில் தொழில்வாண்மையினர் இருக்கும் ஒரே பிரிவு இதுவாகும்.

1. கேள்வி ஆவணங்களையும் விவரக்கூற்றுக்களையும் (specifications) தயாரித்தல்.
2. கைத்தொழில்சார் சிறந்த நடைமுறைகளை அனுசரித்தல்.
3. அனைத்து உள்வாரி, வெளிவாரி சிவில் வேலைகளையும் பேணிப் பராமரித்தல்.
4. கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.

### (8) மின் பொறியியல் அலகின் பணிகள்

கைத்தொழில் அபிவிருத்தி வசதியளிக்கக்கூடிய மின் பொறியியல் தொழில்வாண்மையினர் இருக்கும் கைத்தொழில் அமைச்சிற்குரிய முக்கிய ஒரு நிறுவனமாகும்.

அனைத்து உள்வாரி, வெளிவாரி மின்சார மற்றும் வளிசீராக்கி (AC) அலுவல்களையும் பராமரித்தல்.

தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்பு நிலையம், கைத்தொழில் அமைச்சு போன்ற வெளிநிலை நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குதல்.

### (9) இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம்

இறப்பர் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு உதவுவது இதன் நோக்கமாகும்.



*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

- விரிவாக்கல் மற்றும் உசாவுகைச் சேவைகள்
- கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்
- அடிப்படை சந்தை ஆலோசனையும் உப ஒப்பந்தங்களை மேற்கொள்ளலும்
- தரச் சான்றுறுதிப்படுத்தலும் உற்பத்திச் சோதனையும்.
- மூலப்பொருள்கள், இறப்பர் சேர்மங்கள் மற்றும் இறப்பர் தயாரிப்புகளின் சோதனை.
- உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்தி.
- மாதிரி உற்பத்திகள் தயாரிப்பு.
- இறப்பர் உற்பத்திகள் மற்றும் சேர்மங்களின் திட்டமிடலும் அபிவிருத்தியும்.
- பகுதியளவான வர்த்தக செயற்பாடுகள்.
- இறப்பர் பால் மற்றும் உலர்ந்த இறப்பர் சேர்மங்களை வழங்குதல்.

### (10) மின் உலோக முலாமிடல் நிலையம் (ECP), பேலியகொட

உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு அவர்களின் உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றிக் கொள்வதற்கு அவசியமான உலோகப்போலி தொழில்நுட்பமும் (Metalloid Technology) சேவைகளும் இந்நிலையத்தினால் வழங்கப்படுகின்றன. நிக்கல் ஹார்ட் குரோமியம் மற்றும் சின்க் முலாமிடல (Zinc Plating) ஆய்வுகூட சோதனைகளும் பயிற்சிகளும் இந்நிலையத்தின் சேவைகளில் அடங்கும்.

### (11) பொருத்தமான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (ATRDC) - பன்னல.

- விவசாயப் பிரிவின் அபிவிருத்திக்கு அவசியமான இயந்திர சாதன மற்றும் உபகரணத் தேவைகளை அடையாளம் காணும் வாய்ப்பும் சாத்தியவளமும் இந்த நிலையத்திற்கு உள்ளது. உள்ளூர் விவசாயிகளுக்கு மிகச் சிறந்த செலவில் அவற்றைத் திட்டமிட்டு செய்துருவாக்கும் பணி இங்கு இடம்பெறுகிறது.
- இயந்திர சாதனங்கள், உபகரணங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் வேறு உற்பத்தி வசதிகளை மதிப்பீடு செய்தலும், கைத்தொழில்களுக்குத் தேவையான தகுதிநிலை அறிக்கைகளையும் மதிப்பீட்டு அறிக்கைகளையும் தயாரித்தலும்.
- இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களுக்கு இயந்திரங்களையும் உபகரணங்களையும் திட்டமிட்டு செய்துருவாக்கல், கோர்த்திணைத்தல், செயற்படுத்தல் இந்நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் மற்றும் சில செயற்பாடுகளாகும்.

### (12) பித்தளைப் பாண்ட சேவை நிலையம் - பமுனுவ, பிலிமத்தலாவ.

போட்டிகர உலக சந்தைக்கு ஏற்றவாறு இலங்கையில் குறைந்த செலவில் உயர் தரம் வாய்ந்த பித்தளைப் பாண்ட உற்பத்திகளை முன்னேற்றுவதற்கு பொருத்தமான தொழில்நுட்பத்தையும் அறிவையும் வழங்குவதன் மூலம் பித்தளைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களைக் கட்டியெழுப்புவதற்கு இந்நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட சேவை அலகுகள் தவிர உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு பேண்தகு வளர்ச்சிகளுக்கும் பொறியியல் பிரிவை தன்னிறைவடையச் செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்ட பெறுமதிசேர் சேவைகளை வழங்குவதற்கும் பின்வரும் சேவை அலகுகள் மிக முக்கியமானவையாகும்.

### (13) திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி அலகு:

கைத்தொழில்களின் பேண்தகு பொருளாதார வளர்ச்சிக்கான கைத்தொழில் தேவைகளை அடையாளம் கண்டு உபகரணங்கள், இயந்திரங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உற்பத்தி வசதிகளைத் திட்டமிடுதலும் பேண்தகு விதத்தில் அவற்றைச் செயற்படுத்தலும்.


**(14) மதிப்பீடு மற்றும் உலோகங்கள் அடிப்படையிலான கைத்தொழில்சார் தரவுப் பகுப்பாய்வு அலகு:**

- இலங்கையில் பொறித்தொகுதிகள், உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் உற்பத்தி வசதிகளுக்கான மதிப்பீடும், விலைமதிப்பீடும், தகுதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தலும்.
- உள்ளூர்க் கைத்தொழில்களின் உலோக மற்றும் உலோகமல்லாத உற்பத்திகள்/ பண்ட உற்பத்தியின் உற்பத்திக் காரணிகளின் (உழைப்பு, தொழில்நுட்பம், மூலப்பொருள்கள்) விகிதங்களை ஆய்வு செய்வதற்கு முதனிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகளை சேகரித்தலும், பழைய உலோக இறக்குமதி மற்றும் ஏற்றுமதியைக் குறைப்பதற்கும் உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு வெளிநாட்டுச் சந்தையை திறந்துவிடுவதற்காக பேண்தகு விதத்தில் இடைவெளிகளை நிரப்புவதற்கு அவற்றை அடையாளம் கண்டு ஏற்ற சுற்றாடல் மாற்றங்களைச் செய்வதற்கு வேறு நாடுகளுடன் ஒப்பிடுதலும்.

### 4.3.3 பிரிவின் முன்னேற்றம் - 2022

**அட்டவணை 4.3.1 : 2022 ஆம் ஆண்டுக்கான பொழிப்பு முன்னேற்ற அறிக்கை**

| இல. | பிரிவு / அலகு | செய்யப்பட்ட வேலைகளின் வருமானம் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | உள்வாரி | வெளிவாரி | |
| 01 | பொறியியல் வேலைக்களம், தலைமை அலுவலகம் - கட்டுபெத்த | 1,644,750.00 | 11,031,140.00 | 12,675,890.00 |
| 02 | வார்ப்பட வேலைக்களம், தலைமை அலுவலகம் - கட்டுபெத்த | 2,775,095.00 | 23,095,019.00 | 25,870,114.00 |
| 03 | மதிப்பீட்டு அறிக்கைகள் - தலைமை அலுவலகம் - கட்டுபெத்த | | 2,355,395.00 | 2,355,395.00 |
| 04 | A.T.R.D.C. - பன்னல | | | 3,229,108.11 |
| 05 | E.P.C. - பேலியகொட | | | 3,369,970.00 |
| 06 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் | | | 64,000.00 |
| 07 | C.N.C. அலகு | | 1,234,570.00 | 1,234,570.00 |
| 08 | C.S.C. - மாத்தறை | | 5,000,000.00 | 5,000,000.00 |
| 09 | பித்தளைப் பாண்ட சேவை நிலையம் | | | 400,672.00 |
| 10 | சிவில் | | | 4,088,122.00 |
| 11 | மின்சாரம் | 1,876,213.58 | 674,552.88 | 2,550,766.46 |
| 12 | தொழில்நுட்ப உதவியும் கருத்திட்ட உசாவுகையும் | | | 2,912,490.00 |
| **மொத்தம்** | | | | **63,751,097.57** |




## <u>புதிய செயல்முனைப்புகள்</u>

**(1) நடுத்தர அதிர்வெண் தூண்டு (கிளர்மின்) உலை (MFIF) சார்ந்த சேவைகள்**



*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

- கைத்தொழில் துறையின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல்.
- இலங்கையில் வார்ப்பட பயிற்சியளிக்கும் ஒரே நிறுவனம் என்ற ரீதியில் தொழில்நுட்பப் பயிற்சியையும் உசாவுகைச் சேவைகளையும் வழங்குதல்.
- வார்ப்பட உற்பத்திகளை மேற்கொள்ளும்போது உற்பத்தித் தரத்தை அதிகரிப்பதற்கு நவீன உள்ளீடுகளை அறிமுகப்படுத்துவதும், உள்ளூர் உற்பத்தியாளர்களின் ஆற்றல்களை முன்னேற்றிக் கொள்வதற்கு அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதலும்.

**(2) இலங்கை நீராவி இயந்திரங்கள் மற்றும் கொதிகலன் மற்றும் அழுத்த இயந்திரங்கள் சபையை (BPVB) நிறுவுதல்**



*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

- பொதிகலன்களின் உற்பத்தித் தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் அதற்குரிய சுயாதீன சோதனைச் சான்றிதழ்களை விநியோகிப்பதற்குமான ஒழுங்குறுத்துகை நிறுவனமொன்றை நிறுவுதல்.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற கொதிகலன் உற்பத்தித் தரங்களினால் விதித்துரைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மட்டங்களுக்கு இசைந்தொழுகுதல்.
- சுதேச கொதிகலன் உற்பத்திக் கைத்தொழிலாளர்களை ஊக்கப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி அவர்களின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உகந்ததொரு சூழலை உருவாக்குதல்.
- சபையின் நடவடிக்கைகளை அமுல்படுத்துதலும் நெறிப்படுத்துதலும்.

**(3) கைத்தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

- பயிற்சிப் பட்டியலை (Training Catalogue) அறிமுகப்படுத்தல்.
- பல்வேறு வகுதிகளின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.





*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

### (4) இலங்கை தொழில்நுட்ப தொழில்முனைவோரை ஊக்குவித்தல்

- IDB வளவில் தற்போது இயங்கிவரும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது மின்சார மோட்டார் சைக்கிளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.




*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திமடல்கள்*

- IDB வளவில் தற்போது இயங்கிவரும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது மின்சார முச்சக்கர வண்டி மற்றும் மின்சாரத்தினால் இயங்கும் பெடல் சைக்கிளின் பதிவு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல்.

**(5) இலங்கைச் சந்தைக்கு குறைந்த செலவில் செயற்கை உபகரணங்களைத் தயாரித்தல்.**

- மாதிரியுருக்களை வடிவமைத்தல், பரிசோதித்து பிணியாய் நிலையத்தின் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அத்தகைய மாதிரியுருக்களை IDB பொறியியலாளர் அணியின் உதவியுடன் NMR அனுமதிக்கு ஆற்றுப்படுத்துதல்.
- இலங்கையில் முதற்தடவையாக முதுகென்பின் பக்கவாட்டு வளைவு நோய் (Scoliosis) சிகிச்சை முறைக்கு என்பு முறிவைக் குணப்படுத்துவதற்கும் முதுகென்புக்கு வெளியிலிருந்து பொருத்தும் மூலவுருமாரிகளைத் தயாரித்தல்.
- தொழில்நுட்ப ரீதியான தொழில்முனைவோரை மருத்துவத் துறைக்கு அறிமுகப்படுத்துதலும் அபிவிருத்தி செய்தலும்.

**(6)** இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவுடன் (SLIC) இணைந்து புதிய உற்பத்திகளின் அபிவிருத்திக்கு உதவுதல்.


**(7)** மோட்டார் வாகனப் பிரிவுக்கு தனியார்-பொது பங்காண்மை (PPP) வடிவத்தை அறிமுகப்படுத்துதல்.

**(8)** அம்பிலிபிட்டியில் பலசரக்குகள் பதப்படுத்தல் நிலையத்தை நிறுவுவதற்கு மதியுரைச் சேவைகளை வழங்குதல்.

**(9)** தனியார்-பொது பங்காண்மையை நிறுவுவதன் ஊடாக பேண்தகு கைத்தொழில்மயமாக்க இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு இணைக்கப்பட்டுள்ள பன்னல வேலைத்தள வசதியை பயன்கூர் விதத்தில் உபயோகித்தல். (கைத்தொழிலாளர்களுக்கான பொருள் வங்கி)

**அட்டவணை 4.3.2 : மெய் வருமானம் - வருடாந்த ஒப்பீடு**

| ஆண்டு | மெய் வருமானம் (ரூ) |
|---|---|
| 2019 | 22,769,521 |
| 2020 | 21,806,327 |
| 2021 | 27,993,261 |
| 2022 | 63,751,098 |



கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொறியியல் பிரிவின் தன்னிறைவான பிரிவாக மாறும் முக்கிய நோக்கு மற்றும் மூலோபாய எண்ணத்துடன் இலங்கைப் பொருளாதாரத்தில் பொருத்தமான மூல வாய்ப்புவளமுள்ள கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு வரையறுத்த பொறியியல்சார் மேடையொன்றை வழங்கி அமுல்படுத்தப்படுகிறது. இப்பிரிவின் மூலோபாய எண்ணம் யாதெனில், இந்நாட்டின் பேண்தகு கைத்தொழில் அபிவிருத்திக்கு சபையின் நோக்கை அமுல்படுத்த உதவும் மிக முக்கிய பிரிவாக தொழிற்படுவது இப்பிரிவின் மூலோபாய ரீதியான எதிர்பார்ப்பாகும். அதேபோல் கைத்தொழிலாளர்களுக்கு இருக்கும் வரையறுத்த வளங்களை அதிசிறப்பாக உபயோகித்து தமது நோக்குகளை அடைந்துகொள்வதற்கு தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டு உதவியை அதிகரித்துக்கொள்வதற்கு அவசியமான ஒத்துழைப்பை இப்பிரிவு வழங்குகிறது. பிரிவின் வருடாந்த முன்னேற்றத்தை நோக்குமிடத்து, 2020 – 2022 வரை ஆண்டுக்குரிய வருமானத்தில் தொடர் வளர்ச்சியொன்றைச் சுட்டி நிற்கிறது. கொவிட் 19 அச்சுறுத்தல் அவர்களை நிச்சயமற்ற ஒரு நிலைக்கு உள்ளாக்கியதுடன், நாடு முழுவதும் பெரும் இன்னலுக்கு உள்ளானது. பெருந்தொற்று காலப்பகுதியில் விதிக்கப்பட்ட முழு முடக்கநிலை மற்றும் ஏனைய மட்டுப்பாடுகள் காரணமாக உரிய ஏராளமான நிகழ்ச்சிகள் இரத்துச் செய்யப்பட்டமையால், அது 2020 ஆம் ஆண்டின் வருமானம் வீழ்ச்சியடையக் காரணமாயிற்று. இருப்பினும், கடந்த ஆண்டுகளின் தரவுடன் ஒப்பிடுமிடத்து, 2022 ஆம் ஆண்டில் பொறியியல் பிரிவு உயர் வளர்ச்சியொன்றை அடைந்துள்ளது. முக்கியமாக உரிய இலக்குகளை சிறப்பான மட்டத்தில் எய்தியதன் பயனாக இது அடையப் பெற்றுள்ளது. இது தவிர தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மேலதிகமாக பிரிவினால் புதிய பல கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உயர் வருமானமொன்றை ஈட்டுவதற்கு அது காரணமாக அமைந்துள்ளது. மேலும், பிரிவினால் கைத்தொழிலாளர்களின் உலோக மற்றும் உலோகமல்லாத உற்பத்திகள்/பண்ட உற்பத்திக்கான அடிப்படை உற்பத்திக் காரணிகள் (உழைப்பு, தொழில்நுட்பம், மூலப்பொருள்கள்) தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளப்படுகிறது. போட்டிகரமான உலக கைத்தொழில் சூழலுடன் போட்டியிடுவதற்கு தரமும் தர நியமங்களும் ஊடாக போட ஒப்பீட்டு அனுகூலமென்றை அடைந்துகொள்வதற்கு 2022 ஆம் ஆண்டில் இப்பிரிவு அனைத்து கைத்தொழில்களுக்கும் தொழில்சார் பொறியியல் தீர்வுகளையும் சேவைகளையும் வழங்கியுள்ளது. இறுதியாக, பேண்தகு கைத்தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி கருதி எதிர்பார்த்த பேறுபேறுகளைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு பொறியியல் பிரிவு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொலைநோக்கு, பணித்திட்டம் மற்றும் இலக்குகளுக்கு இணையொத்ததாக மூலோபாய மற்றும் நோக்கங்களை இலக்கிட்டுள்ளது.

# 4.4 கைத்தொழிற் பேட்டைப் பிரிவு

### 4.4.1 அறிமுகம்

இந்நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் மாவட்டங்களுக்கும் கொழும்பு மற்றும் அண்மிய பகுதிகளுக்கும் இடையில் போதிய கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகளின் இடைவெளியொன்று காணப்படுகின்றது. ஆகையால், பிராந்திய கைத்தொழில்மயமாக்கலை ஊக்குவிப்பதற்கும் நாடுபூராவும் கைத்தொழில் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் 1960 தசாப்தத்தில் கைத்தொழிற் பேட்டை எண்ணக்கரு இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது. 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமான கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களை ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் 33(2) ஆம் பிரிவிற்கமைய "இலங்கை கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்கு, பராமரிப்பதற்கு, இயக்கிச்செல்வதற்கு" சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஆகையால், புதிய கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுதல், தமது உற்பத்திக் கைத்தொழில்களுக்கு போதிய இடவசதியின்றி சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் கட்டியெழுப்பக்கூடிய காணிகளை அல்லது தொழிற்சாலைக் கட்டிடங்களை/ முன்னேற்றக்கூடிய ஆதனங்களைப் பெற்றுக்கொடுப்பது கைத்தொழிற் பேட்டைகள் பிரிவின் முக்கிய நோக்கமாகும். அண்மைக்காலத்தில் புதிய கைத்தொழில்களை நிறுவுவதற்கு தனியார்துறையை ஊக்குவிப்பதற்காக தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கைத்தொழிற் பேட்டைகள் பிரிவினால் கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வசதிகள்**

01. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் காணித்துண்டுகளும் கட்டிடங்களும் முறையே 30 ஆண்டு, 20 ஆண்டு நீண்டகால அடிப்படையில் தமது கருத்திட்டப் பிரேரணைகளைச் சமர்ப்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு மதிப்பீட்டுக் குழுவின் அனுமதியின் கீழ் குத்தகை விடப்படுகிறது.

02. உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

    - முப்படியான மின்சார (3phase current) மற்றும் உள்ளக அடிப்படையிலான மின்சார விநியோக முறைமையொன்று காணப்படுதல்.
    - நீர்வழங்கல், நீரை சேமித்துவைத்தல், விநியோக முறைமையொன்று காணப்படுதல்.
    - தொடர்பாடல் சேவையொன்று என்ற வகையில் ரெலிகொம் வசதிகளை வழங்குதல்.
    - போக்குவரத்து வசதிகளையும் உள்ளக வீதிகளுக்கு நுழையும் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல். ஆகையால், காலமும் வளங்களும் வீண் போகாமல் உற்பத்தியை உடனடியாக ஆரம்பிக்கலாம்.

03. ஏனைய துணைநிலைச் சேவை வசதிகள் காணப்படுதல்.

    கைத்தொழிற் பேட்டைகளின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் தவிர, வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிக்கக்கூடிய அஞ்சல் அலுவலகங்கள், உணவகங்கள், பொலிஸ் காவல் கூடங்கள் முதலியன நிறுவப்பட்டிருத்தல்.

04. கழிவுநீரையும் கைத்தொழில் கழிவுப்பொருள்களையும் வெளியேற்றல் முறைமை. (வடிகான்கள், மேன்ஹோல், பம்பு நிலையங்கள் முதலியன.)

05. கைத்தொழிற் பேட்டைகளுக்கு தொடர்ச்சியான பாதுகாப்புச் சேவைகளை IDB வழங்குகிறது.

06. கைத்தொழிலாளர்களுக்கு குத்தகை விடப்பட்டுள்ள ஆதனங்கள் குறித்த குத்தகை உரிமையை வங்கிகளுடன் வைத்துக்கொண்டு கடன் வசதியளித்தல்.

07. கைத்தொழிற் பேட்டைகளின் நிருவாக மற்றும் பராமரிப்புத் தேவைகளுக்கு தொடர்ச்சியாக தலையீடு செய்தல்.

08. அனைத்து கைத்தொழிற் பேட்டைகள் சார்ந்த சுற்றாடல் நட்புறவான பராமரிப்பு நடவடிக்கைகளைப் பேணுதல் குறித்த தேவைப்படும் மேற்பார்வையையும் வழிப்படுத்தலையும் வழங்குதல்.

09. அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் விலைமதிப்பீட்டுப் பெறுமதிகளின்படி மாதாந்த அடிப்படையில் குத்தகை விடப்பட்டுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் காணித் துண்டுகளுக்கு/ கட்டிடங்களுக்கு கைத்தொழிலாளர்களிடமிருந்து மாதாந்த வாடகையையும் மீளளிப்புச் செய்யக்கூடிய அடிப்படையில் மூன்றாண்டு பிணைத் தொகைகளையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

- நிபந்தனைகளை மீறும் கைத்தொழிலாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.
- ஏனைய IDB பிரிவுகளினால் ஏற்பாடுசெய்யப்படும் வருடாந்த கண்காட்சிகள், போட்டிகள் மற்றும் செயலமர்வுகளுக்கு கைத்தொழிலாளர்களை பங்கேற்கச் செய்தல்.
- புதிய கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்குப் பொருத்தமான காணிகளை அடையாளம் காணலும் கையகப்படுத்துதலும்.

## 4.4.2 ஒதுக்கப்பட்ட காணித் துண்டுகளின் வரலாறு

1965-1970 காலப்பகுதியில் IDB இனால் பின்வரும் 3 கைத்தொழிற் பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன:-

| | கைத்தொழிற் பேட்டை | மாவட்டம் |
|---|---|---|
| 01. | ஏக்கல | கம்பஹா |
| 02. | பல்லேகெலே | கண்டி |
| 03. | அச்சுவேலி | யாழ்ப்பாணம் |

- களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை கைத்தொழிற் பேட்டை 1978 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

- குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் முறையே பன்னல, லுணுவில ஆகிய இடங்களில் 1980 களில் கைத்தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டன. மேலும் 2022 ஆம் ஆண்டில் கட்டம் II இன் கீழ் பன்னல கைத்தொழிற் பேட்டையின் 6.5 ஏக்கர் காணியின் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- "இசுரு உயன கைத்தொழிற் பேட்டை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராமிய கைத்தொழிற் பேட்டைகள் நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் 1990 ஆம் ஆண்டில் கொட்டகலை, வவுலுகல, கலிகமுவ, புஸ்ஸெல்ல, பத்தேகம, நேகம்பஹ, மிகிந்தலை, வவுனியா, பெலிஅத்த, புத்தல ஆகிய இடங்களில் கைத்தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டன.

- கொழும்பு மாவட்டத்தின் பானலுவ கைத்தொழிற் பேட்டை 2006 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்காணியின் உரித்தைக் கையகப்படுத்தும் செயன்முறை வெற்றிகரமாக இடம்பெற்று வருகிறது. தற்போது அச்செயன்முறைந இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.


- 30 ஆண்டுகளாக நாட்டில் நிலவிய உள்நாட்டுப் போர் காரணமாக அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை முற்றாக சிதிலமடைந்திருந்தமையால், 2013/2014 இல் இந்திய அரசு மற்றும் இலங்கை அரசின் நிதிப் பங்களிப்புடனும் UNOPS அமைப்பின் மேற்பார்வையிலும் கைத்தொழில் பேட்டையின் புனரமைப்பு மற்றும் மீள்நிறுவுதல் நடவடிக்கைகளுக்கு முறையே 220 மில்லியன் ரூபாவும் 50 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையைப் புனரமைத்து சில கைத்தொழில்களுடன் அதன் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

- இது தவிர, கைத்தொழில் அமைச்சு 2018/2019 இல் கட்டம் II அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்து உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபாவை வழங்கியது.

- மேலும் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையின் கட்டம் II இன் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

- புதிய கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்கு 2022 ஆம் ஆண்டில் தென் மாகாணத்தின் எல்பிட்டிய, கம்புறுபிட்டிய ஆகிய இடங்கள் IDB இனால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**உரு 4.4.1 : இலங்கையிலுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் அமைவிடம்**



*அட்டவணை 4.4.1 : கைத்தொழிற் பேட்டைகளின் அமைவிடம் (மாகாண வாரியாக)*

| கைத்தொழிற் பேட்டை | மாகாணம் |
|---|---|
| ஏக்கல, ஹொரணை, வவுலுகல, பானலுவ | மேல் மாகாணம் |
| பல்லேகெலே, களுதாவளை, கொட்டகலை | மத்திய மாகாணம் |
| பன்னல, லுணுவில | வடமேல் மாகாணம் |
| கலிகமுவ, புஸ்ஸெல்ல | சப்ரகமுவ மாகாணம் |
| நேகம்பஹ, மிகிந்தலை | வடமத்திய மாகாணம் |
| பூந்தோட்டம், அச்சுவேலி | வட மாகாணம் |
| புத்தல | ஊவா மாகாணம் |

### 4.4.3 பிரிவின் விசேட செயலாற்றுகை சிறப்புக்கூறுகள்

- கைத்தொழில் அபிவிருத்திச் சபை பிரதானமாக கொழும்பு, அதன் சுற்றயல் பகுதிகள் மற்றும் கிராமப்புறங்கள் மீது குறிப்பிடத்தக்களவு கவனம் செலுத்தியுள்ளதுடன், நாடுபூராவுமுள்ள 18 கைத்தொழிற் பேட்டைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது 16 கைத்தொழிற் பேட்டைகள் இயங்கும் நிலையில் உள்ளன. 2 கைத்தொழிற் பேட்டைகள் அதாவது பெலிஅத்த, பத்தேகம ஆகிய இடங்களில் இயங்கவில்லை.

- 1967 முதல் அபிவிருத்தி செய்யப்பட்ட காணியின் முழு விஸ்தீரணம் சுமார் 305 ஏக்கர்களாகும். அக்காணியை 733 துண்டுகளாகப் பிரித்து 377 கைத்தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

- கைத்தொழிலாளர்களிடையே பகிரப்பட்டுள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட 277 காணித்துண்டுகளில் அவர்களின் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 8,595 தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 48 கைத்தொழில் அலகுகள் அவர்களின் தொழிற்சாலைக் கட்டிடங்களை நிர்மாணிக்கும் செயற்பாட்டின் பல்வேறு கட்டங்களில் உள்ளன.

- சிறிய கைத்தொழிற் பேட்டைகள் சார்ந்த தற்போது இயங்கும் நிலையில் இல்லாத, விடுதிகளாக பயன்படுத்தப்பட்ட 23 கைத்தொழில் அலகுகளை ஒழிவுக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நிர்மாணித்து முடிக்கப்பட்ட 80 கட்டிடங்கள் 60 கைத்தொழில்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

- அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையின் 16 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்கும் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிரல் அமைச்சினூடாக திறைசேரியிலிருந்து பெற்றுக்கொண்ட சுமார் 25 மில்லியன் ரூபா தொகை கைத்தொழிற் பேட்டைகள் பிரிவினால் செலவிடப்பட்டுள்ளது.

- புதிய காணித்துண்டுகளை/ நிர்மாணித்து முடித்த கட்டிடங்களை எதிர்பார்த்து விண்ணப்பங்களை அனுப்பிவைத்த தற்போது வசித்துவரும் கைத்தொழிலாளர்களும் புதிய முதலீட்டாளர்களும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டனர். சாத்தியவளத்தைக் கவனத்திலெடுத்து அவர்களில் 33 கைத்தொழிலாளர்கள் 2022 ஆம் ஆண்டுக்கு அடையாளம் காணப்பட்டனர்.

அட்டவணை 4.4.1 : 2022 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கைத்தொழில்கள்

| கைத்தொழிற் பேட்டை | காணித் துண்டங்கள்/கட்டிடங்களை ஒதுக்கிக் கொடுத்தல் | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள் | |
|---|---|---|---|
| | | கைத்தொழில்கள் | தொழில்கள் |
| கொட்டகலை | 2 | 1 | 10 |
| ஏக்கல | 2 | 2 | 75 |
| வவுலுகல | 1 | 1 | 23 |
| பல்லேகெலே | 2 | 2 | 36 |
| லுணுவில | 2 | 2 | 25 |
| பூந்தோட்டம் | | | |
| பானலுவ | 1 | 1 | 12 |
| களுதாவளை | 3 | 2 | 27 |
| **மொத்தம்** | **13** | **11** | **208** |

அட்டவணை 4.4.2 : 2022 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட தற்போதுள்ள கைத்தொழில்கள்

| கைத்தொழிற் பேட்டை | அபிவிருத்தி செய்யப்பட்ட தற்போதுள்ள கைத்தொழில்கள் | |
|---|---|---|
| | கைத்தொழில்கள் | உருவான மேலதிக தொழில்கள் |
| கொட்டகலை | 1 | 32 |
| ஏக்கல | 1 | 18 |
| வவுலுகல | 1 | 14 |
| பல்லெகெலே | 2 | 39 |
| ஹொரணை | 1 | 25 |
| பானலுவ | 1 | 12 |
| களுதாவளை | 1 | 8 |
| **மொத்தம்** | 8 | 148 |

- 2022 ஆம் ஆண்டில் கைத்தொழிலாளர்களுடன் காணகள்/அமைத்து முடித்த கட்டிடங்களுக்கான 20 குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அவற்றின் மூலம் ரூ.172,481/- வருமானமொன்றை ஈட்ட முடிந்தது.

- வெற்றியளிக்காத நிலையிலிருந்த 16 கைத்தொழிற் பேட்டைகள் 2022 ஆம் ஆணடில் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அவை புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- கைத்தொழிலாளர்களுக்கு குத்தகை விடப்பட்டுள்ள ஆதனங்கள் குறித்த குத்தகை உரித்தை வைத்துக்கொண்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு 7 கைத்தொழிலாளர்களுக்கு உதவியளிக்கப்பட்டது.

- குத்தகை விடப்பட்டுள்ள காணிகளுக்கும் கட்டிடங்களுக்கும் 2022 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட மாதாந்த/ வருடாந்த குத்தகைத் தொகை, நீர்க் கட்டணம், காணி பெறுமதி மதிப்பீட்டுக் கட்டணங்கள் (மாற்றல்) மற்றும் நிலுவைத் தொகை வருமானம் 91.3 மில்லியன் ரூபாவாகும். திரட்டல்கள் சார்பாக பராமரிக்கப்படும் சுழல் நிதியம், குத்தகை வாடிக்கையாளர்களிடமிருந்து மூன்று ஆண்டுகால மீளச் செலுத்தக்கூடிய வைப்புகளாக அறவிடப்படுகின்றது. ஆகையால், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் சுழல் நிதியத்தின் திரண்ட பெறுமதி 10.83 மில்லியன் ரூபாவாகும்.




படம் 4.4.1: ஏக்கல கைத்தொழிற் பேட்டை

### 4.4.4 பிரிவின் முன்னேற்றப் பொழிப்பு

**அட்டவணை 4.4.3 : கைத்தொழிற் பேட்டைகளிலிருந்து வருமானங்களைத் திரட்டுதல்**

| இல. | செயற்பாடுகள் | திரண்ட நிதிசார் முன்னேற்றம் (ரூ.) |
|---|---|---|
| 1 | ஈட்டிய வருமானம் - குத்தகைத் தொகைகள் | 52,315,924 |
| 2 | ஈட்டிய வருமானம் - நீர்க் கட்டணங்கள் | 1,915,676 |
| 3 | ஈட்டிய வருமானம் - குத்தகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல் | 172,481 |
| 4 | காணி பெறுமதி மதிப்பீட்டுக் கட்டணம் (மாற்றல்) | 2,323,106 |
| 5 | நிலுவைத் தொகைகளும் ஏனைய அறவீடுகளும் | 34,625,120 |
| 6 | ஈட்டிய வருமானம் - கைத்தொழிற் பேட்டைகளின் பராமரிப்புக்கு சுழல் நிதியத்தை நிறுவுதல் | 10,838,896 |
| முழு மொத்தம் | | **102,191,202** |



கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் வருமான விரிவாக்கலைக் கவனத்திலெடுக்கும்போது, குத்தகைத் தொகை ஊடாக ஈட்டப்பட்ட வருமானம், பிரிவின் முழுதுமளாவிய ஈட்டல்களுக்கு குறிப்பிடத்தக்க ஒரு பங்களிப்பை வழங்குகிறது. முக்கியமாக கைத்தொழிற் பேட்டைப் பிரிவு தொழில்முயற்சியாளர்களுக்கு அமைத்து முடிக்கப்பட்ட தொழிற்சாலைக் கட்டிடங்கள் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிப்பு அளிக்குமாகவே தாபிக்கப்பட்டுள்ளது. கிராமியப் பிரிவின் கைத்தொழில்களை நிறுவும்போது உள்ள முக்கிய தடங்கல் யாதெனில், கைத்தொழில்களை நிறுவப் பொருத்தமான இடங்களைக் கண்டுபிடிப்பதிலுள்ள சிரமமே. சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு வசதியளிப்பதற்கு நாடுபூராவும் கைத்தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன.

## அட்டவணை 4.4.4 – 2022.12.31 அன்றுள்ளவாறு IDB கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்குமான கருத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை

| வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு - 2022 | செயற்பாடு | மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.) | நிதிசார் முன்னேற்றம் | | | பௌதிக முன்னேற்றம் 2022.12.31 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | விண்ணப்பித்த 20% தொகை (ரூ.) | கோரப்பட்ட முதலாவது பகுதிக் கொடுப்பனவு (ரூ.) | கிடைத்த அளவு (ரூ.) | பௌதிக (%) | பௌதிக (சொற்களில்) |
| | **அமுல்படுத்தப்பட்டுவரும் கருத்திட்டங்கள் - 2021** | | | | | | |
| 25 மில்லியன் ரூபா | **1** ஏக்கல மற்றும் பல்லெகெலே | | | | | | |
| | 02 நீர் மோட்டார் பம்பிகளையும் அமிழ்த்தக்கூடிய நீர்ப்பம்பி ஒன்றையும் நிறுவுதல், நீர்க் குழாய்களைப் பொருத்துதல், மின் கம்பியிணைப்பு வேலை, பிரதான பலகைகள் மற்றும் உரிய துணையுறுப்புகளைப் பொருத்துதல். (இறுதிக் கொடுப்பனவு) | 1,500,000 | - | - | 1,411,644.02 | - | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| | **புதிய கருத்திட்டங்கள் - 2022** | | | | | | |
| | **(01)** ஏக்கல | | | | | | |
| | சேதமடைந்துள்ள எல்லை மதிற் சுவரின் எஞ்சிய நிர்மாணப் பணியை மேற்கொள்ளல். | 9,800,000 | 1,689,217.20 | 4,968,087.40 | 486,000.00 | 70 | நிர்மாணப் பணி இடம்பெற்று வருகிறது. நிரல் அமைச்சினால் 20% சேவையில் ஈடுபடுத்தல் முற்பணம் மற்றும் முதற்பகுதி கொடுப்பனவு கோரப்பட்டுள்ளது. |
| | **(02)** பன்னல | | | | | | |
| | வடிகான் அமைப்புடன்கூடிய உள்ளக வீதியின் எஞ்சிய பகுதியை கொங்கிறீட் கொண்டு அமைத்தலும் கைத்தொழில்களுக்கு நீர் விநியோகம் செய்வதற்கு நீர்க் குழாய்களைப் பொருத்துதலும். | 6,700,000 | 1,733,688.00 | 5,030,981.19 | - | 75 | நிர்மாணப் பணி இடம்பெற்று வருகிறது. நிரல் அமைச்சினால் 20% சேவையில் ஈடுபடுத்தல் முற்பணம் மற்றும் முதற்பகுதி கொடுப்பனவு கோரப்பட்டுள்ளது. |

| வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு - 2022 | செயற்பாடு | | மதிப்பீட்டுக் கிரயம் (ரூ.) | நிதிசார் முன்னேற்றம் | | | பௌதிக முன்னேற்றம் 2022.12.31 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | விண்ணப்பித்த 20% தொகை (ரூ.) | கோரப்பட்ட முதலாவது பகுதிக் கொடுப்பனவு (ரூ.) | கிடைத்த அளவு (ரூ.) | பௌதிக (%) | பௌதிக (சொற்களில்) |
| | **(03)** | கொட்டகல | | | | | | |
| | அமிழ்த்தக்கூடிய நீர்ப் பம்பியொன்றை நிறுவுதல், நீர்க்குழாய்களைப் பொருத்துதல், மின் கம்பி இணைப்புவேலை, பிரதான பலகைகள் மற்றும் உரிய துணையுறுப்புகளைப் பொருத்துதல். | | 3,000,000 | - | 1,700,000.00 | - | 100 | 1 மி.ரூ. நிரல் அமைச்சிடமிருந்து (பூரண கொடுப்பனவு) கோரப்பட்டுள்ளது. |
| | **(04)** | கலிகமுவ | | | | | | |
| | தடையமைப்புடன்கூடிய பாதுகாப்புக் கூடம், பம்பு நிலையம், அலுவலக கட்டிடம் என்பவற்றின் புதுப்பிப்பு | | 4,000,000 | - | - | - | - | 2023 வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இக் கருத் திட்டம் தொடர்ச்சியாக அமுல் படுத்தப் படுகிறது. |
| | **மொத்தம்** | | **25,000,000** | **3,422,905.20** | **11,699,068.59** | **1,897,644.02** | - | |

## 4.5 சந்தைப்படுத்தல் பிரிவு

### 4.5.1 அறிமுகம்

சந்தைப்படுத்தல் பிரிவு பிரதானமாக MSME பிரிவுக்கும் வருங்கால தொழில்முனைவோருக்கும் வர்த்தக ரீதியாக சாத்தியவளமுள்ள தொழில்முயற்சிகள் வரை வளர்வதற்கு சேவையாற்றுகின்றது. சந்தைப்படுத்தல் பிரிவானது நாடுபூராவும் இருக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களினாலும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களினாலும் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களை சந்தைப்படுத்தும் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் அடங்கிய IDB இன் இயக்காற்றல்கொண்ட ஒரு பகுதியாகும். மேலும், உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு குறிப்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கும் வருங்கால தொழில்முனைவோருக்கும் தமது தொழில்முயற்சிகளை வர்த்தக ரீதியாக மிகவும் சாத்தியமுள்ள நிறுவனங்களாக வளர்ப்பதற்கு உதவும் அதேவேளை, IDB வழங்கும் சேவைகளை ஊக்குவிக்கும் பொறுப்பும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறுதி வாடிக்கையாளரை பூரண திருப்தியடையச்செய்யும் நீண்டகால, பரஸ்பர ரீதியாக அனுகூலமான வர்த்தகத் தொடர்புகளைக் கட்டியெழுப்பி அது சேவையாற்றுகிறது. மேலும், நீண்டகால வியாபாரத் தொடர்புகளின் ஊடாக குறித்த உற்பத்திகளுக்கு வர்த்தகக்குறி புகழுருவைக் கட்டியெழுப்புவதுடன் மூலவாய்ப்பு வளமுள்ள சந்தைகளுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்பிக்கொள்வதற்கு உதவும் பொறுப்பும் இப்பிரிவைச் சாரும்.

### 4.5.2 பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்

- கைத்தொழில் கண்காட்சிகளை ஒழுங்குசெய்தலும், நடாத்துதலும், தேசிய கண்காட்சிகளிலும் வர்த்தகக் கண்காட்சிகளிலும் கலந்துகொள்ளலும்.

- நாடுபூராவுமுள்ள தெரிவுசெய்யப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோர்/ கைத்தொழிலாளர்கள் மற்றும் சுயதொழில்களில் ஈடுபடுவோருக்கான தேசிய விருது விழாவை ஒழுங்கு செய்தல். அதேபோல், கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கு தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் பிரிவு வாரியான போட்டி நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.

- ‘லக்கம்’ சந்தைப்படுத்தல் நிலையத்தில் விற்பனை வசதிகளை வழங்குதல். பிரதானமாக சிறிய மற்றும் நடுத்தர அளவான உற்பத்தியாளர்களின் சந்தைப்படுத்தக்கூடிய உற்பத்திகளை இனமறிந்து ஊக்குவிப்பதுடன், அவற்றை சுமக்கக்கூடிய விலையில் ஒரே இடத்தில் சந்தைப்படுத்துவதற்கு ‘லக்கம்’ விற்பனை நிலையம் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

- உப ஒப்பந்தப் பரிமாற்ற வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல். அரச நிறுவனங்களிலிருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கைத்தொழிலாளர்கள்/ சேவை வழங்குநர்கள் சார்பாக IDB இனால் விலைகோரலும், அத்தகைய கட்டளைகளை கைத்தொழிலாளர்களிடையே பகிர்ந்தளிப்பதும் இதன் மூலம் கருதப்படுகிறது.

- அரசாங்க நிறுவனங்களிலிருந்து பிறப்பிக்கப்படும் பெரசு (Ferrous) அல்லது பெரசல்லாத (Non Ferrous) பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை சேகரித்து விநியோகிப்பதற்கும் வார்ப்பு, மென் பொறியியல், கொல்லர்கள், ஏனைய உலோக வார்ப்புகள் மற்றும் கைவினைக் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருள்களாகப் பயன்படுத்துவதற்கும் சகாய விலை அடிப்படையில் பழுதப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை விநியோகித்தல்.

- கைத்தொழில்கள்/ MSMEs ஊக்குவிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் சந்தைப்படுத்தல் உதவியையும் மதியுரைச் சேவைகளையும் வழங்குதல். மேலும், கோரிக்கையின் பேரில் புதிய

சந்தைகளை அடையாளம் காண்பதற்கும் உற்பத்திகளின் தரம், வர்த்தகப் பெயரீடு, பொதியிடல் மற்றும் சந்தை பற்றிய தகவல்களை முன்னேற்றுவதற்கான பயிற்சிப் பட்டறைகளையும் மதியுரை நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்தல்.

- சந்தை அளவைகளை நடாத்துவதற்கும் சந்தை அளவைகளை நடாத்துவதற்கு வசதியளிப்பதற்கும் அறிக்கைகளை எழுதுதலும், அடையாளம் காணப்பட்ட சாத்தியமுள்ள உற்பத்திகள் பற்றிய சந்தை சாத்தியவள அறிக்கைகளைத் தயாரித்தலும்.

- சர்வதேச கண்காட்சிகள், வர்த்தகக் கண்காட்சிகள், கூட்டவைகள் மற்றும் கூட்டங்களில் வர்த்தக கல்விச் சுற்றுலாக்களில் கலந்துகொள்வதற்காக ஏற்றுமதி திசைமுகப்படுத்திய SMEs களுக்கான சந்தை ஆய்வு கள விஜயங்களை ஒழுங்கு செய்தல்.

### 4.5.3 பிரிவின் விசேட செயலாற்றுகை சிறப்புக்கூறுகள்

- **பழுதப்பட்ட உலோக துண்டுப்பொருள் கருத்திட்டம் (Scrap Project)**

கைத்தொழில் அபிவிருத்திச் சபை சார்பாக உடன்பட்ட விலைகளின் கீழ் அரச நிறுவனங்களிலிருந்து பெரசு (Ferrous) அல்லது பெரசு அல்லாத (Non Ferrous) பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களையும் அது சார்ந்த ஏனைய பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களையும் சந்தைப்படுத்தல் பிரிவு கொள்வனவு செய்கிறது. இவை IDB இல் தம்மைப் பதிவுசெய்துகொண்டுள்ள மென் பொறியியல் கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருளாக விற்பனை செய்யப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்கள் கருத்திட்டத்தின் கீழ் பெரசு அல்லது பெரசல்லாத மற்றும் அவை சார்ந்த ஏனைய பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை அரச நிறுவனங்களிலிருந்து கொள்வனவுசெய்து, உத்தியோகத்தர் சபையொன்றினால் நிருவகிக்கப்படும் சகாய விலைகளின் அடிப்படையில் அவற்றை குறிப்பாக IDB இல் பதிவுசெய்துகொண்டுள்ள மென் பொறியியல் துறையிலுள்ள கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருளாக விநியோகிக்கப்படுகிறது. உலோக வார்ப்படக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு அவர்களின் உற்பத்திகளை சந்தையில் மிகவும் போட்டிநிலைக்கு உள்ளாக்குவதற்கு இக்கருத்திட்டத்தின் கீழ் அனுகூலம் கிடைக்கிறது.



| | | |
|---|---|---|
| மொத்த விற்பனைகள் | - | ரூ.323,397,486 |
| வசதியளிக்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | - | 400 கைத்தொழில்கள் |
| விநியோகிக்கப்பட்ட மூலப்பொருள்களின் அளவு | - | 1,160.5 மெ.தொ. |
| விநியோகிக்கப்பட்ட மின்மாற்றிகளின் எண்ணிக்கை | - | 451 |

- **லக்கம் சந்தைப்படுத்தல் நிலையம்**

லக்கம் சந்தைப்படுத்தல் நிலையம் விளைதிறனைக் கட்டியெழுப்பும் நோக்குடன் கண்காட்சிகளையும் சந்தைப்படுத்தல் வசதிகளையும் வழங்கும் அதேவேளை, நாடெங்கும் வியாபித்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களதும் (SMIs) சுயதொழில்

முயற்சியாளர்களதும்(SEs) உற்பத்திகளின் சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கின்றது. இந்நிலையம் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களுக்கும் தனி தொழில்முனைவோருக்கும் அவர்களின் சந்தைப்படுத்தக்கூடிய உற்பத்திகளை போட்டிகரமான விலைகளின் கீழ் சந்தைப்படுத்துவதற்கான விற்பனைக் களமொன்றை அமைத்துக் கொடுப்பதுடன், அதற்கு அவசியமான சேவைகளையும் வழங்குகிறது. இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளின் விளைதிறனை அதிகரிப்பதுடன், நாடுதழுவிய ரீதியில் விற்பனைக்கு அவசியமான சந்தையை ஊக்குவிக்கும் நோக்குடன் கண்காட்சிகளையும் விற்பனை வசதிகளையும் அளிக்கிறது. மேலும், 'லக்கம் சின்னத்தின் கீழ் ஒவ்வொரு உற்பத்தியாளரதும் உள்ளூர் உற்பத்திகள் காட்சிப்படுத்தப்படுவதுடன், அவற்றை உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தையில் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுக்கிறது.

| | |
|---|---|
| மொத்த விற்பனைகள் | - ரூ.33,306,484.22 |
| புதிய கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ள சந்தை வாய்ப்புகளின் எண்ணிக்கை | - 26 கைத்தொழில்கள் |

- **உப ஒப்பந்த அலகு**

1982 ஆம் ஆண்டு முதல் உலக வங்கியினால் அரச மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்களின் ஒருங்கிணைப்புடன் சந்தைப்படுத்தல் பிரிவின் உப ஒப்பந்தப் பரிமாற்றத்திற்கு (SCX) நிதியளிக்கப்படுகிறது. இங்கு, IDB இனால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் வழங்கலுக்கும் கைத்தொழிலாளர்கள்/ சேவை வழங்குநர்கள் சார்பாக விலைகேட்புடன் (Bid) சம்பந்தப்படுகிறது. மரத் தளபாடங்கள், உருக்கு, அலுவலக கதிரைகளும் சோபாக்களும், தோல் சப்பாத்துக்களும் பைகளும், இறப்பர் சார்ந்த உதிரிப்பாகங்கள், ரி-சர்ட், கெப் தொப்பி, பாடசாலைப் புத்தகப் பைகள், எழுதுகருவிகள், அலுமினியத்தாலான கதவுகள், பெயர்ப்பலகைகள், அலுவலக பௌதிகப் பிரிவிடல்கள் முதலானவை அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் கட்டளைகளிற் சிலவாகும்.

| | | |
|---|---|---|
| மொத்த விற்பனைகள் | - | ரூ.2,312,804 |
| வசதியளிக்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | - | 02 |

- **கண்காட்சிகள்**

நாட்டின் மிகவும் கோடிட்டுக்காட்டத்தக்க தொழில்முனைவோரை இனமறிவதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபை மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோருக்கு (MSMEs) MSME வகுதியின் கீழ் கண்காட்சிகளை ஒழுங்கு செய்கிறது. மேலும், கைத்தொழில் சூழமையில் மிகவும் போட்டிகரமான வேலைவாய்ப்புகளை ஆரம்பிப்பதற்கு இக்கண்காட்சிகள் மூலம் வசதி அளிக்கப்படுகிறது.

**தேசிய மட்ட கைத்தொழில் கண்காட்சி – "கைத்தொழில் - 2022"**

இக்கைத்தொழில் கண்காட்சி இந்நாட்டில் பாரிய ஒரு கைத்தொழில் மறுமலர்ச்சிக்கு வித்திடுவதற்காக முடுக்கிவிடப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றுமொரு வெற்றிகரமான முன்னெடுப்பாகும். கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச்

சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட "கைத்தொழில் - 2022" கைத்தொழில் கண்காட்சி நாட்டின் 20 முன்னணிக் கைத்தொழில்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 300 கண்காட்சிக் கூடங்களைக் கொண்டதாகும்.




*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

2022 தேசிய கைத்தொழில் கண்காட்சிக்கு ஒருங்கியையாக முதல் தடவையாக சருவதேச அளவில் உள்நாட்டு வாகனக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதுவொரு மிகவும் முக்கியமான நிகழ்வாகும். இலங்கையில் வாகன உற்பத்தியாளர்களினாலும் வாகனங்கள் ஒன்றுகோர்ப்பவர்களினாலும் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட வாகனங்களின் பேரணியொன்று பௌத்தாலோக மாவத்தையில் நடைபெற்றது.




*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, இந்தியா, பங்களாதேஷ், மலேசியா ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், இந்திய மற்றும் வியட்நாம் தூதுவர்கள், பாகிஸ்தான் பிரதி உயர்ஸ்தானிகர், கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) திரு. தயா ரத்நாயக்க, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் திரு. உபசேன திசாநாயக்க, அதிகாரிகள் ஆகியோருடன் கைத்தொழிலாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


- **சிறப்பான செயற்பாடுகள்**

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் கைத்தொழிலாளர்களுடனும் பெரூல் மற்றும் கப்லிங்ஸ் (Ferrule & Couplings) தயாரிப்பதற்கு வாங்குநர்களும் விற்பனவாளர்களும் இணையும் கூட்டங்களை ஒழுங்கு செய்தல்.

இதனிடையே, அரச நிறுவனங்களுக்க்கு அவசியமான உலோகம் சார்ந்த பொருள்கள் மற்றும் துணையுறுப்புக்கள் சம்பந்தமாக கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் பதிவுசெய்துகொண்ட கைத்தொழிலாளர்களுடனும் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அலுவலர்களுடனும் அமுல்படுத்திய ஒரு கருத்திட்டம் பற்றிய கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இக்கலந்துரையாடலுக்கு அவசியமான துணையுறுப்புகளை அடையாளம் காணும் முறைமை மற்றும் அத்தகைய பொருள்களின் உற்பத்தி மற்றும் விநியோக முறைகள் குறித்து அந்நிறுவனம் அறிவுறுத்தப்பட்டது.


**அட்டவணை 4.5.1 : பிரிவின் முன்னேற்றப் பொழிப்பு**

| இல. | செயற்பாடு | திரண்ட நிதிசார் முன்னேற்றம் (ரூ) |
|---|---|---|
| (1) | கைத்தொழில்களுக்கான மூலப்பொருள்களை வழங்குதல். | 266,178,999 |
| (2) | உப ஒப்பந்த வசதிகளை வழங்குதல். | 2,312,804 |
| (3) | 'லக்கம்' காட்சிக்கூடம் ஊடாக சந்தை வாய்ப்புகளை வழங்குதல். | 22,333,889 |
| (4) | இலங்கை கைத்தொழில் கண்காட்சிகளின் ஊடாக சருவதேச மற்றும் உள்ளூர் சந்தைகளில் பிரவேசிப்பதற்கு கைத்தொழிலாளர்களுக்கு உதவுதல். | 71,132,821 |
| **மொத்தம்** | | **361,958,513** |



**அட்டவணை 4.5.2: உள்ளபடியான வருமானத்தின் வருடாந்த ஒப்பீடு**

| ஆண்டு | உள்ளபடியான வருமானம் (ரூ.மி.) |
|---|---|
| 2019 | 281.1 |
| 2020 | 259.6 |
| 2021 | 272.3 |
| 2022 | 361.9 |




உள்ளூர் கைத்தொழிலாளர்களின் கைத்தொழில்களை வர்த்தக ரீதியாக மூலவாய்ப்புவளமுள்ள நிறுவனங்களாக விஸ்தரித்துக்கொள்வதற்கு அவசியமான சேவைகளை ஊக்குவிப்பற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும், உதவியளிக்கும் அதிகாரம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தல் பிரிவுக்குள்ளது. மேலும், சந்தைப்படுத்தல் மூலோபாயத்தை நிறுவுவதன் மூலம் கைத்தொழில்களை அல்லது நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் சந்தைப்படுத்தலில் உதவும் மதியுரைச் சேவைகளும் வழங்கப்படுகிறது. திரண்ட நிதிசார் முன்னேற்றத்தை வருடாந்தம் ஒப்பிடும்போது, 2020–2022 வரை நிலையான வளர்ச்சியொன்றைச் சுட்டி நிற்கிறது. ஒப்பீட்டு ரீதியாக நோக்குமிடத்து, வார்ப்பட, மென் பொறியியல், கொல்லர் பட்டறை மற்றும் ஏனைய உலோக வார்ப்பட மற்றும் கைவினைத் தொழில்களில் ஈடுபடும் கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருள்களை/ பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை சகாய விலைகளின் அடிப்படையில் வழங்குவதன் மூலம் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த வருமானத்தில் 50% க்குக் கூடுதலான அளவை உருவாக்கியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் கொவிட் வைரஸ் பரவியமை இவ்வளர்ச்சிக் கட்டத்தில் அவர்கள் எதிர்நோக்கிய பெரும் தாக்கமொன்றாக இருந்தது. பெருந்தொற்று காலப்பகுதியில் வருமானம் வீழ்ச்சியடைந்த போதும், குறைபாடுகளைத் தவிர்த்துக்கொண்டு வருடாந்த முன்னேற்றத்தை நேர்ப்படியான செல்நெறியொன்றை நோக்கி மேம்படுத்துவதற்கு பிரிவினால் சில கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டைக் கருத்திற்கொள்ளும்போது, இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பிற்கான மிக முக்கிய அரச நிறுவனம் என்ற வகையில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து கைத்தொழில்

கண்காட்சியொன்றையும் விருது விழாவொன்றையும் ஒழுங்குசெய்துள்ளது. இந்நிகழ்வைச் சிறப்பிப்பதற்காக IDB இன் அனைத்துப் பிரிவுகளும் பிராந்திய அலுவலகங்களும் தமது உச்சளவான பங்களிப்பை வழங்கின. முக்கிய செயற்படுத்துகைப் பிரிவு என்ற வகையில் சந்தைப்படுத்தல் பிரிவினால் இயந்திர உபகரணங்கள், தொழில்நுட்பம், மூலப்பொருள்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்திச் சேவைகளின் புத்தாக்கங்களையும் உள்ளூர்க் கைத்தொழிலின் சிறப்புநிலையையும் உள்ளூர்/ சருவதேச சந்தைக்கு காட்சிப்படுத்துவதற்கு கண்காட்சியின் போது பல்வேறு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாவட்ட, மாகாண மற்றும் தேசியளவில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்வாண்மையினருக்கு கண்காட்சிகளை ஒழுங்குசெய்வதன் ஊடாக சந்தைப்படுத்தல் பிரிவு குறிப்பிடத்தக்க வருமானமொன்றை ஈட்டியுள்ளது. அதன் மூலம் கைத்தொழிலாளர்களுக்கு எதிர்கால வாடிக்கையாளர்களை அடைந்துகொள்வதற்கு, அவர்களைக் கவர்வதற்கு, அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. மேலும், கைத்தொழில் அபிவிருத்திச் சபை சார்பாக வெளிவாரி அமைப்புக்களினால் ஒழுங்குசெய்யப்படும் கண்காட்சிகளில் பங்குபற்றுவதற்கும், அவர்களுடன் நீண்டகாலத் தொடர்புகளைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கும் சந்தைப்படுத்தல் பிரிவு நடவடிக்கை எடுக்கிறது. தேசிய மற்றும் சருவதேச பங்குபற்றுநர்களுடன் வாங்குநர்களும் விற்பவர்களும் சம்பந்தப்படும் கூட்டங்களை ஒழுங்குசெய்தல், கைத்தொழில் ஊக்குவிப்புக்கான தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் துறைகளின் அடிப்படையில் போட்டிகளையும் தொழில்முயற்சிகளையும் நடாத்துவது ஆண்டுமுழுதும் மேற்கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சிலவாகும். பிரிவின் வருடாந்த செயலாற்றுகைக்கு அதன்மூலம் குறிப்பிடத்தக்களவான ஒரு பங்களிப்பு வழங்கப்படுகிறது.

# 4.6 திட்டமிடல் பிரிவு

## 4.6.1 அறிமுகம்

உலக பொருளாதாரம் வேகமாக மாறி வருவதும் தொழில்முயற்சி அபிவிருத்திச் சேவைகளின் போட்டிநிலையும் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கு மிகவும் தாக்கமுள்ள வகையில் சேவையாற்றுவதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபை சார்பாக மூலோபாய மீள்திட்டமிடல் மற்றும் மீள்பொருள்கோடல் செய்யும் சவால்மிகு பணிகள் திட்டமிடல் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

IDB இன் செயற்பாட்டுப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தைப் பரிசோதித்தலும் முன்னேற்ற அறிக்கைகளை பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சின் தகவலுக்கு அவ்வப்போது சமர்ப்பிப்பதும் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய செயற்பாடுகளாகும். மேலும், நிறுவன மூலோபாயத் திட்டத்தைத் திட்டமிடுதலும் தயாரித்தலும் பௌதிக மற்றும் நிதிசார் இலக்குகளின் அடிப்படையில் பிரிவுகளின் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுதலும் இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய செயற்பாடுகளிற் சிலவாகும். மீளாய்வு ஆண்டில் அப்பொறுப்புக்கள் தொடர்ந்தும் ஆற்றப்பட்டன. இது தவிர, நிரல் அமைச்சின் தேவைகளுக்கு அமைய சபையின் செயலாற்றுகை மதிப்பீடுகளுக்குரிய தகவல்கள் அவ்வப்போது வழங்கப்பட்டன.

## 4.6.2 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரிவின் முக்கிய செயற்பாடுகள்

### 1) வெளிவாரி நிதியங்களுக்கான (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) கருத்திட்ட முன்மொழிவுகளை/ பாதீட்டு முன்மொழிவுகளைத் தயாரித்து சமர்ப்பித்தல்

2022 ஆம் ஆண்டு சார்பாக அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் பின்வருமாறு:-

- ஜா-எல, ஏக்கல IDB கைத்தொழிற் பேட்டையின் உற்பத்திக் கைத்தொழில்களின் எரிசக்தி வினைத்திறனை முன்னேற்றுவதற்கான முன்னோடிக் கருத்திட்டம் - 2022/2023 (IDB - USAID)
- இலங்கையில் கைத்தொழில்களின் வானிலைத் துலங்கலை (Climate Response) துரிதப்படுத்துவதற்கான கருத்திட்டம் (ஐ.நா. கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு)

### 2) IDB க்கு 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தல்

உரிய காலப்பகுதியினுள் ஒவ்வொரு பிரிவினாலும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் அடங்கலான செயல்திட்டம் வருடாந்தம் தயாரிக்கப்படுகிறது. புதிய கைத்தொழில்களை (ஆரம்ப) நிறுவுதல் தற்போதைய கைத்தொழில்களுக்காக தொழில்முயற்சிகளை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள், நுண்பாகக் கைத்தொழில்களை ஆரம்பித்தல்/ முன்னேற்றுதல், சந்தை அணுகுமுறையும் பிற சேவைகளும், விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வருமான உருவாக்குகை சேவைகள் என்ற வகையில் ஒவ்வொரு பிரிவின் இலக்குகளும் செயற்பாடுகளும் ஆறு பகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 3) வருடாந்த செயல்திட்டம் பற்றிய மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்

செயல்திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவினாலும் அடையப்பெற்ற செயற்பாடுகளின் முன்னேற்றம் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் மேற்பார்வைசெய்யப்பட்டு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். சபையின் முழுதுமளாவிய முன்னேற்றம், நிதி மற்றும் பௌதிக ரீதியாக மதிப்பீடு செய்யப்படும்.

**4) மாதாந்த/ காலாண்டு/ வருடாந்த மூலதனப் பாதீட்டு மற்றும் அபிவிருத்திப் பாதீட்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்**

மூலதனப் பாதீட்டின் மூலம் கட்டுமான, மூலதனப் பண்டங்களைக் கொள்வனவு செய்தல், அபிவிருத்திப் பணிகள் போன்ற மூலதன முதலீடுகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது, கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் முதலீடு செய்தல், அபிவிருத்தி செய்தல் அல்லது பிரதான கொள்வனவு ஒன்றுக்கான முழுமுழுதுமளாவிய நிதிக் கோரிக்கைகளை எடுத்துக்காட்டும் ஒரு நீண்டகாலத் திட்டமாகும். நீண்டகால முயற்சிகள் முழுதுமளாவியதாக நிறுவனத்திற்கு இலாபகரமானதாக அமையுமா என்பதை பகுப்பாய்வு செய்வதற்கு நிதிப் பிரிவின் வழிகாட்டலுடன் இது தயாரிக்கப்படுகிறது.

**5) கருத்துருத் தாள்கள்/ அளவை அறிக்கைகள் முதலியவற்றைத் தயாரித்தல்.**

- 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சபைச் சட்டத்தைத் திருத்துதல்/ மீண்டும் வரைதல் மற்றும் செயல்வலுவூட்டுவதற்கான ஒரு பொறிமுறையை அபிவிருத்தி செய்தல் பற்றிய கருத்துருத் தாள்.

- உள்ளூர்க் கைத்தொழில் பிரிவுக்கு சந்தைப் பிரவேசத்தை உருவாக்குவதற்கும் முன்னேற்றுவதற்குமான கருத்திட்டம்.

- தேசிய மூலோபாயத் திட்டமொன்றைத் தயாரித்து சுதேச மருந்து உற்பத்திப் பிரிவை அபிவிருத்தி செய்தலும் ஊக்குவித்தலும்.

- நிதியுதவி தேவைப்படும் SMEs களுக்கான புதியதோர் அணுகுமுறையை அறிமுகப்படுத்தல் பற்றிய அறிக்கை.

- மொறட்டுவை தளபாட உற்பத்தியாளர்களுக்கான விசேட சிபார்சுடனான மரப்பலகை சார்ந்த கைத்தொழில்களுக்கு உப ஒப்பந்த வசதியளித்தல்.

- செயன்முறையை மேற்பார்வை செய்வதற்காக அமைச்சுக்களுக்கு இடையிலான குழுவொன்றை நியமிப்பதன் மூலம் உள்ளூர் தேய்காய் எண்ணெய்க் கைத்தொழிலையும், முழுதுமளாவியவாறு தெங்கு சார்ந்த கைத்தொழில் முறைமையையும் தேய்காய் எண்ணெய் வர்த்தகக் குறியையும் பாதுகாப்பதற்கு பலவின நடவடிக்கைகளை எடுத்தல்.

- SME தரவுத் தளத்தை அபிவிருத்தி செய்தல்.

**6) ஆண்டறிக்கையைத் தயாரித்தல் - 2021**

ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் நிறுவனத்தின் வரலாறு பற்றிய தகவல்களை வழங்குவதற்கும் சபையின் ஒவ்வொரு பிரிவின் பௌதிக முன்னேற்றத்தைப் பொழிப்பாக்குவதற்கும் ஆண்டறிக்கையொன்று தயாரிக்கப்படுகிறது. முகாமைத்துவ மீளாய்வு, துறைவாரியான முன்னேற்றம், நிதிச் செயலாற்றுகை மற்றும் கடந்த ஆண்டின் ஏனைய முக்கிய அடைவுகள் உள்ளிட்ட பல பிரிவுகளை ஆண்டறிக்கை உள்ளடக்கியிருக்கும். கடந்த ஆண்டின் செயலாற்றுகையை மீளாய்வு செய்யும் நோக்குடன் ஆண்டுதோறும் ஆண்டறிக்கை தயாரிக்கப்படுகிறது.

**7) மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்**

நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு ஒவ்வொரு பிரிவின் பங்களிப்பையும் மதிப்பீடு செய்வதற்கு பிரிவுத் தலைவர்களின் பங்கேற்புடன் மாதாந்த, ஆண்டு அடிப்படையில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

**8) மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களைத் தொடர்ந்து ஆண்டுக்குரிய மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல்**

**9) IDB இற்கு பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல்**

பெறுகைத் திட்டம் என்பது குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் பெறுகை செய்ய எதிர்பார்க்கப்படும் ஒவ்வொரு பிரிவினதும் தேவைகள் பட்டியல்படுத்தப்பட்ட ஆண்டுக்குரிய ஓர் ஆவணமாகும். தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பெறுகை ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தளிப்பும் தேவைகளை நிறைவேற்றலும் வரையான பெறுகைச் செயன்முறையின் ஒவ்வொரு படிமுறையையும் மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுக் கிரயம், நிதி மூலங்கள் மற்றும் பெறுகைத் திட்டம் குறிப்பிடப்படுகிறது.

**10) தேசிய கைத்தொழில் சிறப்பு விருதுகள் - 2022 இற்கு திட்டமிடல் பிரிவு CEDACS மற்றும் RDD உடன் இணைந்து செயலாற்றுதல். இச்சந்தர்ப்பத்தில் ஆற்றப்பட்ட கடமைகள் குறித்த ஒரு சுருக்கமான விபரம் கீழ் வருமாறு:-**

- நாடுபூராவும் பரந்துள்ள தலைசிறந்த கைத்தொழிலாளர்களை இனமறிவதற்கும் கண்காட்சிகளை ஒழுங்கு செய்வதற்கும் அவற்றில் கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பமளிப்பதன் மூலம் அவர்களுக்கு உதவுவதற்கும் தேசிய கைத்தொழில் சிறப்பு விருதுகள் - 2022 ஏற்பாடு செய்யப்படுகிறது. மறுதலையாக, கைத்தொழில்களை மேலும் முன்னேற்றுவதற்கும் விஸ்தரிப்பதற்கும் IDB இனால் வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:-

    - தெரிவுசெய்யப்பட்ட 20 கைத்தொழில் பிரிவுகளின் ஊடாக நாடுபூராவும் பரந்துள்ள தலைசிறந்த கைத்தொழிலாளர்களை இனமறிந்து அவர்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்துதலும் விருது வழங்குதலும்.

    - இந்நாட்டுக்கு தலைநகரில் நடைபெறும் பிரபல கண்காட்சிகளுக்கு மாகாண வெற்றியாளர்களுக்கு கலந்துகொள்வதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுத்து விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கை நடவடிக்கைகளில் கைத்தொழிலாளர்களுக்கு உதவுதல்.

    - தொழில்முயற்சிகளை முன்னேற்றுவதற்கும் விஸ்தரிப்பதற்கும் கைத்தொழிலாளர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குதல்.

- நாடு பூராவும் பரந்துள்ள கைத்தொழிலாளர்களை 20 பல்வேறு உற்பத்தித் துறைகளின் கீழ் தெரிவுசெய்து அவற்றை நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களாக ஒதுக்கீடு செய்தல்.

- பண்டாரநாயக்க கருத்தரங்கு மண்டப வளவில் நடைபெற்ற தேசிய கைத்தொழில் கண்காட்சிக்கு இணையொத்ததாக சிறந்த கைத்தொழிலாளர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டியை ஒழுங்கு செய்தல்.

| இல. | கைத்தொழில் துறை |
|---|---|
| 01 | பொதியிடல் மற்றும் காகிதம் சார் கைத்தொழில்கள். |
| 02 | பதனிட்ட உணவு மற்றும் அரிசி சார்ந்த கைத்தொழில்கள். |
| 03 | பலசரக்குகள் சார்ந்த கைத்தொழில்கள். |
| 04 | தும்பு மற்றும் நார்ப்பொருள் சார்ந்த கைத்தொழில்கள். |
| 05 | பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை மற்றும் பானங்கள் சார்ந்த கைத்தொழில்கள். |
| 06 | பாதணிகள், பதனிட்ட தோல், பதனிட்ட தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் அதனோடிணைந்த கைத்தொழில்கள். |
| 07 | இறப்பர், பிளாஸ்ரிக் மற்றும் அதனோடிணைந்த கைத்தொழில்கள். |
| 08 | உலோகங்கள், டை அன்ட் மோல்ட் இயந்திராதிகளுக்கான கருவிகள் மற்றும் அதனோடிணைந்த கைத்தொழில்கள். |
| 09 | மரப்பலகை, பலகை அடிப்படையிலான கைத்தொழில்கள், தளபாடக் கைத்தொழில்கள். |
| 10 | வாகனங்கள் ஒன்றுகோர்ப்பும் வாகனங்கள் சார்ந்த கைத்தொழில்களும். |
| 11 | மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களும் அதனோடிணைந்த கைத்தொழில்களும். |
| 12 | மேலைத்தேய, சுதேச மருந்துகளும் அவை சார்ந்த கைத்தொழில்களும். |
| 13 | கருங்கல், ஓடுகள், மட்பாண்டங்கள், பீங்கான் களி மற்றும் கட்டிடங்கள் சார்ந்த கைத்தொழில்கள். |
| 14 | படகுகள், துணையுறுப்புகள் மற்றும் மீன்பிடிக் கருவிகள் சார்ந்த கைத்தொழில்கள். |
| 15 | மை, இரசாயனப் பதார்த்தங்கள், அச்சீட்டுப் பொருள்கள் சார்ந்த கைத்தொழில்கள் |
| 16 | அழகுசாதனப் பொருள்கள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள். |
| 17 | இரத்தினக்கல் மறறும் ஆபணங்கள் சார்ந்த கைத்தொழில்கள். |
| 18 | பால் மற்றும் பால் சார்ந்த கைத்தொழில்கள். |
| 19 | கனிமங்கள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள். |
| 20 | ஆடை, புடவை மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள். |

- பத்திகைகள், கழகங்கள், இணையம் மற்றும் பல்வேறு விழிப்புணர்வூட்டல் நடபடிமுறைகளின் ஊடாக போட்டி பற்றி தொழில்முனைவோர் அறிவுறுத்தப்பட்டனர். பூரணமற்ற விண்ணப்பங்களை நீக்கி விட்டு பக்கச்சார்பற்ற நடுவர் குழாமொன்றினால் 900 கைத்தொழில்கள் பலிசீலிக்கப்பட்டு 80% புள்ளிகள் போட்டியாளர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களில் 20 துறைகளைச் சேர்ந்த பல்வேறு அளவிலான 202 போட்டியாளர்களை மாகாண வெற்றியாளர்களாகத் தெரிவுசெய்து அவர்களுக்கு கைத்தொழில் கண்காட்சியில் கண்காட்சிக் கூடமொன்றை நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எஞ்சிய 20% புள்ளிகள் செயலாற்றுகை மதிப்பீட்டின் போது வழங்கப்பட்டது.

- 117 கைத்தொழிலாளர்கள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள் அளவைக் கவனத்திலெடுத்து தங்கம், வெள்ளி, வெண்கலம், பிளாட்டினம் ஆகிய தேசிய விருதுகளுக்காக அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

- **மதிப்பீட்டுச் செயன்முறை**

  - **விண்ணப்பங்களைப் பரீட்சித்தல்**

உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சிக்கப்பட்டதுடன், பூரணமற்ற விண்ணப்பங்களை அனுப்பிவைத்த கைத்தொழில்கள் மற்றும் கோரப்பட்ட தகவல்களை வழங்கத் தவறிய கைத்தொழில்கள் முதற்கட்ட போட்டியிலிருந்து நீக்கப்பட்டன.

- **கைத்தொழில்களைப் பரீட்சித்தல்**

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிராந்தியப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், அனுபவமுள்ள வெளிநிலை மூன்றாம் தரப்பு குழு அங்கத்தவர்கள் நடுவர் குழாமில் அடங்குவர். புள்ளிவழங்கும் தேர்வளவுகளுக்கு அமைய குழாமினால் கம்பனியின் உரிமையாளர்களுடனும் பணியாட்குழுவுடனும் நேர்காணல்களை நடாத்தி அனைத்து தொழிலிடங்களிலும் கூடங்களிலும், வேலைச் சூழலும் சுற்றுப்பகுதிகளும் பரிசோதிக்கப்பட்டன. அதற்கமைய, எழுத்திலான சான்றுகள் குறித்து விசாரித்து சுயாதீனமாக புள்ளிகள் வழங்கப்பட்டன. இறுதியில், கைத்தொழில் பரீட்சிப்பைத் தொடர்ந்து 800 இல் புள்ளிகள் வழங்கப்பட்டன. உரிய மட்டத்தைத் தாண்டிய கைத்தொழிலாளர்களுக்கு மேலும் போட்டியைத் தொடர வழிவகை செய்யப்பட்டது.

- **கூடங்களைப் பரீட்சித்தல்**

கைத்தொழில்களின் பரீட்சிப்பின் போது மொத்த புள்ளிகளின் அளவில் 70% க்குக் கூடுதலான அளவைப் பெற்றுக்கொண்ட மாகாண வெற்றியாளர்களுக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளவில் நடைபெற்ற கண்காட்சியின் போது கூடமொன்று ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு வெளியிலிருந்து வந்த 3 யூரர் சபை அங்கத்தவர்களினால் 20 பலவின தேர்வளவுகளின் அடிப்படையில் இப்பிரிவின் கீழ் புள்ளி வழங்கப்பட்டது. கண்காட்சிக் கூடத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தப் புள்ளிகளின் அளவு 200 ஆகும். கண்காட்சியின் முதல் நாளில் காட்சிப் பொருள்கள் எவற்றையும் விற்பனை செய்வது போட்டிக்கான தகைமையீனமொன்றாகக் கருதப்பட்டது.

**11) IDB** இன் ஏனைய திணைக்களச் செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக பின்வரும் உப பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டது:-

- IDB இன் கட்டாயமான நோக்கங்களுக்கு அமைவான கொள்கைகளையும் மூலோபாயங்களையும் உருவாக்குதல்.
- தொழில்முயற்சிகள்/ கைத்தொழில்கள் சார்ந்த அளவைகளை நடாத்துவதற்கு வசதியளித்தல், கைத்தொழில்கள்/ பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்களை இற்றைப்படுத்துதலும் குறித்த பிரிவின் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு உதவுதலும்.
- வெளிநாட்டு நிதிக்கான அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகளையும் கருத்துருத் தாள்களையும் தயாரித்தல்.
- தற்போதுள்ள கைத்தொழில்கள் சார்ந்த கொள்கை வகுப்புக் குழுக்களுக்கு IDB இன் பங்கேற்பை உறுதிசெய்தலும் தேவைப்படும்போது கொள்கைப் பத்திரங்களைத் தயாரித்தலும்.
- ஒவ்வொரு நிதி ஆண்டுக்கும் உரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
- அமைச்சிற்கான செயற்பாடுகள் குறித்த காலாண்டு மீளாய்வை மும்மொழிகளிலும் தயாரித்தல்.

## 4.7 பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

### 4.7.1 அறிமுகம்

IDB இனால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மாவட்ட வாரியாக அமுல்படுத்தும் பொறுப்பு IDB இன் பிராந்திய அபிவிருத்திப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாட்டின் மொத்தம் இருபத்தைந்து (25) மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் தமது பிராந்திய வலையமைப்பின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்கள் (SME) பிரிவை அபிவிருத்தி செய்வதற்கு பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD) மிகச் சிறப்பாக பங்காற்றுகின்றது. தொழில்முனைவோருக்கு புதிய கைத்தொழில்களை நிறுவுவதற்கும் விரிவாக்கல் சேவைகளை வழங்குவதன் மூலம் தற்போதுள்ள கைத்தொழில்களை விஸ்தரிப்பதற்கு உதவுதலும் பிராந்திய அலுவலகங்களில் கடமைக்கு இணைக்கப்பட்டுள்ள பிரதிப் பணிப்பாளர்களினதும்/ உதவிப் பணிப்பாளர்களினதும் முயற்சியாண்மை ஊக்குவிப்பு முகாமையாளர்களினதும்/முயற்சியாண்மை ஊக்குவிப்பு அலுவலர்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு IDB இனால் மாவட்ட வாரியாக முடுக்கிவிடப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதே இப்பிரிவின் முக்கிய பணியாகும். பிராந்திய கைத்தொழில் பொருளாதார அறிக்கைகளைத் தயாரித்தல், புதிய MSMEs களை நிறுவுதல், தற்போதைய கைத்தொழிலாளர்களின் அபிவிருத்தி, ஏற்றுமதிக்கு தயாராகவுள்ள கம்பனிகளாக SMEs க்களை அறிமுகப்படுத்துதல், ஊக்குவித்தல் என்பன இந்நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய கருத்திட்டங்களாகும்.

**பிராந்திய வலையமைப்பு**





| இல. | மாவட்ட அலுவலகம் |
|---|---|
| 1 | அம்பாறை |
| 2 | அநுராதபுரம் |
| 3 | பதுளை |
| 4 | மட்டக்களப்பு |
| 5 | கொழும்பு |
| 6 | காலி |
| 7 | கம்பஹா |
| 8 | அம்பாந்தோட்டை |
| 9 | யாழ்ப்பாணம் |
| 10 | களுத்துறை |
| 11 | கண்டி |
| 12 | கேகாலை |
| 13 | குருநாகல் |
| 14 | மாத்தளை |
| 15 | மாத்தறை |
| 16 | மொணராகலை |
| 17 | நுவரெலியா |
| 18 | பொலன்னறுவை |
| 19 | புத்தளம் |
| 20 | இரத்தினபுரி |
| 21 | திருகோணமலை |
| 22 | வவுனியா |
| 23 | கிளிநொச்சி |
| 24 | முல்லைத்தீவு |
| 25 | மன்னார் |

### 4.7.2 ஆண்டின் செயலாற்றுகை

அட்டவணை 4.7.1 : முன்னேற்றப் பொழிப்பு - 2022

| # | பெறுபேறு | மு.செ.கு. (KPIs) | திரண்ட | | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவு | |
| 1 | தாபிக்கப்பட்ட புதிய கைத்தொழில்கள் (ஆரம்பநிலை) | நிறுவப்பட்ட புதிய கைத்தொழில்களின் (தொடக்கநிலை) எண்ணிக்கை | 300 | 153 | 51 |
| 2 | தரமுயர்தப்பட்ட தற்போதைய கைத்தொழில்கள் | முன்னேற்றப்பட்ட இன்றைய கைத்தொழில்களின் எண்ணிக்கை | 700 | 452 | 65 |
| 3 | தாபிக்கப்பட்ட/ தரமுயர்த்தப்பட்ட நுண்பாகக் கைத்தொழில்கள் | நிறுவப்பட்ட/ முன்னேற்றப்பட்ட நுண்பாகக் கைத்தொழில்களின் எண்ணிக்கை | 500 | 533 | 107 |
| கிரயம் / செலவு (ரூ.மி.) | | | 12.85 | | |
| ஈட்டல்கள் / வருமானம் (ரூ.மி) | | | 22.04 | | |




2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான
இலக்குகள் மற்றும் அடைவுகளுடன் மாவட்ட வாரியான முன்னேற்றப் பொழிப்பு

அட்டவணை 4.7.2 : கைத்தொழில்களை நிறுவுவதற்கும் முன்னேற்றுவதற்கும் உதவுதல்

| # | மாவட்டம் | பெறுபேறு | | | | | | கிரயம் (மி.ரூ.) | ஈட்டல்கள் (மி.ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தாபிக்கப்பட்ட புதிய கைத்தொழில்களின் எண்ணிக்கை | | தரமுயர்த்தப்பட்ட தற்போதைய கைத்தொழில்களின் எண்ணிக்கை | | தாபிக்கப்பட்ட / தரமுயர்த்தப்பட்ட நுண்பாகக் கைத்தொழில்களின் எண்ணிக்கை | | | |
| | | இலக்கு | அடைவு | இலக்கு | அடைவு | இலக்கு | அடைவு | | |
| 01 | அம்பாறை | 4 | 4 | 5 | 7 | 17 | 20 | 0.03 | 0.12 |
| 02 | அநுராதபுரம் | 12 | 3 | 27 | 13 | 16 | 21 | 0.24 | 0.56 |
| 03 | பதுளை | 12 | 16 | 26 | 20 | 18 | 19 | 0.54 | 0.01 |
| 04 | மட்டக்களப்பு | 6 | 5 | 25 | 3 | 18 | 20 | 0.11 | 0.28 |
| 05 | கொழும்பு | 22 | 3 | 50 | 35 | 25 | 45 | 0.36 | 1.17 |
| 06 | காலி | 20 | 9 | 50 | 36 | 25 | 22 | 0.62 | 1.21 |
| 07 | கம்பஹா | 22 | 5 | 50 | 27 | 25 | 27 | 0.65 | 1.96 |
| 08 | அம்பாந்தோட்டை | 12 | 12 | 26 | 24 | 18 | 33 | 0.54 | 1.00 |
| 09 | யாழ்ப்பாணம் | 8 | 8 | 26 | 36 | 22 | 25 | 0.94 | 1.34 |
| 10 | களுத்துறை | 16 | 3 | 50 | 16 | 30 | 20 | 2.76 | 3.24 |
| 11 | கண்டி | 22 | 8 | 50 | 33 | 25 | 37 | 0.76 | 2.12 |
| 12 | கேகாலை | 14 | 5 | 31 | 28 | 21 | 29 | 1.02 | 0.20 |
| 13 | கிளிநொச்சி | 6 | 4 | 15 | 12 | 17 | 17 | 0.08 | 0.07 |
| 14 | குருணாகல் | 22 | 11 | 50 | 42 | 25 | 33 | 0.46 | 0.73 |
| 15 | மன்னார் | 6 | 6 | 15 | 12 | 15 | 15 | 0.21 | 0.13 |
| 16 | மாத்தளை | 12 | 6 | 26 | 8 | 18 | 16 | 0.78 | 1.31 |
| 17 | மாத்தறை | 20 | 15 | 50 | 34 | 25 | 27 | 0.64 | 0.83 |
| 18 | மொணராகலை | 4 | 2 | 5 | 5 | 17 | 22 | 0.11 | 0.20 |
| 19 | முல்லைத்தீவு | 4 | 3 | 5 | 1 | 17 | 0 | 0.00 | 0.00 |
| 20 | நுவரெலியா | 4 | 2 | 5 | 6 | 17 | 17 | 0.22 | 0.39 |
| 21 | பொலன்னறுவை | 12 | 8 | 26 | 9 | 18 | 16 | 0.28 | 0.43 |
| 22 | புத்தளம் | 14 | 3 | 31 | 5 | 21 | 5 | 0.31 | 0.84 |
| 23 | இரத்தினபுரி | 14 | 3 | 26 | 20 | 18 | 21 | 0.63 | 0.90 |
| 24 | திருகோணமலை | 6 | 6 | 15 | 7 | 15 | 15 | 0.28 | 0.40 |
| 25 | வவுனியா | 6 | 3 | 15 | 13 | 17 | 11 | 0.16 | 0.33 |

அட்டவணை 4.7.3 : அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை, மொத்த முதலீடு, தொழில்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக

| # | மாவட்டம் | முயற்சியாண்மைகளின் எண்ணிக்கை | | | மொத்த முதலீடு (ரூ.மி.) | | | தொழில்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | புதிய கைத்தொழில்கள் | நுண்பாகக் கைத்தொழில்கள் | தற்போதுள்ள கைத்தொழில்கள் | புதிய கைத்தொழில்கள் | நுண்பாகக் கைத்தொழில்கள் | தற்போதுள்ள கைத்தொழில்கள் | புதிய கைத்தொழில்கள் | நுண்பாகக் கைத்தொழில்கள் | தற்போதுள்ள கைத்தொழில்கள் |
| 1 | அம்பாறை | 3 | 14 | 7 | 105.6 | 7.35 | 493.9 | 38 | 36 | 149 |
| 2 | அநுராதபுரம் | 3 | 21 | 13 | 3.35 | 7.845 | 57.7 | 5 | 37 | 181 |
| 3 | பதுளை | 9 | 14 | 21 | 27.45 | 16.057 | 1818.11 | 36 | 18 | 497 |
| 4 | மட்டக்களப்பு | 5 | 18 | 3 | 8.3 | 24.6 | 16 | 29 | 76 | 34 |
| 5 | கொழும்பு | 2 | 37 | 28 | 55 | 24.845 | 2826.82 | 18 | 99 | 851 |
| 6 | காலி | 8 | 22 | 32 | 49.5 | 39.185 | 2334.3 | 44 | 54 | 1329 |
| 7 | கம்பஹா | 4 | 15 | 24 | 24 | 35.67 | 1914 | 22 | 59 | 677 |
| 8 | அம்பாந்தோட்டை | 7 | 16 | 15 | 17.46 | 16.92 | 225.64 | 99 | 31 | 238 |
| 9 | யாழ்ப்பாணம் | 6 | 25 | 19 | 13.62 | 31.25 | 588.5 | 24 | 81 | 542 |
| 10 | களுத்துறை | 3 | 24 | 16 | 95.25 | 115.6655 | 186.34 | 68 | 42 | 157 |
| 11 | கண்டி | 8 | 34 | 26 | 38.5 | 75.755 | 830.45 | 32 | 65 | 852 |
| 12 | கேகாலை | 8 | 27 | 28 | 143.4 | 35.395 | 2284.7 | 50 | 54 | 981 |
| 13 | கிளிநொச்சி | 3 | 1 | 8 | 32 | 3 | 53 | 17 | 3 | 63 |
| 14 | குருணாகல் | 11 | 31 | 34 | 197.1 | 42.99 | 1646.35 | 167 | 69 | 665 |
| 15 | மன்னார் | 6 | 15 | 12 | 14.7 | 34.9 | 113.5 | 18 | 44 | 76 |
| 16 | மாத்தளை | 5 | 13 | 8 | 52.7 | 15.7 | 197.45 | 39 | 19 | 73 |
| 17 | மாத்தறை | 12 | 28 | 31 | 94.9 | 28.5 | 1419.7 | 28 | 39 | 1625 |
| 18 | மொணராகலை | 2 | 15 | 4 | 22.07 | 21.01 | 44.18 | 12 | 31 | 27 |
| 19 | முல்லைத்தீவு | 3 | 14 | 1 | 10.5 | 5.065 | | 9 | 45 | |
| 20 | நுவரெலியா | 2 | 1 | 4 | 8.8 | 0.3 | 6.45 | 12 | 2 | 54 |
| 21 | பொலன்னறுவை | 8 | 10 | 8 | 13.91 | 18 | 299.5 | 20 | 16 | 65 |
| 22 | புத்தளம் | 4 | 4 | 7 | 386 | 9.7 | 261.2 | 119 | 17 | 130 |
| 23 | இரத்தினபுரி | 4 | 16 | 17 | 12.4 | 14.27 | 1092.6 | 17 | 26 | 432 |
| 24 | திருகோணமலை | 5 | 14 | 7 | 13.5 | 23.585 | 55.7 | 26 | 54 | 41 |
| 25 | வவுனியா | 3 | 11 | 13 | 4.2 | 28.4 | 279.9 | 7 | 28 | 191 |
| **மொத்தம்** | | **134** | **440** | **386** | **1,444.21** | **675.957501** | **19,045.99** | **956** | **1045** | **9,930** |



வரைபு 4.7.2 : மாவட்ட வாரியாக தாபிக்கப்பட்ட புதிய, நுண்பாக மற்றும் தற்போதுள்ள கைத்தொழில்கள்

## 4.7.3 பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட விசேட செயற்பாடுகள் / நிகழ்வுகள்

➢ **"Get Up - Start Up for a Wealthy Nation" தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

Getup Startup for a Wealthy Nation தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு-2022 ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சருவதேச மாநாட்டு மண்டப வளவில் நடைபெற்றது. கௌரவ அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரண அவர்களின் கருத்துருப்படி கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் இலங்கை எங்கும் தொழில்முனைவோரையும் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்து ஒரு செல்வந்த நாட்டை உருவாக்க இலக்கிடப்பட்டுள்ளது. அதற்கமைய, கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் அரச மற்றும் அரசல்லாத அமைப்புக்கமைப்புகளுடன் ஒத்துழைத்து இக்கருத்துருவை அமுல்படுத்துவதற்கு புதிய கருத்துருக்களும் நடவடிக்கைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் இலக்குக் குழுவினருக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்கு செல்லிட செயலி (Mobile APP), 1995 துரித அழைப்பு இலக்கம், வட்ஸ் எப் இலக்கம் (070-5001995) ஆகியவற்றை IDB அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், முயற்சியாண்மை அபிவிருத்திக்கான வர்த்தக மற்றும் பாடசாலை முயற்சியாண்மை வட்டங்கள் என்ற புதியதொரு கருத்துருவும் அறிமுகம்செய்யப்பட்டது. கடன் பெற விண்ணப்பிக்கும் போது முயற்சியாண்மை வசதியளிப்பதற்கு HDFC வங்கியுடனும் SDB வங்கியுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல், "ஒரு செல்வந்த நாட்டிற்கான வழிகாட்டல்" என்ற கைந்நூலை வெளியிடுதல் பிரதேச அபிவிருத்திப் பிரிவுடன் இணைந்த இச்சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற மற்றும் சில செயற்பாடுகளாகும்.











*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

- **HDFC வங்கிக்கும் IDB க்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்**

‘சௌபாக்ய’ (சுபீட்சம்) என்ற கடன் திட்டத்திற்கமைய HDFC வங்கிக்கும் IDB க்கும் இடையிலான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம், 2022 ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இலங்கையின் தொழில்முனைவோருக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் வங்கியிலிருந்து நிதி உதவியையும் கடன் வசதிகளையும் பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டுவதற்காக இதன் மூலம் வசதியளிக்கப்படுகிறது. பிராந்திய அபிவிருத்திப் பிரிவு குறிப்பாக மாவட்ட அலுவலகங்கள், வங்கிகளுடனான ஒருங்கிணைப்புடன் தொழில்முனைவோருக்கு உதவும்.

- **SDB வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்**

‘சௌபாக்ய’ (சுபீட்சம்) என்ற கடன் திட்டத்திற்கமைய SDB வங்கிக்கும் IDB க்கும் இடையிலான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம், 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இலங்கையின் தொழில்முனைவோருக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் வங்கியிலிருந்து நிதியுதவியையும் கடன் வசதியையும் பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டுவதற்கு இதன் மூலம் வசதியளிக்கப்படுகிறது. பிராந்திய அபிவிருத்திப் பிரிவு குறிப்பாக மாவட்ட அலுவலகங்கள், வங்கியுடனான ஒருங்கிணைப்புடன் தொழில்முனைவோருக்கு உதவும்.

- **“Getup Startup Wealthy Nation” தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரிய IDB மற்றும் மாவட்ட செயலாளர்களுடனான கூட்டங்கள்**

Getup Startup Wealthy Nation நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒருங்கியையாக, அது சம்பந்தமாக மாவட்ட செயலாளர்களையும் அரச அதிகாரிகளையும் அறிவுறுத்துவதற்கு IDB இனால் மாவட்ட வாரியாக மாவட்ட செயலாளர் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. IDB இன் தவிசாளர், பணிப்பாளர் நாயகம், பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோர் இக்கூட்டங்களில் கலந்து கொண்டனர். இதன் முதற் கூட்டம் 2022 திசெம்பர் மாதம் 13 ஆம் திகதி கேகாலை மாவட்டத்தில் நடைபெற்றது. மாத்தறை மாவட்டக் கூட்டம் 2022 திசெம்பர் மாதம் 15 ஆம் திகதியும், வவுனியா மாவட்டக் கூட்டம் 2022 திசெம்பர் மாதம் 20 ஆம் திகதியும், கண்டி மாவட்டக் கூட்டம் 2022 திசெம்பர் மாதம் 22 ஆம் திகதியும், கிளிநொச்சி மாவட்டக் கூட்டம் 2022 திசெம்பர் மாதம் 21 ஆம் திகதியும் நடைபெற்றது. 2023 ஆம் ஆண்டில் எஞ்சிய ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

*மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

- **முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கத்திற்கும் IDB இற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்**




முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு புதியதொரு தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்கு வசதியளிக்குமுகமாக "Getup Startup Wealthy Nation" எனும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒருங்கியையாக முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கத்திற்கும் IDB இற்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் முயற்சியாண்மைப் பயிற்சியை வழங்கி வழிகாட்டுவது பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் நோக்கமாகும்.


**அட்டவணை 4.7.4 : பிரிவின் முன்னேற்றம்**

| செயற்பாட்டு இல. | செயற்பாடு | செயல்திறன் குறிகாட்டி | திரண்ட நிதிசார் முன்னேற்றம் (ரூ) |
|---|---|---|---|
| **1.** | **புதிய கைத்தொழில்களை நிறுவுதல் (ஆரம்பநிலை)** | | |
| 1.1 | பொறியியல் மற்றும் தொழில்நுட்ப உதவியளித்தல் | வழங்கப்பட்ட உதவிகளின் எண்ணிக்கை | 77,300 |
| 1.2 | நிதி வசதியளிப்பதற்கு ஒருங்கிணைப்புச் செய்தல் | பெற்றுக்கொண்ட வசதிகளின் எண்ணிக்கை | 11,000 |
| **2.** | **தற்போதுள்ள கைத்தொழில்களுக்கு தொழில்முயற்சிகளை தரமுயர்த்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்** | | |
| 2.1 | சுற்றாடல் உதவியளித்தல் | உதவிய சந்தர்ப்பங்களின் எண்ணிகை | 3,000 |
| 2.2 | பொறியியல் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி உதவியளித்தல் | வழங்கப்பட்ட உதவிகளின் எண்ணிக்கை | 184,240 |
| 2.3 | நிதி வசதியளிப்பதற்கு ஒருங்கிணைப்புச் செய்தல் | பெற்றுக்கொண்ட வசதிகளின் எண்ணிக்கை | 60,350 |
| **3.** | **நுண்பாக கைத்தொழில்களை ஆரம்பித்தல் / தரமுயர்த்துதல்** | | |

| | | | |
|---|---|---|---|
| 3.1 | சுற்றாடல் உதவியளித்தல் | உதவிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | 6,062 |
| 3.2 | பொறியியல் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி உதவியளித்தல் | வழங்கப்பட்ட உதவிகளின் எண்ணிக்கை | 287,881 |
| 3.3 | நிதி வசதியளிப்பதற்கு ஒருங்கிணைப்புச் செய்தல் | பெற்றுக்கொண்ட வசதிகளின் எண்ணிக்கை | 4,100 |
| **4. சந்தைப் பிரவேசமும் வேறு சேவைகளும்** | | | |
| 4.1 | முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | நடாத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை | 122,000 |
| 4.2 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் (சந்தைப்படுத்தல், தொழில்நுட்ப, முகாமைத்துவ, விளைதிறன், பொதியியல் முதலான) | நடாத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை | 8,426,509 |
| 4.3 | முயற்சியாண்மை/மகளிர் முயற்சியாண்மை அபிவிருத்தி (ED) பயிற்சிகளை நடாத்துதல் | நடாத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை | 57,000 |
| **5. விசேட சேவைகள்** | | | |
| 5.1 | வியாபார உரிமையாளர்களுக்கு முகாமைத்துவத் திறன்களை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டம் | நடாத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை | 30,000 |
| **6. வருமான உருவாக்குகைச் சேவைகள்** | | | |
| 6.1 | வேறு விசேட சேவைகள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் (உதாரணம்: மகாவலி மற்றும் தொடர்புடைய கருத்திட்டங்கள்) | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 4,881,625 |
| 6.2 | கித்துள் சீவுவோருக்கு கெஸ்பர் போத்தல்களை விற்பனை செய்தல் | விற்கப்பட்ட போத்தல்களின் எண்ணிக்கை | 2,011,475 |
| 6.3 | உலோகங்களை அடிப்படையாக்கொண்ட மூலப்பொருள்களை விநியோகித்தல் | விநியோகித்த மெட்ரிக் தொன்களின் எண்ணிக்கை | 4,833,966 |
| 6.4 | கருத்திட்ட அறிக்கைகளை/மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல் | வருமான உருவாக்குகை (ரூ.மி.) | 1,013,087 |
| 6.5 | நிதி பெற்றுக்கொள்வதற்கு கருத்திட்டப் பிரேரணைகளை உருவாக்குதல் | பூர்த்திசெய்யப்பட்ட யோசனைகளின் எண்ணிக்கை | 26,200 |
| **மொத்தம் (ரூ)** | | | **22,035,795** |

**அட்டவணை 4.7.5 : வருமானம் - வருடாந்த ஒப்பீடு**

| # | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|
| இலக்கிட்ட வருமானம் | 6.85 | 22.18 | 11.74 | 21.93 |
| உள்ளபடியான வருமானம் | 12.46 | 15.76 | 9.88 | 22.04 |




பிராந்திய பணியாட்குழுவினால் நடாத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களதும் விரிவாக்கல் செயற்பாடுகளதும் நெறிப்படுத்தலும் மேற்பார்வையும் பிராந்திய அபிவிருத்திப் பிரிவினால் (RDD) மேற்கொள்ளப்படுகிறது. கைத்தொழிலாளர்களுக்கும் தொழில்முனைவோருக்கும் நாட்டின் பல்வேறு பாகங்களில் தமது வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவுவதே இப்பிரிவின் முக்கிய நோக்கமாகும். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் காணப்படும் இப்பிராந்திய அபிவிருத்திப் பிரிவு சபையின் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக பங்களிப்பு வழங்கும் பொருட்டு 4 முக்கிய துறைகளின் கீழ் இயங்குகிறது. 25 மாவட்டங்களில் கைத்தொழில்களின் பொருளாதார நிலையை அடையாளம் காணல், கைத்தொழில்களை உருவாக்குதல், தற்போதுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளை ஊக்குவித்தலும் அபிவிருத்திசெய்தலும், பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் பணியாட்குழுவிலும் பிராந்திய பணியாட்குழுவின் ஆற்றல் அபிவிருத்தியும் அந்த நான்கு செயன்முறைகளாகும். உள்ளபடியான மற்றும் இலக்கிட்ட வருமானப் பாய்ச்சலின் விரிவாக்கம் பற்றி கவனிக்கும் போது உயர் விலகல்களுடன்கூடிய சாதகமான, பாதகமான வெற்றிடங்களைக் காண முடிகிறது. 2019 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் இலக்கு வருமானத்தை விட அதிகரித்திருந்ததுடன், அது பிராந்திய வலையமைப்பின் சிறந்த செயலாற்றுகை பற்றிய சிறந்த சுட்டிப்பாகும். எனினும், 2020 ஆம் ஆண்டில் கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை பரவியதன் காரணமாக அசல் வருமானத்தில் பாரியதொரு வீழ்ச்சி ஏற்பட்டது. பெருந்தொற்றினால் இலங்கையின் வர்த்தக, பொருளாதார மற்றும் கைத்தொழில் துறை மீது பாரியதொரு பின்னடைவு ஏற்பட்டது. வர்த்தகப் பண்ட வியாபாரம், வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் (FDI) பாய்ச்சல்கள், சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் எல்லை தாண்டிய குடியேற்றம் (cross-border migration) முதலியவற்றில் முன்னெப்போதும் இல்லாதவாறான குறைவொன்று பொருளாதார வீழ்ச்சியின் பண்புகளாகும். இது, இலங்கையின் நிறுவனங்களுக்கும் IDB இன் செயற்பாட்டுக்கும் குறிப்பிடத்தக்க அளவில் பாதிப்புச் செலுத்தியுள்ளது. இருப்பினும், புதிய சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோரையும் நுண் கைத்தொழில்களையும் உருவாக்குதல், தற்போதுள்ள கைத்தொழில்களை முன்னேற்றுதல், ஏற்றுமதிக்குத் தயாரான கம்பனிகள் என்ற வகையில் கைத்தொழில்களை அறிமுகப்படுத்தல், ஊக்குவித்தல் போன்ற RDD இன் பிரதான செயலாற்றுகைத் துறைகள் மீது கூடுதல் கவனம் செலுத்தி முறைப்படியாக சரியான பாதையில் பிரவேசிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளில் ஏராளமான தடைகளை வெற்றிகொண்டு இலக்கை நோக்கி நகர்ந்தமையால், 2022 ஆம் ஆண்டு பிராந்திய அபிவிருத்திப் பிரிவுக்கு சுபீட்சமான ஓராண்டாக விளங்கியது.

இருப்பினும், IDB இன் ஒட்டுமொத்த பெறுபேறு ஒவ்வொரு பிரிவின் பங்களிப்பின் மீது பெரிதும் தங்கியுள்ளது. RDD மற்றும் பிராந்திய வலையமைப்பு IDB இன் மிகவும் பயன்கூர் பிரிவொன்றாகும். ஆகையால், இலக்கிட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையில் பாரிய விலகல்களைத் தவிர்த்துக்கொண்டு செயலாற்றுகையின் சீரான போக்கை முகாமைசெய்வதற்கு அவர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். பணியாட்குழு தமது பங்களிப்பை உயர்ந்தபட்சம் வழங்கவில்லையெனில், போட்டிகரமாக இயங்குவது சிரமமானதே. ஆகையால், பணியாட்குழுவின் விளைதிறனை ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்திற்கு முன்னேற்றுவதற்கு, அவர்கள் சார்பாக மற்றும் பயிற்சி அமர்வுகளை ஒழுங்குசெய்வது மிகவும் வாய்ப்பானதாகும். பிரிவுகளின் இலக்குகளை அடைந்துகொள்ளும் போது இசைவற்ற, மாறுபட்டநிலையை ஒழிப்பதற்கு இறுதியில் அது உதவும்.

## 4.8 தொழில்நுட்ப சேவைப் பிரிவு (TSD)

### 4.8.1 அறிமுகம்

தொழில்நுட்ப சேவைப் பிரிவு (TSD) என்பது இலங்கையின் கைத்தொழில் சமூகத்தின் தொழில்நுட்பத் தேவைகளை நிறைவேற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முக்கிய ஒரு பிரிவாகும். தொழில்முயற்சிகளுக்கு புதிய கைத்தொழில் கருத்துருவாக்கத்திலிருந்து தொழிற்படுவது வரையும் தற்போதைய கைத்தொழில்களை விஸ்தரித்தல், நவீனமயப்படுத்தல், பல்வகைப்படுத்தல், தரத்தையும் விளைதிறனையும் முன்னேற்றுவதற்கு தொழில்நுட்ப உதவியை வழங்குதல் ஆகியன TSD இன் முக்கிய குறிக்கோள்களாகும். உணவுகள், இரசாயனப் பதார்த்தங்கள், எண்ணெய் வகை மற்றும் நார்கள், கட்டிடப் பொருள்கள், கணினித் தொழில்நுட்பம் ஆகிய 5 உப பிரிவுகளின் ஊடாக TSD இன் சேவைகள் வழங்கப்படுகின்றன. பலமான, நடைமுறைச் சாத்தியமான, கூறமைதியொன்றுடன்கூடிய ஒருநாள் தொழில்நுட்பப் பரிமாற்றுச் செயலமர்வுகளும் கைத்தொழில் சான்றிதழ் பாடநெறிகளும் மூலம் முக்கியமாக தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகிறது.

### 4.8.2 செயலாற்றுகை சிறப்புக்கூறுகள்

தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது TSD இனால் 2022 செயல்திட்டம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்கால தொழில்முனைவோரின் குறிப்பான தேவைகளை நிறைவேற்றுவதற்கும் IDB இன் தரநியமத்தை மேம்படுத்துவதற்கும் அதன் முக்கிய செயற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு:-

- **தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை/ செயலமர்வுகளை/ செய்துகாட்டல்களை நடாத்துதல்**

தொழில்நுட்ப சேவைப் பிரிவிலும் அதற்கு வெளியிலும் உணவு, இரசாயனப் பதார்த்தங்கள், எண்ணெய், நார்ப் பொருள்கள் மற்றும் கட்டுமானப் பொருள்கள் என்ற உப பிரிவுகளின் கீழ் 88 தொழில்நுட்பப் பரிமாற்று பாடநெறிகள் நடாத்தப்பட்டன. மொத்தம் 3,349 பேர் பயிற்சிகளில் கலந்துகொண்டனர். இச்செயலமர்வுகளின் ஊடாக ரூ.14,136,000 வருமானம் ஈட்ட முடிந்தது.

- **கேள்விக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட பிரிவை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.**

**அட்டவணை 4.8.1 : நிகழ்ச்சித்திட்டப் பொழிப்பு**

| இல. | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் / செயலமர்வு | கலந்து கொண்டோர் எண்ணிக்கை | வருமானம் (ரூ) |
|---|---|---|---|
| 01 | மரக்கறி மற்றும் பழங்களில் நீரகற்றி உலர்த்துதல் (Dehydration) - கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவு | 25 | 39,600 |
| 02 | கழிவறை துப்புரவு செய்வதற்கான கரைசல் (Toilet Bowl Cleaner) கை கழுவுதற்கான கரைசல் (Hand wash), நிலஓடு துப்புரவு செய்வதற்கான கரைசல் (Tile Cleaner), பாத்திரம் கழுவுவதற்கான கரைசல் (Dish wash) - லக்மீ எக்ஸ்போர்ட் (தனியார்) கம்பனி, அநுராதபுரம். | 04 | 31,920 |
| 03 | சலவைப்பொடி (Detregent powder), துணி துவைப்பதற்கான கரைசல் (Fabric solution), கை கழுவுதற்கான கரைசல் (Hand wash) | 06 | 44,400 |
| 04 | உடன் பருகக்கூடிய பழச்சாற்றுப் பானங்கள், பழப் பாகுகள், சோஸ் - சம்பத் சுபர் ட்ரேடிங்க் (தனியார்) கம்பனி, தொடங்கொட | 06 | 39,600 |
| 05 | ஏற்றுமதிச் சந்தைக்கு ஒட்டுப்பலகை மற்றும் ஒட்டுப்பலகை கதவு (Plywood Sheet & Plywood Door) உற்பத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 05 | 51,750 |
| 06 | ∴பைபர் கண்ணாடி வலுவூட்டல் தொழில்நுட்பம் - (Fiber Glass | 10 | 70,600 |

| | | | |
|---|---|---|---|
| | Reinforced Technology) பர்ஸ்டாப் ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனி | | |
| 07 | கோப்பி பதனிடலும் சந்தைப்படுத்தலும் | 10 | 46,230 |
| 08 | இலங்கையின் கனிப்பொருள் கைத்தொழில்களுக்கு பெறுமதிசேர்க்கும் சந்தர்ப்பங்களும் மூலோபாயங்களும் பற்றிய கருத்தரங்கு | 85 | 867,000 |
| **மொத்தம்** | | **151** | **1,191,100** |

- **கைத்தொழில் சான்றிதழ் பாடநெறிகளை நடாத்துதல்**

**அட்டவணை 4.8.2 : நிகழ்ச்சித்திட்டப் பொழிப்பு**

| இல. | சான்றிதழ் பாடநெறி | கலந்து கொண்டோரின் எண்ணிக்கை | வருமானம் (ரூ) |
|---|---|---|---|
| 01 | பத்திக் தொழில்நுட்பம் - 03 நாட்கள் | 15 | 225,000 |
| 02 | பால் மற்றும் பால்சார் உற்பத்திகள் தொழில்நுட்பம் - 10 நாட்கள் | 30 | 1,050,000 |
| 03 | PLC & HMI - 04 நாட்கள் | 14 | 210,000 |
| 04 | பத்திக் தொழில்நுட்பம் - 03 நாட்கள் | 15 | 225,000 |
| 05 | கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்புப் பாடநெறி - 03 மாதங்கள் | 07 | 144,900 |
| 06 | குடிநீர் போத்தலில் அடைத்தல் - 6 நாட்கள் | 13 | 208,000 |
| 07 | கணினி வன்பொருள்களும் வலையமைப்பாக்கமும் - 30 நாட்கள் | 10 | 256,000 |
| 08 | பத்திக் தொழில்நுட்பம் - 03 நாட்கள் | 08 | 144,000 |
| 09 | குடிநீர் போத்தலில் அடைத்தல் | 17 | 374,000 |
| 10 | தேயிலை மற்றும் பெறுமதி சேர்க்கும் தொழில்நுட்பம் | 25 | 628,500 |
| 11 | பத்திக் தொழில்நுட்பம் | 11 | 99,000 |
| 12 | கணினி வன்பொருள்களும் வலையமைப்பாக்கமும் | 13 | 312,000 |
| **மொத்தம்** | | **178** | **3,876,400** |

- **உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பங்களை கையகப்படுத்தலும் விநியோகித்தலும்**

**அட்டவணை 4.8.3 : நிகழ்ச்சித்திட்டப் பொழிப்பு**

| இல. | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள் | கலந்துகொண்டோரின் எண்ணிக்கை | வருமானம் (ரூ) |
|---|---|---|---|
| 01. | வீதிகளில் அடையாளமிடும் நிறப்பூச்சு | 12 | 60,000 |
| 02. | தேயிலை சுவைப் பரிசோதிப்பும் தேயிலை தரப்படுத்தலும் | 28 | 98,000 |
| 03. | தேய்காய் தண்ணீர் பொதியிடல் தொழில்நுட்பம் | 60 | 360,000 |
| 04. | கோப்பிக்கு பெறுமதி சேர்த்தல் | 50 | 250,000 |
| 05. | வாசனைப் பொருள்கள், பாடி ஸ்பிறே, சிறுவர் ஓடிகொலோன் உற்பத்தி | 49 | 245,000 |
| 06. | சூரியக்கலத் தொகுதி பற்றிய திறன் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 72 | 432,000 |
| 07. | பகுதியளவில் பேக் செய்யப்பட்டு குளிரூட்டிய வெதுப்பக உற்பத்திகள் | 30 | 120,000 |
| **மொத்தம்** | | **301** | **1,565,000** |

➢ **மூங்கில் மர அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

**அட்டவணை 4.8.4 : நிகழ்ச்சித்திட்டப் பொழிப்பு**

| இல. | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | கலந்துகொண்டோரின் எண்ணிக்கை | வருமானம் (ரூ) |
|---|---|---|---|
| 01 | மென் மரப்பலகை பரிகரிப்பும் மூங்கில மரப்பலகை பேணலும் பற்றிய செயலமர்வு | 42 | 168,000 |
| 02 | மூங்கில் மரப்பலகை பேணல் பற்றிய செயலமர்வு | 28 | 16,800 |
| 03 | மூங்கில் மரப்பலகை தொழில்நுட்பம் பற்றிய நிகழ்ச்சித்திட்டம் - இந்தியாவின் INBAR இனால் நடாத்தப்படும் நிகழ்நிலை நிகழ்ச்சித்திட்டம் | 42 | - |
| 04 | Bamboo Scrimber, laminated composites மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உறபத்திகள் பற்றிய நிகழ்நிலைப் பயிற்சி - இந்தியாவின் INBAR இனால் நடாத்தப்படும் நிகழ்நிலை நிகழ்ச்சித்திட்டம் | ZOOM | - |
| 05 | மூங்கில் மப்பலகை கலைத் தொழில்நுட்பம் பற்றிய செயலமர்வு | 05 | 20,000 |
| 06 | மூங்கில் மரப் பலகையை அடிப்படையிலான உற்பத்திகள் பற்றிய செயலமர்வு - மூங்கில் மரப்பலகையாலான தளபாடங்கள் | 09 | 40,500 |
| **மொத்தம்** | | | **245,300** |

### 4.8.3 விசேட கருத்திட்டங்கள்

➢ **கருத்திட்டங்கள்: உயிரிசார் வேளாண்மை சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கையின் உணவு பதனிடுநர்களுக்கு அத்துடன்/ அல்லது வர்த்தகர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் நிதிசார் உதவியளிக்கும் திட்டமொன்றை நிறுவுதல் - 2022**

உயிரிசார் வேளாண்மை சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு அந்நடைமுறைகளை அனுசரிக்க விரும்பும் உள்ளூர் உணவு பதனிடுநர்களுக்கு அத்துடன்/அல்லது வர்த்தகர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் உதவும் திட்டமொன்று IDB இனால் அமுல்படுத்தப்பட்டது. சர்வதேச சந்தைக்கு உணவுகளை வழங்கும்போது போட்டிநிலையைப் பேணுவதற்கு உள்ளூர் உணவு பதனிடுநர்களுக்கு இடையில் இச் சான்றிதழை ஊக்குவிப்பது இதன் நோக்கமாகும். அதன் மூலம் நாட்டின் அந்நியச் செலாவணி ஈட்டல்கள் அதிகரிக்கப்படுவதுடன், அவர்களின் இயற்கை வேளாண்மை உற்பத்திகளுக்கு சிறந்ததொரு விலையைப் பெற்றுக் கொள்ள அவர்கள் இயலுமை பெறக்கூடியதாக இருக்கும்.

இங்கு, உயிரிசார் வேளாண்மை சான்றுப்படுத்தும் அடிப்படைக் கிரயத்தை மீள்நிரப்பல் செய்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட உணவு பதனிடுநர்கள் அத்துடன்/அல்லது 25 வர்த்தக மற்றும் ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கு உயர்ந்தபட்சம் ரூ.250,000 வரை கொடையாக வழங்கப்படுகிறது. நிதிக்கொடை அளிப்பதற்கு 25 உணவு உற்பத்திக் கைத்தொழில்கள் தெரிவுசெய்யப்பட்டன. இக்கருத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில்கள் EU Organic, USDA Organic, JAS Organic & Bio Sussise போன்ற உயிரிசார் இயற்கை வேளாண்மையில் (Organic Agriculture) சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டுள்ளன. சர்வதேச உயிரிசார் விவசாய தர நியமங்களுக்கு கைத்தொழில் சான்றுறுதிப்படுத்தும் தர உறுதிப்பாட்டைப் பெற்ற Control Union Inspections (Pvt.) Ltd என்ற சான்றுறுதிப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனத்துடன் இணைந்து கருத்திட்டப் பயனாளிகளுக்கு இயற்கை வேளாண்மை (அங்கக) சான்றுப்படுத்தல் செயன்முறை (Organic Certification Process) பற்றி அறிவுறுத்தும் அமர்வொன்றும் நடைபெற்றது.

- **இலங்கையில் கனிம தொழிலுக்கு (Mineral Industry) பெறுமதிசேர்க்கும் வாய்ப்புகளும் மூலோபாயங்களும் பற்றிய கருத்தரங்கு**

காரீயம்(Graphite), பளிங்குப்படிகம்(Quartz), மாணிக்கக்கல்(Gemstone), மைக்கா எனும் காக்காய்ப்பொன் (Mica), களி(Clay), சுண்ணக்கல் (Limestone), தொலமைற்று (Dolamite), ∴பெல்ஸ்பார எனும் களிக்கல்(Feldspar), அப்பற்றைற்று(Apatite) முதலான பெறுமதி வாய்ந்த ஏராளமான கனிங்கள் இலங்கையில் காணப்படுகின்றன. அதன் மூலம் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் உந்துதலொன்றைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. இருப்பினும், தேசிய பொருளாதாரத்திற்கு கனிமங்கள்சார் கைத்தொழில்கள் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய உயர்ந்தபட்ச பங்களிப்பு இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

ஆகையால், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் துறையில் நிபுணர்களுடனும் இணைந்து IDB "இலங்கையின் கனிமத் தொழில்களுக்கு பெறுமதிசேர்க்கப்பட்ட சந்தர்ப்பங்களும் மூலோபாயங்களும்" பற்றிய ஒரு கருத்தரங்கை டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி "கொழும்பு 01, கிங்ஸ்பரி ஹோட்டலில் 85 பங்குபற்றுநர்களின் பங்கேற்புடன் நடாத்தியது. அதன்மூலம் ரூ.867,000/- வருமானமொன்றை ஈட்டியது.

முன்னணி அரச நிறுவனங்கள், புகழ்பூத்த கைத்தொழிலாளர்கள் மற்றும் இலங்கையின் கனிம வளத்துறை ஆராய்ச்சியாளர்களுக்கு மத்தியில் சிறந்ததொரு தொடர்பை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். உள்ளூர் கனிம வளங்களின் பலங்கள், பொருளாதாரப் பங்களிப்பு, வரம்புகளும் சவால்களும், கைத்தொழில் பெறுமதிசேர்க்கும் வாய்ப்புகள் கனிம வளத் துறையில் புத்தாக்கங்கள் பற்றி இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒருங்கமைந்ததாக கைத்தொழிலாளர்களின் அறிவை மேம்படுத்துவதற்கு 'மைக்கா மற்றும் குவார்ட்ஸ் கைத்தொழில் பெறுமதி சேர்த்தல்" பற்றிய இரண்டு வெளியீடுகளை TSD வெளியிட்டது.

- **தொழில்நுட்ப அறிக்கைகளை/ கைந்நூல்களை தயாரித்தல்**

1. மைக்காவின் கைத்தொழில் பெறுமதி சேர்ப்புகள்
2. குவார்ட்ஸின் கைத்தொழில் பெறுமதி சேர்ப்புகள்
3. கோப்பியின் பெறுமதி சேர்ப்புகள்
4. செவ்விளநீர் பானத்தை போத்தல்களில் அடைக்கும் தொழில்நுட்பம் பற்றிய தொழில்நுட்ப அறிக்கை


- **கருத்திட்டப் பிரேரணைகளைத் தயாரித்தல்**

1. உணவு ஏற்றுமதியாளர்களின் பொதியிடல் அபிவிருத்திக்கான நிதியுதவு திட்டம்.
2. IDB இன் பொதியிடல் நிலையமொன்றை நிறுவுதல்.
3. புத்தாக்க மற்றும் தராதர முன்னேற்றத்தின் ஊடாக இலங்கை அழகுக்கலை கைத்தொழில்கள் பிரிவை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம்.

### 4.8.4 வருமானப் பொழிப்பு - 2022


**அட்டவணை 4.8.5 : வருமானப் பொழிப்பு விபரம்**

| இல. | செயற்பாடு | வருமானம் (ரூ) |
|---|---|---|
| 01 | தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை/ செயலமர்வுகளை/ செய்துகாட்டல்களை ஒழுங்குசெய்தல் | 14,136,000 |
| 02 | பிரிவை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 1,191,100 |
| 03 | கைத்தொழில் சான்றிதழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 3,876,400 |
| 04 | தொழில்நுட்பத்தை ஈட்டலும் பரப்பலும் | 1,467,000 |
| 05 | தொழில்நுட்ப அறிக்கைகளைத் தயாரித்தல் | 23,100 |
| 06 | மூங்கில் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் - தொழில்நுட்பப் பரிமாற்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 245,300 |
| **மொத்தம்** | | **20,938,900** |




**அட்டவணை 4.8.6 : உள்ளபடியான வருமானத்தின் வருடாந்த ஒப்பீடு**

| ஆண்டு | உள்ளபடியான வருமானம் (ரூ) |
|---|---|
| 2019 | 18,607,832 |
| 2020 | 8,107,910 |
| 2021 | 3,788,750 |
| 2022 | 20,938,900 |




தொழில்நுட்ப சேவைப் பிரிவினால் (TSD) தொழில்நுட்ப சேவைகள் வழங்கப்படுகின்றன. இயன்றளவு வினைத்திறனான, பயன்கூர், புதுமாதிரியான பௌதிக, மெய்நிகர் தகவல் வளங்களை ஈட்டல், ஏற்பாடு செய்தல், பேணுதல், பராமரித்தல், அணுகலைப் பெற்றுக்கொடுத்தல் மூலம் எதிர்கால தொழில்முனைவோருக்கு உதவுவதன் மீது TSD கவனம் செலுத்தியுள்ளது. எந்தவொரு சந்தைப் பிரிவினதும் உந்துசக்தியாக தொழில்நுட்பத்தை அடையாளம் காணலாம் என்பதுடன், உலகளாவிய அளவில் போட்டியிடுவதற்கு வர்த்தகப் பாவனையில் முன்னேறிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான ஆற்றல் இன்றியமையாததாகும். இப்பிரிவினால் கைத்தொழிலின் வியாபகம், நவீனமயம், பல்வகைப்படுத்தல், விளைதிறன் என்பவற்றிலான முன்னேற்றங்கள் சம்பந்தமாக எதிர்கால தொழில்முனைவோருக்கு தேவைப்படும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுகின்றன.

பிரிவின் முன்னேற்ற அட்டவணைக்கமைய கொரோனா வைரஸ் காரணமாக 2020, 2021 ஆம் ஆண்டுகளில் வருமான வீழ்ச்சியொன்று பதிவாகியுள்ளது. உலகளாவிய அளவில் வாடிக்கையாளர்கள், தொழில்முயற்சிகள் மற்றும் சமூகங்கள் மீது பெரும் தாக்கமொன்றை இது ஏற்படுத்தியுள்ளது. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை உரிய முறையில் நடாத்த முடியாத நிலைமை காரணமாக இது TSD இன் முன்னேற்றத்தின் மீதும் பாதிப்புச் செலுத்தியுள்ளது. முன்னைய ஆண்டின் வருமான மட்டங்களுக்கு ஒப்பீடாக உள்ளபடியான வருமானத்தில் பாரியதொரு வளர்ச்சி அடையப் பெற்றிருந்தமையால், 2022 ஆம் ஆண்டு மிக முக்கியமான ஓராண்டாக விளங்கியது. இது தொழில்நுட்பம் பற்றி மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், செய்துகாட்டல்களின் பெறுபேறாகும்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோராகும். ஒவ்வொரு பிரிவினாலும் நடாத்தப்படும் அனைத்து பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் போதும் IDB இன் முக்கிய இலக்குக் குழு அவர்கள் மீது கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. மேலும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பிரிவு தேசிய உற்பத்தி, தொழில்கள், நாடுகளில் இயங்கும் கம்பனிகளின் பங்குகளுக்கு அவர்களின் பங்களிப்பிற்கு அமைய பொருளாதாரங்களில் முக்கிய செயற்பொறுப்பொன்றை ஆற்றுகிறது. அவர்கள் இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு போல் விளங்குவதுடன், இந்நாட்டின் ஒவ்வொரு பிரிவினுள்ளும் காணக் கிடைக்கின்றனர். இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பிரிவு மொத்தத் தேசிய உற்பத்தியில் 52% சதவீதத்தையும் மொத்த வேலைவாய்ப்புகளில் 45% ஐயும் கொண்டுள்ளது. அது, இந்நாட்டின் மொத்த தொழில்முயற்சிகளின் எண்ணிக்கையில் 75% க்கு அதிகமானதாகும். பொருளாதார வளர்ச்சியின் மீது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் அபிவிருத்தியிலுள்ள சாதக தாக்கத்தைப்

புரிந்துகொண்ட பெரும்பாலான நாடுகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பிரிவை முன்னேற்றுவதற்கு பெருமுயற்சி எடுக்கின்றன. எனினும், பிராந்தியத்தின் ஏனைய அபிவிருத்தியடைந்த மற்றும் வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு இப்பிரிவின் பங்களிப்பு இன்னும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது.

கைத்தொழிலாளர்களுக்கு அவசியமான தொழில்நுட்ப அறிவை வழங்குவது IDB இன் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் செயற்பொறுப்பாகும். மேலும், அது நிறுவனமொன்றின் திறன்களையும் புத்தாக்கங்களையும் முன்னேற்றக்கூடியதாக அமையுமாறு தொழில்நுட்ப அறிவை வழங்கும் முக்கிய உந்துசக்தியாகும். இது தவிர, இயன்றளவு வினைத்திறனான, பயன்கூர், புதுமாதிரியான முறைகளினால் மூலவாய்ப்புவளமுள்ள தொழில்முனைவோருக்கு உதவுவதற்காக தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மதியுரைகள், சம்பந்தப்பட்ட வழிகாட்டல்கள், தொழில்நுட்ப சேவைகள் TSD இனால் வழங்கப்படுகின்றன. இலங்கையின் மரப்பலகை சார்ந்த கைத்தொழிலில் தொழில்சார்ந்தோருக்கும் மூலவாய்ப்புவளம் உள்ளவர்களுக்கும் தேவைப்படும் திறன்களையும் பயிற்சியையும் வழங்குவதற்கு 2019 இல் முழுநிறைவான மூங்கில் உற்பத்தி, பயிற்சி மற்றும் சேவை நிலையமொன்றை INIDO உடன் இணைந்து IDB அறிமுகம் செய்தது. தரமான கைவினைத் தொழில்களையும் தளபாடங்களையும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைக்கு உற்பத்திசெய்யும் அதேவேளை, கூடுதலான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு வாய்ப்புள்ளது. எந்தவொரு சவாலான சூழ்நிலையிலும் மிகவும் வினைத்திறனுடன் செயலாற்றுவதற்கும் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் தொழில்நுட்பத் திறன்கள் மிகவும் முக்கியமானவையாகும். பொருளாதார வளர்ச்சியின் மீது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் அபிவிருத்தியின் மூலம் ஏற்படுத்தப்படும் சாதக தாக்கத்தைப் புரிந்துகொண்டு குறிப்பாக உணவு, இரசாயனப் பதார்த்தங்கள், எண்ணெய் மற்றும் நார்ப்பொருள் உற்பத்திகள், கனியங்கள் மற்றும் கட்டுமானப் பொருள்கள் மீது கவனம் செலுத்தி TSD இனால் விளைதிறன், முயற்சியாண்மை மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் பயிற்சி அமர்வுகளும் வழங்கப்படுகின்றன. இது தவிர நவீன தொழில்நுட்பங்கள், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் புதிய கருத்திட்டங்கள் முதலியன குறித்த மதியுரைச் சேவை வழங்கல் மூலம் தொழில்முனைவோருக்கும், பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் TSD உதவுகிறது.

## 4.9 தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் (CDLPF)

### 4.9.1 அறிமுகம்

இலங்கையில் தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிக் கைத்தொழிலின் முன்னேற்றம் கருதி 1998 ஆம் ஆண்டில் தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நாட்டிற்கு தோல்பொருள் கைத்தொழிலின் அபிவிருத்திக்குரிய பாரிய மூலவாய்ப்புவளங்களைக் கவனத்திலெடுத்து, இந்நிலையத்தினால் பாதணிகள் மற்றும் தோல்பொருள் பிரிவின் குறுகிய கால மற்றும் நீண்ட கால பாடநெறிகள் நடாத்தப்படுவதுடன், பயிற்றப்பட்ட உழைப்பாளர்களுடன் சம்பந்தப்பட்ட தகவல் மற்றும் பண்ட உற்பத்தி வசதியளிப்பை இந்நிலையம் மேற்கொள்கிறது. மேலும், தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிகள் பிரிவில் பணிபுரியும் (SME) கைத்தொழிலாளர்களுக்கு பொதுவான சேவை வசதிகளை வழங்குவதுடன், ஏற்றுமதி செய்வதற்கு தரமான உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில்நுட்பமும் பயிற்சியும் இந்நிலையத்தினால் வழங்கப்படுகிறது. கட்டுபெத்த தலைமை அலுவலகத்தின் (CDLPF) ஊடாகவும் வாரியப்பொல பிராந்திய நிலையத்தின் ஊடாகவும் இவ்வனைத்துச் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

நிலையம் வழங்கும் சேவைகள்:

- பாதணிகள் மற்றும் தோல்பொருள்கள் பற்றிய தொழில்நுட்ப பரிமாற்று பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கு செய்தல்.
- பாதணிகளின் வடிவாக்கத்தையும் உருவமைப்பையும் தயாரிக்கும் (Design and Pattern Making) பயிற்சி.
- வர்த்தகம் மற்றும் இயந்திர உபகரணங்கள் பற்றிய தகவல்களை வழங்குதல்.
- சீர்வெப்ப இன்கியூபேட்டர் வசதியை வழங்குதல்.
- கைத்தொழில்களுக்கான பயிற்றப்பட்ட உழைப்பு.
- அரச மற்றும் தனியார் துறைக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு உதவுதல்.
- இயந்திர உபகரண சேவைகளையும் பதனிடல் வசதிகளையும் வழங்குதல்.
- விற்பனை மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

### 4.9.2 2022 ஆம் ஆண்டிற்கான விசேட நடவடிக்கைகள்

1) அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் கலந்துகொண்ட பயிலுநர்களின் நிதிப் பங்களிப்பின் மூலம் நாடுபூராவும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

    அ) பாதணி உற்பத்தி பற்றிய 10 அடிப்படைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. பாதணி உற்பத்திப் பிரிவுக்காக 106 தொழில்முனைவோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

    ஆ) பைகள் மற்றும் தோல்பொருள் சம்பந்தமான 03 அடிப்படைப் பயிற்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன. பைகள் உற்பத்திப் பிரிவுக்காக 40 தொழில்முனைவோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

    இ) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக துறையில் புதுமுகங்களின் திறன்கள் வளர்க்கப்பட்டதன் மூலம் ரூ.1,353,118 வருமானமொன்று ஈட்டப்பட்டுள்ளது.

    ஈ) பாதணி வடிவமைப்புக் கலைஞர்களின் திறன்களை முன்னேற்றுவதற்காக துறையின் 22 பேருக்கு பயிற்சியளித்ததன் மூலம் ரூ.285,014 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

    உ) தற்போதுள்ள கைத்தொழில் உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றுவதற்கு 39 பேருக்கு பயிற்சியளித்ததன் மூலம் ரூ.1,123,364 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

    ஊ) மேற்குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ஆண்டுமுழுதும் மொத்தம் 225 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

2) பாதணிகள் மற்றும் தோல்பொருள் கைத்தொழிலை அரசாங்கத்துடன் ஒருங்கிணைப்புச் செய்தல். இதன் கீழ் இறக்குமதிக் கொள்கை வகுப்பு, செஸ் வரித் திருத்தம், வரவு செலவுத்திட்ட யோசனைகள் போன்ற

விடயங்களில் தலையீடு செய்தல். பாதணிகள் மற்றும் தோல்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்துடனும் வயம்ப பாதணி மற்றும் தோல்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்துடனும் செயலூக்கத்துடன் செயலாற்றுதல்.

3) இன்றைய மூலப்பொருள் பற்றாக்குறைக்கும் அதிகரிக்கும் விலைக்கும் ஏற்ப, பாதணி மற்றும் தோல்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சிபார்சின் பேரில் IDB இனால் இந்திய கடன் ஊடாக மூலப்பொருள்களை இறக்குமதிசெய்வதற்கு இறக்குமதியாளர் ஒருவருக்கு தேவையான ஒருங்கிணைப்பு வழங்கப்பட்டது.

4) இந்திய அரசினால் அமோனியம் சல்பேற்று (Ammonium Sulphate) ஏற்றுமதிசெய்வது தடை செய்யப்பட்டதன் காரணமாக உள்ளூர் தோல் பதனிடல் கைத்தொழில் (Tannery industry) பாரிய நெருக்கடியைச் சந்தித்தது. ஆதலால், தாய்லாந்திலிருந்து அமோனியம் சல்பேற்றை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையின் ஒத்துழைப்பு பெறப்பட்டது. இலங்கையில் தோல் பதனிடல் பிரிவுக்கு நீண்டதொரு வரலாறுள்ளது. உள்ளூர் உற்பத்தியாளர்களினால் உலகின் அங்கீகாரம் பெற்ற மட்டத்தில் சிறந்த, பூர்த்தியான தோல்பொருள்கள் பதனிடப்படுகின்றன. 1980 தசாப்தம் முதல் அவர்கள் அனைத்து தோல்பொருள் உற்பத்தியாளர்களுக்கும் தமது உற்பத்திகளுக்குப் பொருத்தமான ஓரிடத்தைத் தேடி வந்தனர். IDB இதில் தலையிட்டு வாழைச்சேனை பிரதேசத்தில் காணித்துண்டுகளை விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

5) சமகால நிலைமைகள் பற்றி அறிவைப் பரிமாறிக்கொள்வதற்கு குறித்த சங்கங்களுடன் அடிக்கடி கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

6) பாதணிகள் மற்றும் தோல்பொருள் தேவைகளைக் கொள்வனவுசெய்வதற்கு பல்வேறு அரச நிறுவனங்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் (TECs) பங்கேற்றல்.

7) அழகியல் பல்கலைக்கழகத்திலும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திலும் நவீன பாணியிலான வடிவமைப்பாக்க பாடத்திட்டத்தை (Fashion Designing Curriculum) கற்கும் மாணவர்களின் இறுதியாண்டு கருத்திட்டத்திற்கு வசதியளித்தல்.

8) கைத்தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் இயந்திர சேவை வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் உற்பத்தித் தரத்தை முன்னேற்றுதலும், உற்பத்தி இயலளவை அதிகரித்தலும். குறித்த காலப்பகுதியில் மாதாந்தம் 144 கைத்தொழிலாளர்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டன. அதன்மூலம் ரூ.261,458 தொகை வருமானம் ஈட்டப்பட்டது.

9) கைத்தொழிலுக்குத் தேவைப்படும் ஆட்களும் நிறுவனங்களும் பற்றிய தகவல்களைச் சேகரித்தலும் பராமரித்தலும். இதன் ஊடாக தேவையான ஆட்களுக்கு உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். 540 நிறுவனங்களின்/ஆட்களின் தகவல் முறைமையொன்று இற்றைப்படுத்தப்பட்டு வருகிறது.


10) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்கும் மாணவர்களின் அரையாண்டு மற்றும் ஆண்டிறுதிப் பரீட்சைகளுக்கு உரிய வினாத்தாள்களைத் தயாரித்தலும் விடைத்தாள்களைப் பரிசோதித்தலும்.

11) RPL ஊடாக தேசிய தொழில் தகைமைகளை (NVQ) பெற்றுக்கொள்வதற்கு தொழில் முயற்சியாளர்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 18 பேர் NVQ சான்றிதழ் பெற்றுக் கொண்டனர்.

12) 2022 ஆம் ஆண்டில் நிலையம் ரூ.3,200,136.00 மொத்த வருமானத்தை ஈட்டியது.


அட்டவணை 4.9.1 : 2022 ஆம் ஆண்டின் முன்னேற்றப் பொழிப்பு

| இல. | செயற்பாடு | நிதிசார் முன்னேற்றம் (ரூ) |
|---|---|---|
| 1 | **புதிய தொழில்முயற்சிகளை உருவாக்குதல்** | |
| 1.1 | பாதணிகள் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 1,064,986 |
| 1.2 | பைகள் உற்பத்தித் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 235,132 |
| 1.3 | தோல்பொருள் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 53,000 |
| 2 | **தற்போதைய கைத்தொழில்களை / தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல்** | |
| 2.1 | தரத்தை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல் | 1,123,364 |
| 2.2 | கைத்தொழிலாளர்களுக்கு பதப்படுத்துதல் வசதியளித்தல் | 261,458 |
| 2.4 | தொழில்முனைவோர்/ கைத்தொழிலாளர்கள்/ அரச மற்றும் வெளிநிலை ஒழுங்கமைப்புகளுக்காக தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 285,014 |
| 3 | **விசேட சேவைகள்** | |
| 3.1 | NVQ சான்றிதழ் பெற்றுக்கொள்ள வசதியளித்தல் | 27,000 |
| 3.3 | மூலப்பொருள்கள் விற்பனை நிலையம் | 150,182 |
| **மொத்தம்** | | **3,200,136** |



**அட்டவணை 4.9.2 : உள்ளபடியான வருமானம் வருடாந்த ஒப்பீடு**

| ஆண்டு | VAT மற்றும் NBT நீங்கலான உள்ளபடியான வருமானம் (ரு) |
|---|---|
| 2019 | 6,476,884 |
| 2020 | 5,200,839 |
| 2021 | 4,892,789 |
| 2022 | 3,200,136 |




**வரைபு 4.9.2: பிரிவின் நிதிசார் முன்னேற்றம்**

பாதணிகள் மற்றும் தோல்பொருள் உற்பத்திக் கைத்தொழில் உயர் உழைப்புச் செறிவு தேவைப்படும் ஒரு கைத்தொழிலாகும். வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் அந்நியச் செலாவணி ஈட்டலுக்கும் உரிய பாரியதொரு ஆற்றல் அதற்குண்டு. பதனிட்ட தோல்பொருள் பிரிவானது (leather division) பெறுமதி சேர்க்கப்பட்ட உயர் ஏற்றுமதித் தரம் வாய்ந்த, மிக நுட்பமான பண்ட உற்பத்தியில் ஈடுபடும் ஓர் அத்தியாவசியமான பிரிவாகும். மேலும், இந்நிலையத்தினால் ஏற்றுமதி மூலவாய்ப்புவளத்தை உபயோகப்படுத்திக் கொள்வதற்கு தரமான தயாரிப்புகளை உற்பத்திசெய்யும் தொழில்நுட்பமும் பயிற்சியும் வழங்கப்படுகிறது. வர்ண இறப்பர் தோல்வார்கள் (Rubber Thongs) முதல் உயர் தரம்வாய்ந்த பதனிட்ட தோல் சப்பாத்து வரை பல்வேறு உற்பத்திகளை மேற்கொள்வதில் இது பிரசித்தி பெற்றது. இலங்கை பாதணி உற்பத்தியாளர்கள், வெறுமனே உற்பத்தியாளர்கள் என்ற நிலையைத் தாண்டி ஆக்கபூர்வமான படைப்புக்களையும் உற்பத்தித் தீர்வுகளையும் வழங்குநர்களாக மாறியுள்ளனர். பாதணிகளின் அடிப்பகுதிக்கான (sole crepe) அதிசிறந்த தோலை உற்பத்திசெய்வதற்கு இயற்கை இறப்பர் போன்ற உயர் தரம்வாய்ந்த வளங்களை உள்ளூரில் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு, பேண்தகு உற்பத்தி நடைமுறைகளினால் இலங்கை பாதணி உற்பத்தியாளர்களுக்கு ஏனையவர்களை விட போட்டி அனுகூலமொன்று வழங்கப்பட்டுள்ளது. பதனிட்ட தோல் உற்பத்தி தவிர, தோல்பொருள் உற்பத்தியாளர்கள் சுற்றாடல் நட்புறவான, பேண்தகு உற்பத்தித் தரங்களின் கீழ் ஏற்றுமதிச் சந்தைக்கு கையுறைகள், விரிபணப் பைகள் (wallets), பைகள், பணப்பைகள் (pures) மற்றும் ஏனைய துணைக்கருவிகளை உற்பத்தி செய்கின்றனர். இலங்கையின் பாதணி மற்றும் தோல்பொருள் கைத்தொழில், ஏற்றுமதி வருமானம் ஈட்டக்கூடிய, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பிரிவொன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இப்பிரிவின் உள்ளபடியான வருமானப் பரவுகைக் குறிப்பு சம்பந்தமாக எடுத்து நோக்குமிடத்து, நீண்டகாலமாக வருமானம் படிப்படியாக குறைவடையும் ஒரு போக்கைக் காட்டுகிறது. இந்த வீழ்ச்சிநிலைக்கு இலங்கை பாதணி உற்பத்தியாளர்கள் விலையில் காணப்படும் போக்குநிலை காரணமாக பராமரிப்பு, தரக் கட்டுப்பாடு, செயன்முறைத் திட்டமிடல், பரிசோதிப்புகள் முதலியவற்றுக்கு நியமமான தொழில்நுட்ப முறைகளை

ஈடுபடுத்தும்போது பின்னடைகின்றமை ஒரு காரணமாக அமைகிறது. சர்வதேச பாதணிக் கம்பனிகளுடன் ஒப்பிடும் போது தொடர்ந்தும் உற்பத்திகளை அபிவிருத்திசெய்தல் பாதணிக் கைத்தொழிலில் நடைமுறையில் காண முடியவில்லை. நிதிசார் இடைஞ்சல்கள் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பிரிவுக்கு இது சம்பந்தமாக கூடுதல் கவனத்தைச் செலுத்த முடியாது. தொடர்ச்சியான முன்னேற்றுதல்களுக்கு உற்பத்தி அபிவிருத்தி முக்கியமானதாக அமைகின்றபோதும், பாரியளவு உற்பத்தியாளர்கள் கூட உற்பத்தி அபிவிருத்தியின் மீது கவனம் செலுத்தத் தயங்குகின்றனர். ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும்போது பாதணிக் கைத்தொழிலில் பயிற்சிக்கான வசதி குறைவானதாகவே உள்ளது. பயிற்சி நிறுவனங்கள் இன்மையே இதற்குக் காரணமாக அமைகிறது. இதற்கான ஒரேயொரு பயிற்சி நிலையம் IDB இன் கீழ் இயங்குகிறது. வசதியின்மையும் தற்போதுள்ள வளங்கள் பற்றி விழிப்புணர்வின்மையும் காரணமாக வழங்கப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளிலும் பங்குபற்றுவோரின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகிறது.

உற்பத்திச் செயன்முறையிலிருந்து அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு மூலப்பொருள்கள் தரமானவையாக இருக்க வேண்டும். பாதணிக் கைத்தொழிலுக்கு குறிப்பாக மூலப்பொருள்களைப் பரிசோதித்தல், தரப் பரிசோதிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைளுக்கு தேவைப்படும் ஆய்வக வசதிகள் இன்மை காரணமாக இலங்கை உற்பத்தியாளர்களுக்கு உலகளாவிய தரநியமங்களுக்கு இசைவாக தொழிற்படுவது சிரமமானதாகும். இது தவிர, உள்ளூரில் உற்பத்தியாகும் தயாரிப்புகள் மீது பொதுமக்கள் மத்தியில் காணப்படும் எதிர்மறையான மனப்பாங்கு காரணமாகவும் இலங்கைப் பாதணிக் கைத்தொழில் பாதிக்கப்படுகிறது. இயந்திர உபகரண உற்பத்தியாளர்களும் இப்பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். சர்வதேச நியமங்களுக்கு அமைய தரமான மட்டத்தில் இருந்தபோதும், உள்ளூர் வாடிக்கையாளர்களினால் இந்த உற்பத்திகள் நிராகரிக்கப்படுகின்றன. சீனா, தாய்லாந்து, வியட்நாம், ஹொங்கொங் போன்ற நாடுகளிலிருந்து குறைந்த விலைக்கு பாதணிகள் தருவிக்கப்படுவதன் காரணமாக உள்ளூர் பாதணிக் கைத்தொழில் தீவிர பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. நவீன தொழில்நுட்பப் பாவனையும் அதிகளவில் உற்பத்தியாவதும் காரணமாக அவற்றின் உற்பத்திக் கிரயம் இலங்கைக் கைத்தொழிலை விட மிகக் குறைவானதாக உள்ளது.

கடந்த காலத்தில் இக்கைத்தொழிலின் வியாபகம் படிப்படியாக இடம்பெற்றதுடன், இன்றளவில் உயர் தரத்திலான பாதணிகளும் தோல்பொருள் உற்பத்திகளும் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தோல்பொருள் கைத்தொழில் உழைப்புச் செறிவு மிகுந்த ஒரு கைத்தொழிலாக இருக்கும் அதேவேளை, நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்காளரொருவராவதற்கான ஆற்றலைச் சுட்டி நிற்கிறது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தரவுகளுக்கு அமைய கைத்தொழிலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 40,000 பேர் ஏற்கனவே தொழில்புரிகின்றனர். பாரிய 5 கம்பனிகளும், 30 நடுத்த அளவான கம்பனிகளும் சுமார் 3,000 சிற்றளவிலான உற்பத்தியாளர்களும் அதில் அடங்கும். கென்வஸ் மற்றும் இறப்பர் பூட்ஸ், தோல் வார், விளையாட்டுச் சப்பாத்து, பதனிட்ட தோல் சப்பாத்து முதலான ஏராளமான அதிநவீன பாதணி மாதிரிகள் பல்வேறு மூலப்பொருள்களைப் பாவிப்பதன் மூலம் உற்பத்தியாகின்றன.

இப்பிரிவைப் பலப்படுத்துவதற்காக ஆளணியினரைப் பயிற்றுவிப்பதற்கும் தொழில்நுட்பத்தை வழங்குவதற்கும் தனிவேறான மூலோபாயங்களைப் பயன்படுத்த நேரிடலாம். பாதணி உற்பத்தியாளர்கள், துணைக்கருவி வழங்குநர்கள், பதனிட்ட தோல்பொருள் உற்பத்தியாளர்கள், பாதணி உற்பத்திக்கான இயந்திர உபகரணங்களின் உற்பத்தியாளர்கள், பல்லைக்கழகங்கள், வேறு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் இறப்பர் கைத்தொழில் இலங்கைப் பாதணி உற்பத்திப் பிரிவின் முக்கிய பங்கீடுபாட்டாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இப்பிரிவை முன்னேற்றுவதற்கு மேற்கூறிய அனைத்து பங்கீடுபாட்டாளர்களையும் முன்னேற்றுவது அவசியமாகும். இப்பிரிவின் முன்னேற்றத்திற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பது இன்றியமையாத ஒரு பிரிவாக விளங்குவதனால், கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB), இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம் (SLITA), தேசிய தொழிற்பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை (NAITA) உள்ளிட்ட நிறுவனங்கள் முக்கியமாக இயங்கும் நிறுவனங்களாக பதனிட்ட தோல்பொருள் கைத்தொழிலின் முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதற்கு கூட்டாக முன்னிலை வகிக்க வேண்டும்.

# 4.10 இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம்

## 4.10.1 அறிமுகம்

உள்நாட்டு இறப்பர் சார்ந்த கைத்தொழில்களுக்கு உதவுமுகமாக உலக வங்கியின் ஆலோசனையின் பேரிலும் நிதியுதவியின் கீழும் 1980 ஆம் ஆண்டில் பேலியகொட இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இறப்பர் உற்பத்திக் கைத்தொழில் மொத்தத் தேசிய ஏற்றுமதியில் 8% சதவீதமான 4 ஆவது பாரிய ஏற்றுமதி வருமானமீட்டும் கைத்தொழிலாக விளங்குவதுடன், அதன் தரமும் நம்பகத்தன்மையும் தொடர்பில் சர்வதேச புகழ் பெற்றுள்ளது. கச்சா இறப்பர் (Raw Rubber) பதனிடல் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட பல இறப்பர் உற்பத்திகள் இலங்கையில் உற்பத்தியாகிறது. பாரியளவு, சிறிய மற்றும் நடுத்தர அளவான வகுதிகளின் கீழ் இறப்பர் தயாரிப்புகளின் உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் உள்ளனர். ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட இறப்பர் தொழிற்சாலைகளில் கணிசமானவை பாரியளவு மற்றும் நடுத்தர அளவானவையாக இருப்பதுடன், அவை பிரதானமாக மேல் மாகாணத்தில் பரந்துள்ளன. சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தரத்துடன்கூடிய கச்சா இறப்பர் பதனிடல் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட இறப்பரை உற்பத்தி செய்வதற்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை முன்னின்று செயலாற்றுகின்றது.

இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தினால் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் தகவல்கள், நிபுணத்துவ ஆலோசனை சேவைகள், இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள் சம்பந்தமான ஆலோசனைச் சேவைகள் முதலியன வழங்கப்படுகின்றன. இப்பிரிவு வசம் இறப்பர் பட்டி (Rubber Band), மணியுரு அமைப்பு, வைத்திய, கைத்தொழில் மற்றும் வீட்டு கையுறை போன்ற இறப்பர்பால் சார்ந்த உற்பத்திகள், நெளிவு குழைவான நீண்ட நீர்க்குழாய் (Hose), வாகன உதிரிப்பாகங்கள், கைத்தொழில் துணையுறுப்புகள், ரயர், ரியூப், மோட்டார் வாகன ரயர் போன்ற கைத்தொழில் உற்பத்திகள், பால் துடைப்பம், கம்பளங்கள், விளையாட்டுப் பொருள்கள், பாதணிகள், வெந்நீர்க் குடுவைகள் மற்றும் அவை சார்ந்த துணையுறுப்புகள் போன்ற சாதாரண இறப்பர் உற்பத்திகள் முதலியவற்றைக் கொண்ட பரந்ததொரு பரப்பில் அடங்கும் ஏராளமான உற்பத்திகள் காணப்படுகினறன.

இப்பிரிவிலுள்ள பல்வேறு திறமைகளும் அனுபவங்களும் வாய்ந்த தொழில்நுட்பவியலர்கள் மற்றும் வடிவமைப்புக் கலைஞர்கள் காரணமாக இறப்பத் பாண்ட உற்பத்தியாளர்களுக்கு சந்தையில் நிலவும் கடும் மற்றும் போட்டித் தேவைகளுக்கு ஏற்றவாறு உற்பத்திகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. மேலும் இறப்பர் உற்பத்திக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கும் ஊக்குவிப்பிற்கும் சில நிறுவனங்களின் ஊடாக அரசாங்கம் தனது ஒத்தாசையை வழங்குகின்றது. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம், கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் பல்வேறு மூலோபாயங்களை அமுல்படுத்தி இத்துறையின் அபிவிருத்தியில் இணைகின்றன. .

இப்பிரிவினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளில் சில பின்வருமாறு:-

- உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்தி.
- ஆராய்ச்சி வசதிகளையும் தரச் சான்றிதழ்களையும் வழங்குதல்.
- தொழில்நுட்ப மதியுரை மற்றும் விரிவாக்கல் சேவைகளை வழங்குதல்.
- பகுதியளவு வர்த்தக சேவைகளை வழங்குதல்.
- கல்வி, ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்களுக்கும் கைத்தொழில்களுக்கும் இடையில் ஒருங்கிணைப்புடன் நடவடிக்கை எடுத்தல்.

## 4.10.2 பிரிவின் செயற்பாடுகள்

- விரிவாக்கல் மற்றும் மதியுரைச் சேவைகள்
    - ✓ கருத்திட்டங்களை அமைத்தலும் மதிப்பீடுசெய்தலும்

- ✓ பொறித்தொகுதிகளையும் இயந்திர உபகரணங்களையும் தயாரித்தல்.
- ✓ உற்பத்திச் செயன்முறைகள் பற்றிய தொழில்நுட்ப அறிவை வழங்குதல்.
- ✓ தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல்.
- ✓ நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் (விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், செய்துகாட்டல்கள், தொழில்நுட்பப் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள்)
- ✓ கண்காட்சிகளில் பங்குபற்றுதல்.
- ✓ சந்தை பற்றிய அடிப்படை ஆலோசனைகளையும் உப ஒப்பந்தங்களையும் வழங்குதல்.
- ✓ இயந்திர உபகரணங்களையும் மூலப்பொருள்களையும் தெரிவுசெய்தல்.

- தரக் கட்டுப்பாடும் உற்பத்திகளின் சோதிப்பும்.

  - ✓ தரச் சான்றுறுதிப்படுத்துகை - இறப்பர் சேர்மங்கள்.
  - ✓ தேசிய மற்றும் சர்வதேச நியமங்களுக்கு அமைய மூலப்பொருள்களையும் இறப்பர் சேர்மங்களையும் சோதித்தல்.

- உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்தி

  - ✓ இறப்பர் உற்பத்திகளும் சேர்மங்களைத் திட்டமிடுதலும் அபிவிருத்தி செய்தலும்.
  - ✓ மாதிரி உற்பத்திகளைச் (Sample Products) செய்தல்.
  - ✓ டை மற்றும் வார்ப்பச்சுக்களின் சோதனை (Die & Mold Testing) பற்றிய ஆலோசனை வழங்குதல்.

- பகுதியளவு வர்த்தக செயற்பாடுகள்

  - ✓ உலர்ந்த இறப்பர் மற்றும் லேடெக்ஸ் சேர்மங்களை (Dry rubber & Latex compounds) வழங்குதல்.
  - ✓ உலோகப் பிணைப்புக்கள் மற்றும் வார்ப்பச்சுக்களை கழற்றும் பொருள்களுக்காக இறப்பர் வழங்குதல்.
  - ✓ தற்போதுள்ள இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.



**அட்டவணை 4.10.1 : 2022 ஆம் ஆண்டில் நிலையத்தின் செயலாற்றுகை**

| # | சேவைகள் | அளவிடும் காட்டி | எண்ணிக்கை |
|---|---|---|---|
| அ) | தொழில்நுட்பப் பரிமாற்று :<br>1. செய்துகாட்டல்கள் (Demonstrations)<br>2. பயிற்சிப் பட்டறைகள்: இறப்பர்கலந்த தும்பு உற்பத்திகளின் தயாரிப்பு பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்<br>3. விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் (MPUI உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ்) | நிகழ்ச்சித்திட்டங்கள்/ சேவைநாடிகளின் எண்ணிக்கை | (10/28)<br>(04/58)<br>(02 - மொணராகலை, குருணாகல்/48) |
| ஆ) | சோதனை வசதிகள் (Testing facilities) :<br>(இதில் ஏற்றுமதிச் சந்தைக்கு இறப்பர் உற்பத்தி செய்யும் கைத்தொழிலாளர்களுக்கு சோதனை வசதிகளை வழங்குதல் உள்ளடங்கும்) | வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை<br>பரிசோதனைகளின் எண்ணிக்கை | 30<br>142 |
| இ) | உற்பத்திகள் மற்றும் செயன்முறை அபிவிருத்தி | வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை | 12 |

### 4.10.3 அபிவிருத்திச் செயற்பாடுகள்

2022 ஆம் ஆண்டில் பின்வரும் சேர்வைகளை உருவாக்குதலும் அபிவிருத்தி செய்தலும். தரத்தை முன்னேற்றுதலும், உற்பத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவுசெய்தலும் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| **அ)** | சேர்மங்களைத் திட்டமிடுதலும் விருத்தி செய்தலும் விசேட தொழில்களுக்காக மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகள் |
| i | போல் வேல் |
| ii | வாழை நார்க் கயிறு |
| iii | அரைப்பு இறப்பர் மூடி |
| iv | இறப்பர் கேஸ்கெட் இயந்திர செயலி |
| v | மட் வீல் |
| vi | ∴பில்லிங் மெசின் கார்ட் |
| vii | ஓயில் சீல். (Oil Seal) |
| viii | ஜெக் சீல் |
| ix | இறப்பர் பால் தாங்கியின் இறப்பர் பொதியிடல் |
| x | கேஸ்கெட் சீல். |
| **ஆ)** | **தர மேம்படுத்தல் செயற்பாடுகள் - 142 சான்றிதழ்கள்** |
| | விசேட உற்பத்திகள் |
| i | டயர் திரெட் - CTB |
| ii | ரயர்கள் |
| iii | றப்பர் றேல் பேட் |
| iv | லேடெக்ஸ் பெண்ட் |
| v | இறப்பர் கைப்பிடிகள் |
| vi | பாதுகாப்பான சப்பாத்து அடிகள் |
| vii | றப்பர் பீடிங் |
| viii | வோட்டர் சீல். |
| ix | பாரம் நிறுக்கும் இயந்திரங்களுக்கான மவுன்ட்கள் |
| x | ஸ்விமிங் கெப். |

| இ) | பிரதான உற்பத்தி அபிவிருத்தித் தொழில்கள் |
|---|---|
| | உற்பத்தி |
| i | றப்பர் பெல்லோ. |
| ii | அழுத்த பலூன்கள் |
| iii | றப்பர் புஷ் |
| iv | வோட்டர் சீல். |
| v | மின்தூக்கிகளுக்கான இறப்பர் மவுன்ட் |
| vi | பார ட்ரக் ஊர்திகளுக்கான இறப்பர் மவுன்ட் |
| vii | றப்பர் O ரிங். |
| viii | பிரேக் வொஷர் |
| ix | பிளெட் சீல். |
| x | இயந்திரப் பாகங்கள் |
| xi | இறப்பர் மை (HAF Dispersion) |

புதிய தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கும் தற்போதுள்ள தொழில்முனைவோரினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்கும் உலர் இறப்பர் மற்றும் இறப்பர்பால் சார்ந்த உற்பத்திகள் பற்றிய 10 தொழில்நுட்ப செய்துகாட்டல்களும், 04 பயிற்சிப் பட்டறைகளும், 02 விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளும் நிலையத்தினால் நடாத்தப்பட்டுள்ளன.

### 4.10.4 ஆண்டினுள் முன்னெடுக்கப்பட்ட கருத்திட்டங்கள்

- **புதிய தொழில்முயற்சிகளை உருவாக்குதல்**

ஐஸ் ஹொக்கி விளையாட்டில் பயன்படுத்தும் பந்து, றப்பர் O ரிங், மலையேறும்போது பயன்படுத்தும் சப்பாத்து, லீப் சீல், இறப்பர் கப்லின் போன்ற இறப்பர் உற்பத்திகளின் இறக்குமதிப் பதிலீடுகளுக்கான ஆறு புதிய கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டன.



*மூலம்: இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடக அலகு*

### 4.10.5 ஆண்டுக்குரிய வருமானம்

கீழ்க்காணுமாறு முக்கிய நான்கு துறைகளின் கீழ் ஆண்டுக்குரிய வருமானத்தை உருவாக்குவதற்கு நிலையத்தின் செயற்பாடுகள் பங்களிப்புச் செய்தன. ஆண்டினுள் இந்நிலையம் சுய நிதியை ஏற்பாடு செய்து கொள்ளும் அலகொன்றாக மாறும் நோக்கை நிறைவேற்றிக்கொள்வதற்கு திருப்திகரமான முன்னேற்றமொன்றை அடைந்துள்ளது. அதன்படி, தொழில்நுட்ப மற்றும் வர்த்தக நடவடிக்கைச் செயற்பாடுகளின் மூலம் ஈட்டிய பெறுமதிசேர் வரி நீங்கலான வருமானம் 26.4 மி.ரூ. ஆக இருந்தது.


**அட்டவணை 4.10.2 : பண்ட உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்**

| | அளவு (கி.கி.) | விற்பனைப் பெறுமதி (ரூ) | மொத்தம் (ரூ) |
|---|---|---|---|
| **விற்பனைகள்** | | | |
| பகுதியளவு வர்த்தக நடவடிக்கைகள் | 30,600 | 25,505,668 | |
| | | | **25,505,668** |
| **சேவைகள்** | | | |
| i. விரிவாக்கலும் மதியுரையும் (302) (செய்துகாட்டல்/ பயிற்சிப் பட்டறை/ உப ஒப்பந்தம்) | | 207,850 | |
| ii. தரக் கட்டுப்பாடும் ஆய்வுகூடப் பரிசோதனைகளும் | | 443,694 | |
| iii. உற்பத்தி அபிவிருத்தி | | 285,828 | **937,372** |
| **மொத்தம்** | | | **26,443,040** |
| **பெறுமதிசேர் வரி 8%** | | | **2,992,011** |
| **வரியுடன் மொத்தம்** | | | **29,435,051** |

**அட்டவணை 4.10.3 : உள்ளபடியான வருமானத்தின் வருடாந்த ஒப்பீடு**

| ஆண்டு | பெறுமதிசேர் வரியும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி நீங்கலான உள்ளபடியான வருமானமும் (ரூ) |
|---|---|
| 2019 | 21,508,696 |
| 2020 | 18,275,053 |
| 2021 | 23,469,556 |
| 2022 | 26,443,040 |

**வரைபு 4.10.1: வருடாந்த உள்ளபடியான வருமானத்திற்கு இடையிலான ஒப்பீடு**




இலங்கை, முழு உலகிலும் பெரும்பாலான கைத்தொழில்களில் புரட்சிகர மாற்றமொன்றை ஏற்படுத்தத் துணிந்த உலகின் முன்னணி இயற்கை இறப்பர் உற்பத்தி நாடாகும். தரமான இயற்கை இறப்பர்பால் சார்ந்த உற்பத்திகளுக்கு புகழ்பூத்த இலங்கையில் இயற்கை இறப்பர் உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் உலக சந்தைக்கும் திண்ம ரயர், சப்பாத்து அடிகளுக்கான சோல் கிறேப், உயர் தரத்திலான சத்திர சிகிச்சைக் கையுறைகள் போன்ற இறப்பர் உற்பத்திகளை பேண்தகு விதத்தில் உற்பத்தி செய்வதில் சிறப்பிடம் வகிக்கிறது. IDB இன் இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தின் முக்கிய நோக்கம், உள்ளூர் இறப்பர் உற்பத்திகளை உற்பத்திசெய்பவர்களுக்கு உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்திக்கான வசதியளிப்பதாகும். இதுதவிர இறப்பர்பால் மற்றும் உலர்த்திய இறப்பர்

கலவை, இரசாயனப் பதார்த்தங்கள், ஏனைய பதனிடல் காரணியான சில்லறை விற்பனை, விசேட பணி செயற்கை இறப்பர் பால் கலவைகளின் விற்பனை, முன்னோடிக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக எடுத்துச் செல்லக்கூடிய இயந்திர உபகரணங்களை வாடகைக்கு வழங்கல் முதலானவை இணைப்பிகளையும் வாடிக்கையாளர்களின் குறிப்பான தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக வழங்கப்படும் வேறு சேவைகளாகும். இப்பிரிவின் கடந்த சில ஆண்டுகளின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொள்ளும்போது, அவர்களின் துறைவாரியான செயற்பாடுகளின் செயலாற்றுகையில் தொடர் வரிசையான முன்னேற்றமொன்று அடையப் பெற்றுள்ளதுடன், கருத்திட்டங்களும் ஆலோசனைகளும் (செய்துகாட்டல்கள்/ பயிற்சிப் பட்டறைகள்/ உப ஒப்பந்தங்கள்), தரக் கட்டுப்பாடு, ஆய்வக பரிசோதனைகள், உற்பத்திகளின் அபிவிருத்தி ஆகியன அத்துறைகளில் அடங்கும். கொவிட்-19 என்பது உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய மிக உயர் தொற்று வீதம் கொண்ட ஒரு பெருந்தொற்று என்பதால், மக்களின் நலன் கருதி வரம்புகளை விதிப்பதற்கு அரசாங்கத்திற்கும் சுகாதார அதிகாரிகளுக்கும் நேரிட்டது. நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் எந்தவொரு வெளித் தாக்கத்தினாலும் மிகக் கூடுதலான அளவில் பாதிப்புக்கு உள்ளாவதால், 2021 ஆம் ஆண்டிலும் இப்பெருந்தொற்றின் பாதிப்பைக் காண முடிந்தது. எவ்வாறாயினும், சிறிது காலமாக நேரடி அச்சுறுத்தல் நிலவிய போதும், நியாயமான ஒரு காலப்பகுதியினுள் பெரும்பாலான துறைகளுக்கு வழமைநிலைக்குத் திரும்ப முடிந்தது. கடந்த சில ஆண்டுகளில் வருமானத்தின் முன்னேற்றத்தின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான வருமானங்களில் நிலையான ஒரு வளர்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களில், தனியார் உரித்துள்ள இலங்கையின் கைத்தொழில்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட இறப்பர் உற்பத்திகளுடன் உலக சந்தையில் பிரவேசித்துள்ளன. இயற்கை இறப்பர் பதனிடல் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட பல்வேறு இறப்பர் உற்பத்திகளை இலங்கை உற்பத்தி செய்கிறது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் முழுதுமளாவிய இயற்கை இறப்பர் உற்பத்தி 70,867 மெட்ரிக் தொன் ஆக மாறியுள்ளது. தற்போது உலக கேள்வியில் 28.8% ஐ நிறைவுசெய்யும் உலகின் முன்னணி திண்ட ரயர் ஏற்றுமதியாளர், இலங்கையாகும். உலக சந்தையில் இறப்பர் பாலை அடிப்படையாகக்கொண்ட கையுறைகளுக்கும் இலங்கை பிரசித்தி பெற்றதாகும்.

இறப்பர் என்பது சுற்றாடல் நட்புறவான ஒரு மூலப்பொருளாகும். இலங்கைச் சூழமைவில் இறப்பர் தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கு தடையின்றி இயற்கை இறப்பரைப் பெற்றுக்கொள்ளல், பயிற்றுவிக்கக்கூடிய பயிற்றப்பட்ட உழைப்பாளர் சேனையொன்று காணப்படல், சர்வதேச சந்தையின் தேவைகளை நிறைவேற்றவறத்கு உதவுவதுடன், நேரடி வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்திழுப்பதற்கு உட்கட்டமைப்பு வசதிகளையும் அரச கொள்கைகளையும் அபிவிருத்தி செய்வதும் இக்கைத்தொழிலின் விரிவாக்கத்திற்குள்ள மூலவள வாய்ப்புகளிற் சிலவாகும். இதுதவிர, கச்சா இறப்பர் (raw rubber) உற்பத்திகளை அதிகரித்தல், உற்பததி செய்த இறப்பர் உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு ஐனுடீ இனால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இலங்கையிலும் உலகம் பூராவும் இறப்பர் பிரிவுக்காக நிறுவப்பட்ட ஒரு கைத்தொழில் காணப்படுவதுடன், இயற்கை இறப்பரை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல், உற்பத்திக் கைத்தொழிலின் பயிற்றப்பட்ட உழைப்பாளர் சேவை, வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்துகொள்வதற்கு ஊக்குவித்தல், உழைப்பாளர் சேனையொன்று காணப்படல், உழைப்புத் தரநியமங்களுக்கும் பண்பாட்டு நடைமுறைகளுக்கும் இணங்கியொழுகுதல், இறப்பர் கைத்தொழில் வசமுள்ள சில அனுகூலங்களாகும். அது இந்த விசேட பிரிவின் கோடிட்டுக்காட்டக்கூடிய செயலாற்றுகைக்கு காரணமாக அமைந்துள்ளது. மறுகோணத்தில், மூலப்பொருள்கள் போதுமானதாக இல்லாமை, விலை ஏற்றத்தாழ்வுகள், ஆராய்ச்சிகளும் அபிவிருத்தியும் போதுமானதாக இராமை, மேற்பார்வைக்கும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிக கிரயம், இயந்திர உபகரணங்களையும் தொழில்நுட்பத்தையும் பரிமாறிக்கொள்வதற்கு சுமக்க முடியாத கிரயம், எரிசக்திக் கிரயம், உற்பத்திக் கிரயம் ஆகியன இப்பிரிவிலுள்ள உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் தடங்கல்களாகும்.

இப்பிரிவை அபிவிருத்திசெய்வதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும் இப்பிரிவு எதிர்நோக்கும் தடங்கல்களை ஒழித்துக் கட்டுவதற்கும் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு மிக முக்கியமானதாகும். இறப்பர் மற்றும் இறப்பர் உற்பத்திக் கைத்தொழிலின் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புக்காக நிறுவப்பட்டுள்ள சில நிறுவனங்களின் ஊடாக அந்த ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம், கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அத்தகைய தடைகளை வெற்றிகொள்வதற்கு பல்வேறு மூலோபாயங்களை அமுல்படுத்துவதற்கு இணைந்துள்ளன.



# 05) நிதிசார் மீளாய்வு

5.1 விரிவான நிதிநிலைக் கூற்று

5.2 விரிவான வருமானக் கூற்று

5.3 உரிமை மாற்றக் கூற்று

5.4 காசுப்பாய்ச்சல் கூற்று

5.5 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களும்

## கணக்கீட்டு அலுவலரின் சான்றுப்படுத்துகை

2022 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டுக்கான இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (IDB) நிதிக்கூற்றுக்கள் 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 35 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள படிவத்திற்கும் மாதிரிக்கும் அமைய 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டம், இலங்கை கணக்கீட்டு நியமனங்கள் (LKASs) மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமனங்களுக்கு (SLFRSs) அமைய தயாரிக்கப்பட்டுள்ளதுடன், விரிவான வருமானக் கூற்றிலும் நிதிநிலைமைக் கூற்றிலும் காணப்படும் குறிப்புகளுடனும் அட்டவணைகளுடனும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிரல் அமைச்சான கைத்தொழில் அமைச்சு, நிதி அமைச்சு போன்ற ஏனைய ஒழுங்குறுத்துகைக்கான நிறுவனங்களினால் விதித்துரைக்கப்பட்ட நிதிசார் சட்டவிதிகளுக்கும் நடபடிமுறைகளுக்கும் அமைய செயலாற்றப்பட்டுள்ளதுடன், கொடுக்கல்வாங்கல்களின் செம்மையையும் அனைத்துச் செலவுகளின் வினைத்திறனையும் உறுதிப்படுத்துவதற்கான கட்டுப்பாட்டு முறைகள் இயன்றளவு நடைமுறைச் சாத்தியமானதாக பேணி வரப்பட்டுள்ளது. எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் அமைய நிதிக்கூற்றுக்கள் திருப்திகரமான விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அவை சபையின் (IDB) நிதிநிலைமை பற்றிய மெய்ம்மையானதும் நியாயமானதுமான ஒரு நிலைமையைப் பிரதிபலிக்கின்றன.

**வைத்தியர் சாரங்க அலகப்பெரும**
**தவிசாளர்**
**கைத்தொழில் அபிவிருத்திச் சபை**

2023 ஒற்றோபர் 25

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

### விரிவான நிதிநிலைக் கூற்று

### 2022 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவுடைந்த ஆண்டுக்கானது

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

| சொத்துக்கள் | குறிப்பு | 2022 | 2021 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள் | 14 | 502,360,689 | 513,322,135 |
| முதலீட்டு ஆதனம் | 15 | 1,184,511,500 | 1,115,563,290 |
| நடைபெற்றுவரும் மூலதன வேலை | 16 | 38,614,504 | 88,041,066 |
| | | **1,725,486,692** | **1,716,926,491** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பண்டங்கள் கையிருப்பு | 17 | 48,008,293 | 25,947,972 |
| வர்த்தக மற்றும் பிற கிடைத்தற்பாலன | 18 | 25,300,172 | 24,546,068 |
| பிற நடைமுறைச் சொத்துக்கள் | 19 | 44,914,025 | 48,626,679 |
| வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும் | 20 | 79,033,112 | 68,612,747 |
| கிடைக்கப்பெற வேண்டியவை - விசேட கருத்த்தட்டங்கள் | 21 | 9,348,448 | 13,556,140 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 22 | 344,946,349 | 220,045,122 |
| | | **551,550,398** | **401,334,727** |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,277,037,091** | **2,118,261,218** |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்குகளும்** | | | |
| பிற்போடப்பட்ட மூலதனக் கொடைகள் | 23 | 258,785,672 | 304,455,733 |
| மூலதன ஒதுக்குகள் | | 6,243,013 | 6,243,013 |
| உரிமைமாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி | 24 | 13,447,061 | 13,447,061 |
| நிலையான சொத்து மீள்கணிப்பீடு மீதான மிகை | 25 | 960,696,320 | 960,696,320 |
| பிற்போடப்பட்ட கொடை - மூலதனக் கருத்திட்டங்கள் | 26 | 581,577,397 | 556,547,142 |
| | | **1,820,749,463** | **1,841,389,269** |
| திரண்ட நட்டங்கள் | 27 | (86,208,374) | (206,316,490) |
| **மொத்த உரிமையாண்மை** | | **1,734,541,090** | **1,635,072,778** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 28 | 206,829,087 | 206,131,395 |
| விசேட கருத்திட்டங்களுக்கான கொடைகள் | 29 | 661,300 | - |
| | | **207,490,387** | **206,131,395** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைகள் | 30 | 54,929 | 74,854 |
| கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவைகள் | 31 | 7,759,526 | 8,195,765 |
| நிதி ஏற்பாடும் திரண்ட செலவுகளும் | 32 | 327,191,159 | 268,786,425 |
| | | **335,005,614** | **277,057,044** |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | **2,277,037,091** | **2,118,261,218** |

பக்க இல. 06 முதல் 33 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்நிதிக்கூற்றுக்களின் கட்டமாயமான ஓர் அங்கமாகும்.

**ஜே.எம்.ஆர்.எஸ்.ஜயசிங்க**
பணிப்பாளர் (நிதி)

திகதி: 2023.10.25

இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்கும் பொறுப்பு பணிப்பாளர் நாயகத்திற்கு உரியதாகும். இந்நிதிக் கூற்றுக்கள் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் சார்பாக 2023 அக்டோபர் மாதம் 25 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| **வைத்தியர் சாரங்க அலஹப்பெரும** | **சுரங்க மெண்டிஸ்** | **எச்.எம்.ரஞ்சித் கிரிஎல்ல** |
| தவிசாளர் | பணிப்பாளர் சபை உறுப்பினர் | பணிப்பாளர் சபை உறுப்பினர் |

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

**விரிவான வருமானக் கூற்று**

2022 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது.

அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.

| | குறிப்பு | 2022 | 2021 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| வருமானம் | **05** | 496,373,430 | 394,565,726 |
| விற்பனை மற்றும் சேவைக் கிரயம் | **06** | (319,298,547) | (278,614,556) |
| **மொத்த இலாபம்** | | **177,074,883** | **115,951,170** |
| வட்டி வருமானம் | **07** | 14,955,664 | 5,812,667 |
| பிற வருமானங்கள் | **08** | 168,171,224 | 106,106,069 |
| அரச மீண்டெழும் கொடைகள் | **09** | 505,400,000 | 465,750,000 |
| நிருவாகச் செலவுகள் | **10** | (693,725,247) | (624,810,763) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | **11** | (67,189,699) | (8,902,791) |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளின் பெறுபேறுகள்** | | **104,686,825** | **59,906,352** |
| நிதிக் கிரயம் | **12** | (1,070,001) | (588,050) |
| **வரி செலுத்த முன்னர் தேறிய வருமானம்/(நட்டம்)** | | **103,616,824** | **59,318,302** |
| பிற விரிவான வருமானம் | **13** | 15,052,636 | 15,123,409 |
| **ஆண்டுக்குரிய தேறிய வருமானம்/ (நட்டம்)** | | **118,669,460** | **74,441,711** |

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

**நிதி மற்றும் ஒதுக்கு மாற்றல் கூற்று**

*(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)*

| | பிற்போப்பட்ட மூலதனக் கொடைகள் | மூலதனமும் ஒதுக்குகளும் | உரிமை மாற்றிய சொத்துக்களின் பெறுமதி | மீள் மதிப்பீட்டு மேன்மிகை | பிற்போடப்பட்ட அரச கொடைகள் - கருத்திட்டங்கள் | திரண்ட மேற்மிகை/ பற்றாக்குறை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2021 சனவரி 01 இலுள்ளவாறான மீதி** | **341,681,267** | **6,243,013** | **13,447,061** | **960,696,321** | **565,219,549** | **(272,134,396)** | **1,615,152,814** |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் | - | - | - | - | - | (8,623,806) | (8,623,806) |
| ஆண்டுக்குரிய இலாபம் | - | - | - | - | - | 74,441,711 | 74,441,711 |
| அரச கொடைகள் | 32,230,000 | - | - | - | 42,097,219 | - | 74,327,219 |
| அரச கொடைகள் இலதாக்கல் | (69,455,534) | - | - | - | (50,769,626) | - | (120,225,160) |
| **2021.12.31 இல் உள்ளவாறான மீதி** | **304,455,732** | **6,243,013** | **13,447,061** | **960,696,321** | **556,547,142** | **(206,316,491)** | **1,635,072,778** |
| | | | | | | | |
| **2022 சனவரி 01 இலுள்ளவாறான மீதி** | **304,455,732** | **6,243,013** | **13,447,061** | **960,696,321** | **556,547,142** | **(206,316,491)** | **1,635,072,778** |
| முந்திய ஆண்டின் சீராக்கங்கள் (குறிப்பு 26.1) | - | - | - | - | - | 1,438,656 | 1,438,656 |
| ஆண்டிற்குரிய இலாபம் | - | - | - | - | - | 118,669,460 | 118,669,460 |
| அரச கொடைகள் | 24,000,000 | - | - | - | 48,251,112 | - | 72,251,112 |
| அரச கொடைகள் இலதாக்கல் | (69,670,060) | - | - | - | (23,220,857) | - | (92,890,917) |
| **2022.12.31 இல் உள்ளவாறான மீதி** | **258,785,673** | **6,243,013** | **13,447,061** | **960,696,321** | **581,577,397** | **(86,208,375)** | **1,734,541,090** |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

**காசுப் பாய்ச்சல் கூற்று**

**2022.12.31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது**

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

| | 2022 | 2021 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| ஆண்டுக்குரி தேறிய இலாபம்/ (நட்டம்) | 103,616,824 | 74,441,711 |
| **சீராக்கல்கள்:** | | |
| கையுதிர்ப்பு இலாபம் | (348,249) | - |
| பெறுமானத் தேய்வு | 64,234,191 | 58,159,938 |
| கடனுக்கும் முற்பணங்களுக்குமான ஒதுக்குகள் | - | (426,929) |
| தொழில் வழக்குகளுக்கான ஏற்பாடுகள் | - | 4,294,311 |
| பணியாட்குழு மிகையூதியக் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் | 9,860,000 | 6,831,000 |
| பதிவழிக்கப்பட்ட நீண்டகால கடன்படுநர் மீதிகள் | - | 1,490,585 |
| மூலதனக் கொடை இலதாக்கல் | (92,861,917) | (93,427,864) |
| அறவிடமுடியாக் கடனும் ஐயக்கடனும் | (312,089) | 1,153,440 |
| வட்டி வருமானம் | (16,464,444) | (7,250,829) |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள் | 30,802,998 | 15,589,728 |
| | 98,527,315 | 60,855,091 |
| செலுத்தப்பட்ட ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள் | (15,052,670) | (12,430,323) |
| **தொழிற்படு மூலதன மாற்றல்களுக்கு முந்திய நடவடிக்கை இலாபம்/ (நட்டம்)** | **83,474,645** | **48,424,768** |
| கையிருப்பு (அதிகரிப்பு)/ (குறைப்பு | (22,060,321) | (7,000,709) |
| கடன்படுநர்களும் பெறப்படற்பாலவையும் (அதிகரிப்பு)/ குறைப்பு | (442,015) | 8,095,903 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் (அதிகரிப்பு)/ குறைப்பு | 3,712,654 | 2,355,153 |
| முற்கொடுப்பனவுகள் (அதிகரிப்பு)/ குறைப்பு | (10,420,365) | (12,830,097) |
| பெறப்படற்பாலவை - விசேட கருத்திட்டங்கள் அதிகரிப்பு/(குறைப்பு) | - | (2,444,258) |
| கடன்கொடுநர்களும் செலுத்தப்படற்பாலவையும் அதிகரிப்பு/ (குறைப்பு) | 48,544,733 | 43,032,253 |
| வங்கிக் கடன் மீதி அதிகரிப்பு/(குறைப்பு) | - | (2,725,171) |
| கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தவேண்டிய தொகைகள் அதிகரிப்பு/ (குறைப்பு) | (456,164) | 881,432 |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் | 1,438,656 | - |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **103,791,824** | **77,789,274** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| நிலையான வைப்புக்களின் முதலீடுகள் | - | 80,029,718 |
| நடைபெற்றுவரும் மூலதன வேலைகள் மீது முதலீடு செய்த தொகை | (45,431,201) | 7,363,811 |
| முதலீட்டுச் சொத்துக்களின் பேரில் முதலீடுசெய்த தொகைகள் | (361,737) | - |
| வட்டி வருமானம் | 16,464,444 | 7,250,829 |
| கையுதிர்ப்புச் சொத்துக்களிலிருந்தான காசு | 348,975 | - |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் கையகப்படுத்தல்/நிர்மாணித்தல் | (27,002,180) | (137,294,301) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(55,981,700)** | **(42,649,943)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| கிடைத்த கொடைகள் - மூலதன/விசேட கருத்திட்டங்கள் | 63,554,716 | 44,894,869 |
| கிடைத்த கொடைகள் - மூலதன | 24,000,000 | 32,230,000 |
| விசேட கருத்திட்டங்களில் முதலீடு | (10,463,612) | (30,442,913) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **77,091,104** | **46,681,956** |
| காசும் காசு மற்றும் காசுக்கு நிகரானவற்றின் தேறிய அதிகரிப்பு/குறைப்பு | 124,901,227 | 81,821,287 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு நிகரானவை | 220,045,122 | 138,223,834 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு நிகரானவை (தொடர்புக் குறிப்பு 22) | **344,946,349** | **220,045,121** |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களும்

## 1. பொதுவான தகவல்கள் (சட்ட வடிவமும் நிரந்தர முகவரியும்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட சபையாகும். சபையின் தலைமை அலுவலகம் இல.615, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

இலங்கையில் கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதில் உதவுதல் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முதன்மைப் பணிகளாகும்.

## 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 2.1 தயாரிப்பதற்கான அடிப்படையும் நிதிசார் அறிக்கையிடல் நியமங்களைப் பின்பற்றுதலும்

இலங்கை பட்டயப்பெற்ற கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் (SLFRS) இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுக்கும் (SLFRS) அமைய சபையின் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்துசெல்லும் அடிப்படையொன்றின் பேரில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், வேறு வகையில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டாலொழிய, இக்காலப்பகுதி முழுவதற்கும் ஏற்புடையவாறு இக்கணக்கீட்டுக் கொள்கைகள் ஏற்புடைத்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட கூற்றுக்களின் கீழான நியாயமான பெறுமதி தொடர்பில் உகந்த வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்தவிடத்து, நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையிலும், வரலாற்றுக் கிரய அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

சபையின் நிதிசார் காலக்கெடு, சனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான பன்னிரண்டு (12) மாத காலப்பகுதியை உள்ளடக்கும்.

### 2.2 ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள்

#### 2.2.1 சொத்துக்களின் பெறுமதி

அனைத்து ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள் தொடக்க கட்டத்தில் கிரயத்தில் அறிக்கையிடப்படுவதுடன், தொடர்ந்து வரலாற்றுக் கிரயத்திலிருந்து பெறுமானத் தேய்வைக் கழித்து காட்டப்படுகின்றன. குறித்த உருப்படியை கையகப்படுத்துவதற்கு நேரடியாக உறப்பட்ட கிரயம் வரலாற்றுக் கிரயத்தில் சேர்க்கப்படுவதுடன், உருப்படியை கையகப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அல்லது குறித்தவொரு காலக்கெடுக்குள் கையிருப்புகளின் உருவாக்கம் தவிர்ந்த வேறு கருமங்களுக்காக அக்காலக்கெடுவினுள் குறித்த உருப்படியை பயன்படுத்தியிருப்பதன் பெறுபேறாக நிறுவனமொன்றினால் உறப்படும் கடப்பாடான அவ்வுருப்படியை கழற்றி அகற்றிவிட்டு அவ்வுருப்படி இருந்த இடத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டுவருவதற்கான அடிப்படை மதிப்பீடுகளை மேற்கொள்ளும் செலவும் வரலாற்றுக் கிரயத்தைச் சாரும்.

சொத்தொன்றை மீள்கணிப்பீடு செய்யும்போது எடுத்துச்செல்லப்படும் பெறுமதியில் அதிகரிப்பு ஏதும் ஏற்படுமாயின், அது முன்பு செலவொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட அச்சொத்துக்குரிய முந்திய மீள் கணிப்பீட்டுக் குறைவொன்றுக்கு மறுதலையாக அமையாதெனில், அது நேரடியாகவே மீள்கணிப்பீட்டு மிகைக்கு செலவு வைக்கப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், அதிகரிப்பு முன்னரே எழுதப்பட்டுள்ள அளவிற்கு வருமானமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளது. மீள்கணிப்பீட்டின் பெறுபேறொன்றாக சொத்தொன்றின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதி குறைவடையும்போது அக்குறைவு அச்சொத்துக்குரிய முந்திய அதிகரிப்பொன்றை மறுதலையாக மாற்றியமைக்கவில்லையெனில் அது செலவொன்றாக ஏற்றங்கீகரிக்கப்படுவதுடன், அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் அக்குறைவு அச்சொத்துக்கு ஏற்புடைய மீள்கணிப்பீட்டு மிகையில் உறப்படும் தொகையைத் தாண்டிச் செல்லாத மட்டத்திற்கு குறித்த மீள்கணிப்பீட்டு மேன்மிகையொன்று காணப்படுமாயின், அம்மேன்மிகையிலிருந்து அது அறவிடப்படும். சொத்துக்குரிய மீள்கணிப்பீட்டு மேன்மிகையில் யாதேனுமொரு மீதி நிலுவையாக இருப்பின், அது அச்சொத்தை அகற்றும்போது அல்லது கையாளும்போது நேரடியாகவே திரண்ட இலாபத்திற்கு/ (நட்டத்திற்கு) மாற்றப்படும்.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.2.1 எஞ்சிய பகுதி…..

உருப்படியுடன் சம்பந்தப்பட்ட எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு பாய்ச்சப்படுதல் இடம்பெறுமாயின் அத்துடன் உருப்படியின் கிரயத்தை நம்பகமான முறையில் அளவிட முடியுமாயின் மாத்திரம், அதனைத் தொடர்ந்து உறப்படும் கிரயம் உகந்தவாறு சொத்துக்களின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதியில் சேர்க்கப்படும் அல்லது தனியான ஒரு சொத்தாக ஏற்றங்கீகரிக்கப்படும். மீள்நிறுவப்பட்ட பகுதியின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதி நீக்கப்படும். அனைத்து திருத்த வேலைகளும் பராமரிப்புச் செலவுகளும், அச்செலவுகள் உறப்பட்ட நிதிசார் காலப்பகுதியில் வருமானக் கூற்றில் சேர்க்கப்படும்.

### 2.2.2. பெறுமானத் தேய்வுகள்

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள் என்ற உருப்படியைப் பயன்படுத்துவதற்கு தயாராக இருத்தல் ஆரம்பித்த திகதியிலிருந்தே பெறுமானத் தேய்வுக் குறைப்பு ஆரம்பமாகிறது. அந்த உருப்படியை அகற்றும் வரை அக்காலக்கெடுவுக்குள் அச்சாதனம் பயன்படுத்தப்படாதிருந்தபோதும், தொடர்ச்சியாக பெறுமானத் தேய்வு குறைக்கப்படுகிறது. பெறுமானத் தேய்வு, எளிய நேர்கோட்டு அடிப்படையொன்றினால் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள் உருப்படியின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பயனுள்ள ஆயுட்காலம் முழுவதும் வருமானக் கூற்றிற்கு அறவிடப்படும். காணிகளுக்கு பெறுமானத் தேய்வு செய்யப்படுவதில்லை. மதிப்பீடுசெய்யப்பட்ட பயனுள்ள ஆயுட்காலங்கள் பின்வருமாறாகும்:-

| | |
|---|---|
| 1. காணி முன்னேற்றல்களும் கட்டிடங்களும் | 2.5% (40 ஆண்டுகள்) |
| 2. கணினி மென்பொருள்கள் | 07% (14 ஆண்டுகள்) |
| 3. பொறித்தொகுதிகள், இயந்திரங்கள், அச்சீட்டுப் பொறிகள், அலுவலக சாதனங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், தளபாடங்களும் பொருத்திகளும், சைக்கிள்கள், நானாவித சொத்துக்கள், பயன்பாட்டுச் சேவைகள், PABX முறைமைகள், வேறு சொத்துக்கள் | 10%, (10 ஆண்டுகள்) |
| 4. கணினிகளும் மோட்டார் வாகனங்களும் | (20%, 05 ஆண்டுகள்) |
| 5. சாதனங்கள், புத்தகங்கள் மற்றும் பயணப் பொதிகள் | (25%, 04 ஆண்டுகள்) |

சொத்துக்களின் எஞ்சியிருக்கின்ற பெறுமானங்களும் பயனுள்ள ஆயுட்காலங்களும் ஒவ்வொரு கணக்கீட்டுக் காலப்பகுதியின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு ஏற்றதாயிருப்பின், சீராக்கங்கள் செய்யப்படும்.

சொத்தொன்றின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதி, அதன் மதிப்பீடுசெய்யப்பட்ட, மீள அறவிட்டுக் கொள்ளக்கூடிய பெறுமதியை விட அதிகமானதாக இருப்பின், உடனே அச்சொத்தின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதி அதன் மீள அறவிட்டுக்கொள்ளக்கூடிய பெறுமதிக்கு எழுதப்படும்.

கையுதிர்ப்பு செய்வதன் மூலம் பெறப்படும் தொகையை எடுத்துச்செல்லப்படும் பெறுமதியுடன் ஒப்பிடுவதன் மூலம் கையுதிர்ப்பின்போது ஏற்படும் இலாபம்/நட்டம் தீர்மானிக்கப்படும். அவ்வாறான இலாபங்கள்/நட்டங்கள் வருமானக் கூற்றில் சேர்க்கப்படும்.

## 2.3 மூலதனமாக்கப்படாத காணிகள் பற்றிய விபரங்கள்

பின்வரும் காணிகள் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அக்காணிகளின் சட்டரீதியான உரித்து சபை வசம் காணப்படாமையால், சபை அவற்றை மூலதனமாக்கவில்லை.

| இல. | காணி அமைந்துள்ள மாவட்டம் | விஸ்தீரணம் (பரப்பளவு) | | | பயன்படுத்தும் கருமம் | உரித்தைப் பெற்றுக் கொண்ட திகதி | கையகப்படுத்தாமைக்கான காரணம் | கையகப்படுத்திக்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | றூட் | பர்சஸ் | | | | |
| 1 | அநுராதபுரம் | | 1 | 20 | பிராந்திய அலுவலகம் | 1971 முதல் | ஓர் அரச காணியாகும். | ஆட்சி வழங்கப்பட்டுள்ளது. எனினும் உரிமைமாற்றம் செய்யப்படவில்லை. |
| | | | | | பொதுச் சேவை நிலையம் | | ஓர் அரச காணியாகும். | ஆட்சி (ிழளளநளளழைெ) வழங்கப்பட்டுள்ளது. எனினும் உடைமை (ழறநெசளாி) மாற்றப்படவில்லை. |
| 2 | பொலன்னறுவை | | 3 | 26.6 | பிராந்திய அலுவலகமும் சுற்றுலா பங்களாவும் | 1992 முதல் | ஓர் அரச காணியாகும். | மாவட்ட செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| 3 | மாத்தறை | 1 | 1 | 6.2 | பிராந்திய அலுவலகமும் பொதுச் சேவை நிலையமும் | | | கடிதமொன்றின் மூலம் மேலதிக காணிப் பதிவாளரினால் (மாத்தறை) சபைக்கு உடைமை மாற்றப்பட்டுள்ளது. |
| 4 | அம்பாந்தோட்டை | | | | பிராந்திய அலுவலகம் | 2006 முதல் | காணியை அபிவிருத்தி செய்வதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. | |
| | | | | | தோல்பொருள் நிலையம், விதாரந்தெனிய | | | காணியைக் கையகப்படுத்துவதற்கு பிரதேச செயலகத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 5 | மொணராகலை | | | 48 | பிராந்திய அலுவலகம் | | ஓர் அரச காணியாகும். | காணியைப் பயன்படுத்துவதற்கான உடைமை கடிதமொன்றின் மூலம் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| 6 | பதுளை | | | 50 | “கம்உதா” நிலையம் - மஹியங்கனை | 1997 முதல் | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உடைமை உரிமை மாற்றிப் பெறப்பட்டுள்ளது. | யுேனுயு க்கு கையளிக்கப்பட்டுள்ளது. |
| 7 | கொழும்பு | 1.2953 ஹெக்டயர் | | | தலைமை அலுவலகம் | | ஓர் அரச காணியாகும். (மொறட்டுவை பிரதேச செயலகம்) | காணி கையகப்படுத்துவதற்காக குறித்த நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. |
| | | | | | நவபிம நிலையம் | | | |
| 8 | கொழும்பு | 0.4046 ஹெக்டயர் | | | இறப்பர் அபிவிருத்தி நிலையம் | 1980 முதல் | 99 வருட குத்தகை அடிப்படையில். | |
| 9 | அம்பாறை | | | | பிராந்திய அலுவலகம் | | ஓர் அரச காணியாகும். | கடிதம் மூலம் உரிமைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 10 | கொழும்பு | 13 | 2 | 6 | கைத்தொழிற் பேட்டை, பானலுவ | 2006 முதல் | | சுதந்திர அளிப்புப்பத்திரமொன்றின் ஊடாக உரித்து ஐனுடீ க்கு வழங்கப்பட்டுள்ளது. (2023 பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி கையகப்படுத்தப்பட்டது.) |
| 11 | பத்தேகம | 1 | 2 | 0.5 | கைத்தொழிற் பேட்டை | 1992 முதல் | | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு காணிகளை உரிமைமாற்றம் செய்வதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. |
| 12 | பெலிஅத்த | 10 | 0 | 29.2 | கைத்தொழிற் பேட்டை | 1995 முதல் | | |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.4 முதலீட்டு ஆதனங்கள்

முதலீட்டு ஆதனங்கள் முதலில் கிரயத்திற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. முக்கிய புதுப்பித்தல்களுக்கும் மேம்படுத்தல்களுக்குமான கிரயம் மூலதனமாக்கப்பட்டுள்ளது. பராமரிப்புகள், திருத்த வேலைகள் மற்றும் சிறு மேம்படுத்தல்களுக்கான கிரயம், அது இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இலாபங்களிலும் நட்டங்களிலும் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. முதலீட்டு ஆதனமொன்றைக் கையாளும்போது, அவ்வாறு கையாள்வதன் மூலம் கிடைக்கின்ற தொகைக்கும் எடுத்துச்செல்லப்படும் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் இலாபங்கள் மற்றும் நட்டங்களில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

அனைத்து ஆதனங்களின் கிரயம் அல்லது மதிப்பீட்டின் அடிப்படையில் எளிய நேர்கோட்டு அடிப்படையொன்றைப் பயன்படுத்துவதன் மூலம் பெறுமானத் தேய்வு ஏற்பாடு கணிப்பிடப்படுகிறது. வருடாந்த பெறுமானத் தேய்வு விகிதம் பின்வருமாறாகும்:-

காணி மேம்படுத்தல்களும் கட்டிடங்களும் - 2.5%

### 2.5 நிதிசார் சொத்துக்கள்

#### 2.5.1 வகையீடு

கைத்தொழில் அபிவிருத்திச் சபை நிதிசார் சொத்துக்களை கையகப்படுத்திய நோக்கத்தின் அடிப்படையில் அதன் நிதிசார் சொத்துக்களை கடன் மற்றும் பெறப்படற்பாலதான தொகை என்று வகையீடு செய்துள்ளது.

**கடன்கள் மற்றும் பெறப்படற்பாலவை**

கடன்கள் மற்றும் பெறப்படற்பாலவை, செயலூக்கமுள்ள ஒரு சந்தையில் விலைகள் தெரிவிக்கப்படாத, நிலையான அல்லது நிச்சயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன்கூடிய வருவிக்கப்பட்டவை அல்லாத நிதிசார் சொத்துக்களாகும். அவை, ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர், 12 மாதங்களுக்குக் கூடுதலான முதிர்ச்சிகள் தவிர வர்த்தக மற்றும் வேறு பெறப்படற்பாலவை என்ற அடிப்படையில் நடைமுறைச் சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

#### 2.5.2 நிதிசார் சொத்துக்களை ஏற்றங்கீகரித்தல்

கடன்கள் மற்றும் பெறப்படற்பாலதான தொகைகள், ஆரம்ப கட்டத்தில் நியாயமான பெறுமதிக்கு கொடுக்கல்வாங்கல் கிரயம் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு ஏற்றங்கீகரிக்கப்படுவதோடு, அதனையடுத்து பயன்கூர் வட்டி முறையைப் பயன்படுத்தி இலதாக்கிய கிரயத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

#### 2.5.3 நிதிசார் கருவிகளை ஒதுக்கிவைத்தல்

ஏற்றங்கீகரிக்கப்பட்ட பெறுமானங்களை ஒதுக்கிவைப்பதற்காக சட்டரீதியாக செயல்வலுப்படுத்தக்கூடிய உரித்தொன்று காணப்படுமிடத்தும், தேறிய அடிப்படையொன்றில் தீர்ப்பதற்கு அல்லது சமகாலத்தில் சொத்தை தீர்த்து பொறுப்புக்களை செலுத்தித் தீர்க்கும் எண்ணம் உள்ளபோதும், சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ஒதுக்கிவைத்து தேறிய பெறுமதிக்கு ஐந்தொகையில் அறிக்கையிடப்படுகிறது.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.5.4 நிதிசார் சொத்துக்களின் பாதிப்பு (மதிப்பிழப்பு)

**இலதாக்கிய கிரயத்திற்குக் எடுத்துச்செல்லப்படும் சொத்துக்கள் (கடன் மற்றும் பெறப்படற்பாவை)**

எல்லா அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதன் நிதிச் சொத்தொன்றுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதற்கான புறவயமான சான்றுகள் உள்ளனவா என்பதை மதிப்பீடு செய்யும். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நிதிசார் சொத்தொன்று முக்கியமாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட பின் ஏற்பட்ட நிகழ்வு (‘நட்ட நிகழ்வு’) ஒன்றின் அல்லது அதற்குக் கூடுதலானவற்றின் பெறுபேறாக அச்சொத்துக்கள மதிப்பிழப்பு ஏற்பட்டிருப்பதாக புறவயமான சான்றுகள் இருப்பின் மாத்திரம் அத்துடன் அத்தகைய இழப்பு நிகழ்வை (நிகழ்வுகளை) நம்பத் தகுந்த விதத்தில் மதிப்பீடு செய்யக்கூடியவாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மதிப்பீடு செய்த எதிர்கால காசுப் பாய்ச்சல்களுக்கு பாதிப்பொன்றை ஏற்படுத்துமாயின் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நிதிசார் சொத்தொன்று அல்லது சொத்துக்கள் சேதமடைந்திருப்பதாகக் கருதப்படுவதோடு, மதிப்பிழப்பு நட்டங்களை சபை சுமக்கின்றது. உரிய புறவயமான சான்றுகள் காணப்படுகின்றனவா என்பதை கைத்தொழில் அபிவிருத்திச் சபை முதலில் மதிப்பீடு செய்யும்.

கடன் மற்றும் பெறப்படற்பாலதான தொகைகளுக்கு நட்டத்தொகை சொத்தின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதியிலும் சொத்தின் மூல பயன்கூர் வட்டி வீதத்திற்கு கழிவுசெய்த மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் (தற்போது நட்டத்தைச் சுமக்காத எதிர்கால கடன் நட்டங்கள் தவிர) இன்றைய பெறுமதிக்கு இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்படும். சொத்தின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதி குறைக்கப்படுவதோடு, நட்டத்தின் பெறுமதி விரிவான வருமானக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகிறது.

அடுத்தமைந்த காலப்பகுதியொன்றில் மதிப்பிழப்பு நட்டத்தின் பெறுமதி குறைவடையுமாயின் அத்துடன் அத்தகைய குறைவு புறவயமான மதிப்பிழப்பை ஏற்றங்கீகரித்த பின் ஏற்பட்ட சம்பவமொன்று (கடன்படுநரின் கடன் தரவரிசைப்படுத்தலின் முன்னேற்றமொன்று போன்ற) தொடர்பிலானதாக அமையுமாயின், முன்னரே ஏற்றங்கீகரிக்கப்பட்ட மதிப்பிழப்பு நட்டத்தை மறுதலையாக்குவதற்கு விரிவான வருமானக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

வர்த்தக பெறப்படற்பாலவற்றின் மதிப்பிழப்புகளின் பரிசோதிப்பு 2.8 ஆம் குறிப்பில் விபரிக்கப்பட்டுள்ளது.

### 2.6 நிதிசார் பொறுப்புக்கள்

நிதிசார் பொறுப்புக்களில் வர்த்தக மற்றும் வேறு செலுத்தப்படற்பாலனவும் கடன் பெறல்களும் அடங்கும். கடன் தவிர்ந்த ஏனைய அனைத்து நிதிசார் பொறுப்புக்களும் தொடக்கத்தில் அவற்றின் நியாயமான பெறுமதிக்கு ஏற்றங்கீகரிக்கப்படுவதோடு, அதன் பின்னர் கழிவுசெய்தலின் பெறுபேறு குறிப்பிடத்தக்கதல்லாத மட்டத்தில் காணப்படவில்லையெனில், பயன்கூர் வட்டி முறையைப் பயன்படுத்தி இலதாக்கிய கிரயத்திற்கு அவை அளவிடப்படுவதோடு, அப்போது அவை கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

### 2.7 இருப்புக்கள்

இருப்புப் பெறுமதி கிரயம் அல்லது தேறிய கைகூடக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் எப்பெறுமதி குறைவானதோ அப்பெறுமதிக்கு இருப்புக்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சராசரி கிரய முறையை (AVCO Method) பயன்படுத்தி கிரயம் நிர்ணயிக்கப்படுகிறது. தேறிய கைகூடக்கூடிய பெறுமதி என்பது சாதாரண வியாபார நடபடிமுறையில் கையிருப்புக்களை விற்கக்கூடிய விலையில் மதிப்பீடுசெய்த கிரயத்தையும் விற்றலை மேற்கொள்வதற்காக மதிப்பீடுசெய்யப்பட்ட கிரயத்தையும் குறைக்கும்போது கிடைக்கும் விலையாகும். இருப்புக்களை அவற்றின் இன்றைய இடஅமைவிற்கும் நிலைக்கும் கொண்டுவருவதற்கு உறப்பட்ட கிரயம், பின்வருமாறு கணக்கீட்டில் உட்படுத்தப்படுகிறது:-

| | | |
|---|---|---|
| மூலப்பொருள்கள் | --- | கிரயம் அல்லது தேறிய கைகூடக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைவானதாக உள்ளதோ அப்பெறுமதிக்கு. |
| முடிவுப்பொருள்கள் | --- | கிரயம் அல்லது தேறிய கைகூடக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைவானதாக உள்ளதோ அப்பெறுமதிக்கு. |
| நடைபெற்றுவரும் வேலை | --- | நேரடிப் பொருள், நேரடி உழைப்பு மற்றும் பொதுவான செயற்பாட்டு இயலளவை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திப் பொதுப் பணிகளில் உகந்ததொரு பகுதியின் கிரயத்திற்கு. |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.8 வர்த்தக பெறப்படற்பாலவை

வர்த்தக பெறப்படற்பாலவை என்பது பொதுவான வியாபார நடபடிமுறையில் விற்கப்பட்ட பண்டங்களுக்கு அல்லது நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்கு வாடிக்கையாளர்களிடமிருந்து வர வேண்டிய தொகைகளாகும். ஓராண்டு அல்லது அதற்குக் குறைவான ஒரு காலத்துள் அறவிட்டுக் கொள்ள எதிர்பார்ப்பதாயின், (அல்லது வியாபாரத்தின் பொதுவான செயற்பாட்டு வட்டத்தில் அதற்கும் கூடுதலான ஒரு காலமாயின்), அத்தொகைகள் நடைமுறைச் சொத்துக்களாக வகையீடு செய்யப்படுகிறது. அவ்வாறன்றேல், அவை நடைமுறையல்லாத சொத்துக்களாக முன்வைக்கப்படுகின்றன.

கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு பெறப்படற்பாலனவற்றுக்குரிய ஆரம்ப நிபந்தனைகளுக்கமைய அறவிடப்பட வேண்டிய அனைத்துப் பெறுமதிகளையும் அறவிட்டுக்கொள்ள முடியாதென்று புறவயமான சான்றுகள் இருக்கும்போது, வர்த்தக பெறப்படற்பாலனவற்றின் பாதிப்புக்கான ஏற்பாடொன்று நிறுவப்படுகிறது. கடன்படுநரின் குறிப்பிடத்தகு நிதிசார் சிரமங்கள், கடன்படுநர் வங்கிமுறிவுநிலைக்கு அல்லது நிதிசார் மீள் அமைப்பிற்கு உள்ளாவதற்கு வாய்ப்பிருத்தல், கொடுப்பனவுகளைத் தவற விடுதல் அல்லது மீறுதல் முதலிய வர்த்தக பெறப்படற்பாலவை பாதிப்பு உள்ளாகியிருப்பதாகச் சுட்டிக்காட்டும் காரணிகளாகும். ஏற்பாட்டின் பெறுமதிக்கும், சொத்தின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதிக்கும், தொடக்க பயன்கூர் வட்டி வீதத்திற்கு மட்டந்தட்டிய, மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் இன்றைய பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாகும். 2018 ஆம் ஆண்டு முதல் பின்வருமாறு ஏற்பாடுகள் கணிப்பிடப்படுகின்றன:-

| வயது | | ஏற்பாடு % |
|---|---|---|
| நடப்பு ஆண்டு | - | 0% |
| 01 – 02 ஆண்டுகள் | - | 10% |
| 03 – 05 ஆண்டுகள் | - | 25% |
| 05 ஆண்டுகளுக்கு மேல் | - | 100% |

### 2.9 காசு மற்றும் காசுக்கு நிகரானவை

கையிலுள்ள காசும், வங்கிகளிலுள்ள அழைப்பு வைப்புக்களும், 03 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான தொடக்க முதிர்வு காலம் கொண்ட ஏனைய குறுகிய கால உயர் திரவத்தன்மையுள்ள முதலீடுகளும், வங்கி மேலதிகப் பற்றுக்களும் காசு மற்றும் காசுக்கு நிகரானவற்றில் அடங்கும். நிதிநிலைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வங்கி மேலதிகப் பற்றுக்கள் எதிர்மறை மீதிகளாகக் காட்டப்பட்டுள்ளன.

### 2.10 ஏற்பாடுகள்

கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு கடந்த கால சம்பவமொன்றின் பயனாக இன்றைய சட்ட அல்லது ஆக்கச்சார்பான கடப்பாடொன்று காணப்படும்போது, அத்தகைய கடப்பாட்டை இணக்கப்படுத்துவதற்காக பொருளாதார அனுகூலங்கள் அடங்கிய வளப் பாய்ச்சலொன்று இடம்பெறுவது தேவையாக அமையுமிடத்தும் கடப்பாட்டின் பெறுமதியை நம்பத்தகுந்த விதத்தில் மதிப்பீடு செய்யக்கூடியதாக இருக்குமிடத்து அதற்கான நிதி ஏற்பாடுகள் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.11 வர்த்தக மற்றும் வேறு செலுத்தப்படற்பாலவை

கோரப்படும்போது அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டு காலத்துள் செலுத்தப்படவுள்ள செலுத்தப்படற்பாலவை நிதிநிலைக் கூற்றில் வேறு செலுத்தப்படற்பாலவையாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாகும். ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டுக்குக் கூடுதலான காலப்பகுதியில் செலுத்தப்படவுள்ள பொறுப்புக்கள் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள உருப்படியாகும்.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

### 2.12 வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம்

ஊழியரொருவர் ஓய்வு பெறும்போது குறித்த ஊழியருக்கு கிடைக்கின்ற நன்மையின் பெறுமதி வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் என்பதனால் கருதப்படுகிறது. பொதுவாக பணியாற்றிய வருடங்களின் எண்ணிக்கை மற்றும் இழப்பீட்டுத் தொகை (வேதனம்) போன்ற ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான காரணிகள் மீது அது தங்கியுள்ளது. வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பணிக்கொடையை உள்ளடக்கியது. வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டத்தின் நீண்டகால இயல்பு காரணமாக அவ்வாறான மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க உறுதிப்பாடற்ற நிலையில் காணப்படும்.

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம், உத்தேசிக்கப்பட்ட அலகுக் கடன் (PUC) திட்டத்தைப் பயன்படுத்தி வருடாந்தம் கணக்கிடப்படுகிறது. நன்மை செலுத்தப்படும் புழக்கப் பணத்தினால் செயல்வலுப்பெறும் அரசாங்க முறிகளின் வட்டி வீதங்களைப் பயன்படுத்தி மதிப்பீடுசெய்யப்பட்ட மற்றும் முதிர்வுக்குரிய ஓய்வூதிய கடப்பாட்டின் நியதிகளுக்கு அண்ணளவாக்க நிபந்தனைகளுடன்கூடிய எதிர்கால காசு வெளிப்பாய்ச்சல்களை மட்டப்படுத்தி வரையறுக்கப்பட்ட நன்மைகள் கடப்பாட்டின் இன்றைய பெறுமதி நிர்ணயிக்கப்படுகிறது.

அனுபவ சீராக்கங்கள் மற்றும் காப்பீட்டுக் கணிப்பு அனுமானங்களின் மாற்றங்களின் மூலம் எழக்கூடிய காப்பீட்டு இலாபங்களும் நட்டங்களும் குறித்த இலாபங்கள் அல்லது நட்டங்கள் எழக்கூடிய காலப்பகுதியில் முழுமொத்த வருமானத்தின் ஒப்புரவு அறவிடப்படுகிறது அல்லது செலவு வைக்கப்படுகிறது.

திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்கள் குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு (உரித்தாக்கும் காலப்பகுதி) சேவையிலீடுபடுகின்ற ஊழியர்களுக்கு ஒரு நிபந்தனையாக இல்லாவிடில், கடந்தகால சேவைக் கிரயம் உடனடியாகவே விரிவான வருமானக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகிறது. இவ்வாறு செய்யும்போது கடந்த சேவைக் கிரயம் உரித்தாக்கும் காலப்பகுதி முழுவதற்கும் எளிய நேர்கோட்டு அடிப்படையொன்றில் இலதாக்கல் செய்யப்படுகிறது.

### 2.13 குறித்துரைக்கப்பட்ட உதவுதொகைத் திட்டம்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனைத்து நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்தினதும் (EPF) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினதும் (ETF) ஊழியர்களாக இருப்பதோடு, அதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் முறையே அவ்வூழியர்களின் அடிப்படை வேதனம் அல்லது சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படிகளில் 12%, 3% என்ற வீதங்களில் உதவுதொகை செலுத்தப்படுகிறது.

### 2.14 முதலீடுகள்

முதலீடுகள், தனிப்பட்ட முதலீட்டு அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட கிரயத்தில் எடுத்துச் செல்லப்படுகிறது.

### 2.15 அரச கொடைகள்

அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் கொடைகள் அவற்றின் எடுத்துச்செல்லப்படும் பெறுமதிக்கு ஏற்றங்கீகரிக்கப்படுவதோடு இங்கு கொடை கிடைக்குமென்றும் குழு அது சம்பந்தமான அனைத்து நிபந்தனைகளுக்கும் இணங்குமென்றும் நியாயமான உத்தரவாதமொன்றுள்ளது.

கிரயத்திற்கு ஏற்புடைய அரச கொடைகள் மூலம் ஈடுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படும் கிரயத்துடன் சீராக்கம் செய்வதற்கு தேவைப்படும் காலப்பகுதி முழுவதும் அக்கொடைகள் வருமானக் கூற்றில் பிற்போடப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்களுக்கு ஏற்புடைய அரச கொடைகள், பிற்போடப்பட்ட அரச கொடைகளாக நடைமுறை அல்லாத சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, குறித்த சொத்துக்களின் எதிர்பார்த்த ஆயுட்காலம் முழுவதும் எளிய நேர்கோட்டு அடிப்படையொன்றில் வருமானக் கூற்றில் செலவு வைக்கப்படுகின்றது.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

**2.16 நன்கொடைகள்**

நன்கொடைகள் என்பது பொதுவாக பரிமாற்றமற்ற மாற்றல்களாகும். இருப்பினும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் பங்களிப்பாளருக்கு பெயரளவிலான பிரதிப்பயனை வழங்கும் சந்தர்ப்பங்கள் காணப்படலாம். அவ்வாறான நன்கொடைகளுக்காக பங்களிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதிப்பயன் நியாயமற்ற பரிமாற்றக் கொடுக்கல் வாங்கலொன்றின் பெறுபேறாக அமையுமளவுக்கு, கிடைக்கப்பெற்ற நன்கொடையின் பிரதிப் பயனை விட குறிப்பிடத்தக்க அளவு குறைவாயின், அவை கிடைக்கப்பெற்ற நன்கொடைகளாக ஏற்றங்கீகரிக்கப்படல் வேண்டும்.

**2.17 வருமானங்களை ஏற்றங்கீகரித்தல்**

**2.17.1 விற்கப்பட்ட பண்டங்களும் ஆற்றப்பட்ட சேவைகளும்**

உரிமையாண்மையின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்களும் நன்மைகளும் வாங்குநருக்கு மாற்றப்பட்டிருக்கும்போது பண்டங்களை விற்பனை செய்வதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் வருமானக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகிறது. அறவிடுவதற்குள்ள பிரதிப்பயன் சார்ந்த கிரயத்தை அறவிட்டுக்கொள்ளல் அல்லது பண்டங்களை மீள அனுப்பக்கூடியதாக இருத்தல் பற்றி குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுமாயின், எந்தவொரு வருமானமும் ஏற்றங்கீகரிக்கப்பட மாட்டா.

**2.17.2 வட்டி வருமானம்**

வட்டி வருமானம் கால விகிதாசார அடிப்படையொன்றில் ஏற்றங்கீகரிக்கப்படுவதோடு, அவ்வாறான வருமானம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சாதாரணமான செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது விற்கப்படும் பண்டங்களுக்கு அல்லது நிறைவேற்றப்படும் சேவைகளுக்கு கிடைக்கின்ற அல்லது கிடைக்க வேண்டிய பிரதிப்பயனின் நியாயமான பெறுமானத்தைக் கொண்டதாகும். பெறுமதிசேர் வரி (VAT), திரும்பல்கள், நியாயமான தோராயம், வர்த்தக தள்ளுபடிகள் இருப்பின், அவற்றின் தேறிய பெறுமதியின் மூலம் வருமானம் காட்டப்படுகிறது.

**2.18 செலவுகளை ஏற்றங்கீகரித்தல்**

**2.18.1 செயற்பாட்டுச் செலவுகள்**

செலவுகள் அட்டுறு அடிப்படையில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன. காலப்பகுதிக்கு உரிய இலாபத்தைக் கணக்கிடும்போது பொதுவான வியாபார நடபடிமுறையிலும் அத்துடன் வினைத்திறனான நிலையில் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்களைப் பராமரிக்கும்போது உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் வருமானத்துடன் சேர்க்கப்படுகின்றன.

**2.18.2 தேறிய நிதிக் கிரயம்**

தேறிய நிதிக் கிரயமானது வருமானக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்ற கடன் பெறல்களுக்காக செலுத்தப்பட வேண்டிய வட்டி, முதலீடுசெய்யப்பட்ட நிதிகளிலிருந்து கிடைக்க வேண்டிய வட்டி, அந்நியச் செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

கடன் பெறல்கள் தொடர்பில் உறப்பட்ட அனைத்து வட்டிகளும் ஏனைய கிரயமும் தேறிய நிதிக் கிரயத்தின் ஒரு பகுதியாக செலவிடப்பட்டுள்ளது.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
## நிதிச்சார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

## 3. நிதிசார் இடர் முகாமைத்துவம்

### 3.1 நிதிசார் இடர்க் காரணிகள்

| | நிலுவைச் சம்பளம் | - | (365,276) |
| | கேள்விச் சபைக் கட்டணம் | - | (2,000) |
| | பெறுவனவுகள் - மொஹமட் அன்பாஸ் | - | 97,000 |
| | நிராகரிக்கப்பட்ட காசோலைகள் | - | 25,750 |
| | கொடை இலதாக்கல் (கணக்காய்வுப் பதில்கள்) | - | 425,476 |
| | உள்ளீட்டு வரிகள், அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை உள் வீதி | - | 1,079,715 |
| | பெறுமானத் தேய்வு | - | 8,222 |
| | மேலதிக ஏற்பாடு - பணிக்கொடை | - | 132,000 |
| | குறை ஏற்பாடு - தொலைபேசிக் கட்டணம் | - | (30,928) |
| | கையிருப்புச் சீராக்கல் - ஆரம்ப மீதி | - | (38,416) |
| | மேலதிக ஏற்பாடு - நீர்க் கட்டணம் | - | 41,854 |
| | கைத்தொழிற் பேட்டைகளும் பிற வருமானங்களும் | - | 55,820 |
| | மூங்கில் மரக் கருத்திட்டச் செலவுகள், லக்சல ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டது. | - | (12,500) |
| | பிற திருத்தங்கள் | - | (1,000) |
| | மீளத் திருப்பிய மேலதிக ஏற்பாடுகள் - தொழில் வழக்குகள் | - | 1,078,983 |
| | ரூ.1.00க்குக் குறைந்த சரிப்படுத்தல்களை உட்சேர்த்தல் | - | 0 |
| | அலுவலக வாடகை - மன்னார் | - | (360,000) |
| | தொலைபேசிக் கட்டணம் | - | (13,045) |

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

**நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)** அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.

| **27.1 எஞ்சிய பகுதி…..** | **2022** | **2021** (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| 2016-2020 காலத்திற்குரிய நிலுவை நில வாடகை - பதுளை | | (2,520,000) |
| 2020 பிணைக் கொடுப்பனவு | | (317,005) |
| 2021.01.01 அன்று மேலதிக கொடுப்பனவுகள்/நிலுவை திருத்தம் | 0 | |
| 2021 மேலதிக மதிப்பீடு | 1,290 | - |
| 2021 க்கான மேலதிக மதிப்பீடு | 1,320 | - |
| நிராகரிக்கப்பட்ட காசோலை - கொவிட் செலவுகள் - பன்னல | 2,900 | - |
| 2021 க்கான மேலதிக மதிப்பீடு | 3,332 | - |
| நிராகரிக்கப்பட்ட காசோலை (வளவாளர்கள் TSD) | 5,000 | - |
| நிராகரிக்கப்பட்ட காசோலை - லக்கம் மீளளிப்பு | 5,475 | - |
| நிராகரிக்கப்பட்ட காசோலை - உரிமக் கட்டணம் | 6,000 | - |
| நிராகரிக்கப்பட்ட காசோலை | 7,500 | - |
| நிராகரிக்கப்பட்ட காசோலை (கண்காட்சி - பதுளை) | 8,490 | - |
| நிராகரிக்கப்பட்ட காசோலை - ஹேமா கமகே போனஸ் - 2020 | 13,500 | - |
| இ.பத்மராணி 3138 | 15,831 | - |
| கோரப்படாத அலுவலக வாடகை - கொழும்பு மாவட்ட அலுவலகம் | 15,972 | - |
| 2019.01.01 - 31.12.2019 காலத்திற்குரிய வாடகை | 30,000 | - |
| நிராகரிக்கப்பட்ட காசோலை - கொவிட் செலவு- குருநாகல் | 54,420 | - |
| 2021.12.31 இல் உள்ளவாறான மேலதிக மதிப்பீடு | 503,014 | - |
| நிராகரிக்கப்பட்ட காசோலை (மூங்கில் மரக் கருத்திட்டம்) | 877,500 | - |
| கணக்காய்வாளர் தலைமையதிபதி - கணக்காய்வுக் கட்டணம் - 2020 | (112,800) | - |
| பண்டிகை முற்பணம் - பிணைதாரர்கள் - மன்னார் - ஜே.எம்.ஏ.லெம்பர்ட் | (1,875) | - |
| பண்டிகை முற்பணம் - பிணைதாரர்கள் - மன்னார் - எம்.ரி.எம். | (1,875) | - |
| ஆர்.எம்.எம்.என்.கே.ரத்நாயக்க TSD மீளளிப்பு | (35,000) | - |
| விலைக் குழு அங்கத்துவக் கட்டணம் - பீ.ஐ.யூ.ரத்னமலல இரும்பல்லாத | (5,000) | - |
| பிரயாணங்கள் - பொருள் இருப்புக் கணிப்பீடு | (3,951) | - |
| போனஸ்-2020 டப்ளியு.ஜீ.ஹேமா கமகே | (13,500) | - |
| பிரயாணம் - பொருள் இருப்புக் கணிப்பீடு யாழ்ப்பாணம் | (1,100) | - |
| பிரயாணம் - பிலிமத்தலாவை | (2,320) | - |
| 2021 க்கான குறைமதிப்பீடு/கொவிட்-19 செலவு | (8,000) | - |
| குறைமதிப்பீடு/2021க்கான செலவுகள் (பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள் கருத்திட்டம்) | (6,000) | - |
| 2021.12.31 திகதிக்கு குறைமதிப்பீட்டுக்கான ஏற்பாடுகள் | (200) | - |
| குறை மதிப்பீடுகள்/2021க்கான செலவுகள் (பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள் கருத்திட்டம்) | (7,800) | - |
| 2021 அட்டுறு செலவுகள்/ மீளளிப்புகள் | (6,247) | - |
| மேலதிக ஏற்பாடு - பிரயாணங்கள் | 100,521 | - |
| பின்செலுத்திய பற்றுச்சீட்டு | (3,000) | - |
| பின்செலுத்திய பற்றுச்சீட்டு | (1,500) | - |
| பின்செலுத்திய பற்றுச்சீட்டு | (3,240) | - |
| | **1,438,656** | **(8,623,806)** |

| **28 ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்** | **2022** | **2021** (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| நிதிநிலைக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ள தொகைகள் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு தீர்மானிக்கப்படும். | | |
| நிதிநிலைக் கூற்றில் வழங்கப்படாத கடப்பாடுகளின் இன்றைய பெறுமதி | 206,829,087 | 206,131,395 |
| நிதிநிலைக் கூற்றில் பொறுப்பு | **206,829,087** | **206,131,395** |

| ஆண்டினுள் நிச்சயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் அசைவு பின்வருமாறு: | **2022** | **2021** (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| சனவரி 01 இல் உள்ளவாறு | 206,131,395 | 202,971,991 |
| இன்றைய சேவைக் கிரயம் | 12,630,367 | 12,585,710 |
| வட்டிக் கிரயம் | 18,172,631 | 18,127,427 |
| பின்னைய தொழில் நன்மைக் கடப்பாடுகள் மீதான ஆயுட்கணக்கர் நட்டம்/(இலாபம்) | (15,052,636) | (15,123,409) |
| | 221,881,757 | 218,561,718 |
| செலுத்திய நன்மைகள் | (15,052,670) | (12,430,323) |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறு | **206,829,087** | **206,131,395** |

| பயன்படுத்தப்பட்ட பிரதான ஆயுட்கணக்கர் முற்கோள்கள் பின்வருமாறு அமைந்தது. | **2022** | **2021** (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| தள்ளுபடி விகிதம் | 9.50% | 9.50% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு | 5.00% | 5.00% |
| ஓய்வுபெறும் வயது | 60 | 60 |

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

### நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.

| 29 | விசேட கருத்திட்டங்களுக்கான கொடைகள் | 2022 | 2021 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | அமைச்சு நிதியம் Robot Arm (CERA கருத்திட்டம்) | 661,300 | - |
| | | **661,300** | **-** |

| 30 | அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டியவை | 2022 | 2021 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | உண்ணாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 28,879 | 28,879 |
| | உண்ணாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (முத்திரைத் தீர்வை) | 26,050 | 45,975 |
| | | **54,929** | **74,854** |

| 31 | சபைகளுக்கும் கூட்டுத்தாபனங்களுக்கும் செலுத்த வேண்டியவை | 2022 | 2021 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | இலங்கை மத்திய வங்கி (EFP) | 6,891,980 | 7,212,273 |
| | ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (ETF) | 867,546 | 983,492 |
| | | **7,759,526** | **8,195,765** |

| 32 | வர்த்தக மற்றும் பிற கடன்கொடுநர்கள், ஏற்பாடுகள், அட்டுறு செலவுகள் | 2022 | 2021 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | வர்த்தகக் கடன்கொடுநர்கள் (தொடர்புக் குறிப்பு 32.1) | 88,401,761 | 80,745,566 |
| | செலுத்தற்பாலவை "SGS லங்கா தனியார் கம்பனி" | 6,635,504 | 3,631,954 |
| | RPD & SC - MOU செயல் திட்டம் - பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 3,498,000 | 3,498,000 |
| | தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி 2% | 3,706,617 | 3,706,617 |
| | செலுத்தற்பாலதான பணியாட்குழு குறைப்புக்கள் | 12,387 | 12,387 |
| | செலுத்தற்பாலதான உழைக்கும்போது செலுத்தும் வரிகள் | 11,479 | 11,479 |
| | சில்லறைக் கடன்கொடுநர்கள் | 399,453 | 399,453 |
| | பிற கடன்கொடுநர்கள் | 40,883 | 40,883 |
| | பிற கடன்கொடுநர்கள் - தலைமையகம் | 1,946,480 | 2,118,014 |
| | செலுத்தற்பாலதான பெறுமதிசேர் வரி (VAT) | 8,571,864 | 4,715,579 |
| | சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி 2.5% | 969,555 | - |
| | செலுத்தித் தீர்க்கப்பட வேண்டிய வைப்புக்கள் | 4,464,752 | 635,915 |
| | லக் நிப்பயும் சந்தைப்படுத்தல் மற்றும் கண்காட்சி நிலையம் - கடன்கொடுநர்கள் | 89,753 | 89,753 |
| | வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த முற்பணங்கள் | 52,628,070 | 14,944,277 |
| | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முற்பணங்கள் | 775,070 | 1,352,720 |
| | பிணை வைப்புக்கள் | 330,229 | 317,457 |
| | மீளளிப்பதற்கான வைப்புக்கள் - கைத்தொழிற்பேட்டைகள் | 80,384,796 | 73,867,694 |
| | மீளளிப்பதற்கான வைப்புக்கள் - கைத்தொழிற்பேட்டைகள் | 3,145,629 | 3,374,579 |
| | செலுத்தப்பட வேண்டிய நிறுத்திவைத்த தொகைகள் | 4,512,355 | 5,374,984 |
| | முன்கூட்டி செலுத்திய 30 வருட நிலவாடகை | 1,841,028 | 1,904,694 |
| | வைத்திய உதவித்திட்டம் | 4,429,240 | 4,011,031 |
| | நலன்புரிச் சங்கம் | 68,931 | (2,500) |
| | சிக்கனச் சங்கம் | 4,418 | 4,418 |
| | தொழிற்சங்கம் | 200 | - |
| | தொழில் வழக்குகளுக்கான ஏற்பாடுகள் | 4,294,311 | 4,294,311 |
| | உப ஒப்பந்த கடன்கொடுநர்கள் | 95,046 | 95,046 |
| | திரண்ட செலவுகள் (தொடர்புக் குறிப்பு 32.2) | 53,330,021 | 57,892,422 |
| | லக்கம் கடன்கொடுநர்கள் | 1,746,255 | 1,746,255 |
| | பொருள் விபற்பனவு நிலையம் - தோல்பொருள் | (632,300) | - |
| | செலுத்தற்பாலதான சம்பளங்கள் | 1,489,344 | 3,416 |
| | செலுத்தற்பாலதான சதக் கட்டுப்பாடு | 30 | 21 |
| | | **327,191,159** | **268,786,425** |

| 32.1 | வர்த்தகக் கடன்படுநர்கள் | 2022 | 2021 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|---|
| | கட்டுமானங்கள் | 10,996,372 | 18,639,543 |
| | பழுதப்பட்ட உலோக துண்டுப்பொருள் கருத்திட்டம் | 10,870,824 | 17,916,804 |
| | பிற வழங்கல்கள் | 31,867,881 | 25,518,827 |
| | அட்டுறு கொள்வனவுகள் | 34,666,684 | 18,670,392 |
| | | **88,401,761** | **80,745,566** |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

## நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் (எஞ்சிய பகுதி)

அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.

| 32.2 அட்டுறு செலவுகள் | 2022 | 2021 (மீள் வெளிப்படுத்திய) |
|---|---|---|
| அட்டுறு பதில் லீவுக் கொடுப்பனவு | 1,310,378 | 700,529 |
| வர்த்தக விளம்பரச் செலவுகள் | 26,163 | 26,163 |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | 10,247,000 | 6,831,000 |
| செலுத்த வேண்டிய அமய கூலி | 2,444,803 | 2,351,509 |
| மின் கட்டணம் | - | 2,565 |
| லீவு நாள் கொடுப்பனவு | 442,482 | 155,312 |
| தங்குமிட செலவுகள் | - | 12,300 |
| பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் | - | 35,050 |
| பிற பொருள்கள் | (2,210) | (2,210) |
| மேலதிக நேரம் | 3,107,866 | 3,452,280 |
| வீதவரிகளும் வரிகளும் | 12,926,586 | 12,916,586 |
| கட்டிட வாடகை | - | 55,972 |
| எழுதுகருவிகள் | 111,648 | 111,648 |
| பயிலுநர் கொடுப்பனவுகளும் நாட் சம்பளமும் | 201,484 | 227,523 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 238,851 | 137,284 |
| பிரயாணச் செலவுகளும் உதவிப்பணமும் | 500,658 | 414,535 |
| புரள்வு வரி | 246,728 | 246,728 |
| பயன்படுத்தாத மருத்துவ விடுமுறைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய வாகன காப்புறுதி உரிமைக்கோரிக்கைகள் | 21,490,451 | 24,217,646 |
| வாகன காப்புறுதி உரிமைக்கோரிக்கை | 37,134 | |
| கைத்தொழில் கண்காட்சி - 2022 | - | 6,000,000 |
| | **53,330,021** | **57,892,422** |

# 2021 நிதிநிலைக் கூற்றுக்களில் உருப்படிகளுக்காக செய்யப்பட்ட திருத்தங்கள்

ளுயபந 200 நுசீ முறைமைக்கு தரவுகளை உட்புகுத்துவதற்கான மிக ஆரம்ப கட்டமாக 2021 ஆம் ஆண்டில் பல வழுக்களும் விடுபாடுகளும் இடம்பெற்றதுடன், அது 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. பின்வரும் கணக்குகள் சீராக்கம் செய்யப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான எண்ணிக்கைகள் அதன்படி மாற்றப்பட்டன. மாற்றப்பட்ட பரப்புகளும் அதன் தாக்கமும் பின்வருமாறு:-

| பேரேட்டுக் குறியீடுகள் | | மாற்றங்களுக்கு முந்திய தொகை | | மாற்றங்களுக்குப் பிந்திய தொகை | | மாற்றமடைந்த அளவு (இலங்கை ரூபாவில்) | |
|---|---|---|---|---|---|---|---|
| 10005 | நில வாடகை – கைத்தொழிற் பேட்டை | - | 8,007,884 | - | 8,013,196 | - | (5,311) |
| 20000 | விற்பனைக் கிரயம் - நேரடிப் பொருள்கள் | 5,194,043 | 928,540 | 7,089,026 | 529,190 | (1,894,984) | 399,350 |
| 20010 | விற்பனைக் கிரயம் - பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்கள் கருத்திட்டம் | 193,746,158 | - | 193,749,158 | - | (3,000) | - |
| 20011 | விற்பனைக் கிரயம் - லக்கம் | 0 | - | - | - | 0 | - |
| 20052 | கைத்தொழிற் பேட்டைகளின் பராமரிப்பு | 144,195 | - | 991,218 | - | (847,023) | - |
| 20065 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,006,803 | - | 2,909,807 | - | (1,903,004) | - |
| 20100 | கொள்வனவு அட்டுறு | - | 19,984,502 | - | - | - | 19,984,502 |
| 20101 | கொள்வனவுக் கிரய வேறுபாடு | 114,196 | - | - | - | 114,196 | - |
| 25010 | நொத்தாரிசுக் கட்டணம் | - | 237,552 | - | 245,652 | - | (8,100) |
| 25052 | காணி கட்டிடங்களின் உரிமைமாற்றல் அறவீடுகள் | - | 400,000 | - | - | - | 400,000 |
| 30000 | அடிப்படைச் சம்பளங்கள் | 8,211,460 | - | 8,207,739 | - | 3,721 | - |
| 30009 | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 1,343,680 | - | 1,342,640 | - | 1,040 | - |
| 30024 | EPF (உதவுதொகை) | 1,204,217 | - | 1,203,645 | - | 571 | - |
| 30025 | ETF (உதவுதொகை) | 462,278 | - | 462,136 | - | 143 | - |
| 30039 | எழுதுகருவிகளும் அலுவலக தேவைப் பொருள்களும் | 1,129,298 | - | 3,592,207 | - | (2,462,909) | - |
| 30042 | சீருடைகள் | 33,691 | - | 204,739 | - | (171,048) | - |
| 30045 | காணி பராமரிப்பு | 147,119 | - | 198,993 | - | (51,874) | - |
| 30046 | கட்டிடப் பராமரிப்பு | - | - | 51,875 | - | (51,875) | - |
| 30047 | பொறித்தொகுதிகளதும் இயந்திராதிகளதும் பராமரிப்பு | 59,270 | - | 40,520 | - | 18,750 | - |
| 30048 | கணினிகளதும் உதிரிப்பாகங்களதும் பராமரிப்பு | 139,038 | - | 19,238 | - | 119,800 | - |
| 30052 | வாகனப் பராமரிப்பு | 824,571 | - | 2,356,302 | - | (1,531,731) | - |
| 30055 | அலுவலக பராமரிப்புச் செலவுகள் | - | - | 37,440 | - | (37,440) | - |
| 30056 | அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | 439,893 | - | 571,724 | - | (131,831) | - |
| 30062 | நானாவித சொத்துக்களின் பராமரிப்பு | 24,750 | - | - | - | 24,750 | - |
| 30070 | மின்சாரம் | 6,057,731 | - | 6,212,405 | - | (154,674) | - |

| பேரேட்டுக் குறியீடுகள் | | மாற்றங்களுக்கு முந்திய தொகை | | மாற்றங்களுக்குப் பிந்திய தொகை | | மாற்றமடைந்த அளவு (இலங்கை ரூபாவில்) | |
|---|---|---|---|---|---|---|---|
| 30073 | பாதுகாப்புச் சேவைக் கொடுப்பனவு | 19,278,548 | - | 20,146,805 | - | (868,257) | - |
| 30075 | நீர்க் கட்டணங்கள் | 55,247 | - | 56,503 | - | (1,257) | - |
| 30076 | வாடகை | 220,000 | - | 780,000 | - | (560,000) | - |
| 30097 | நலன்புரி | 145,444 | - | 447,485 | - | (302,041) | - |
| 30099 | விளம்பரம் | - | - | 62,240 | - | (62,240) | - |
| 30129 | பெறுமானத் தேய்வு – பொறித்தொகுதிகளும் இயந்திராதிகளும் | 584,724 | - | 1,000,555 | - | (415,831) | - |
| 30131 | பெறுமானத் தேய்வு – ஆய்வுகூட உபகரணங்கள் | 6,576,978 | - | 6,597,208 | - | (20,230) | - |
| 30134 | பெறுமானத் தேய்வு – அலுவலக உபகரணங்கள் | 213,659 | - | 240,270 | - | (26,611) | - |
| 30136 | பெறுமானத் தேய்வு – தளபாடங்களும் பொருத்துதல்களும் | 3,574 | - | 17,056 | - | (13,483) | - |
| 30138 | பெறுமானத் தேய்வு – கருவிகளும் உதிரிப்பாகங்களும் | - | - | 4,689 | - | (4,689) | - |
| 30141 | பெறுமானத் தேய்வு – பயன்பாட்டுச் சேவைகள் | 102,017 | - | 107,327 | - | (5,310) | - |
| 30164 | நன்கொடைகள் | - | - | 669,469 | - | (669,469) | - |
| 58006 | பொறித்தொகுதிகளும் இயந்திராதிகளும் - திரண்ட பெறுமானத் தேய்வு | - | 128,563,815 | - | 128,979,646 | - | (415,831) |
| 58011 | ஆய்வுகூட உபகரணக் கிரயம் | 90,913,841 | - | 91,575,823 | - | (661,982) | - |
| 58012 | ஆய்வுகூட உபகரணங்கள் - திரண்ட பெறுமானத் தேய்வு | - | 32,871,699 | - | 32,891,928 | - | (20,230) |
| 58018 | அலுவலக உபகரணக் கிரயம் | 69,419,563 | - | 72,581,252 | - | (3,161,689) | - |
| 58019 | அலுவலக உபகரணங்கள் - திரண்ட பெறுமானத் தேய்வு | - | 50,235,046 | - | 50,261,657 | - | (26,611) |
| 58022 | தளபாடங்களதும் பொருத்துதல்களும் கிரயம் | 22,304,356 | - | 22,878,149 | - | (573,793) | - |
| 58023 | தளபாடங்களும் பொருத்துதல்களும் - திரண்ட பெறுமானத்தேய்வு | - | 17,409,655 | - | 17,423,138 | - | (13,483) |
| 58026 | கருவிகளதும் உதிரிப்பாகங்களதும் கிரயம் | 17,460,714 | - | 17,480,499 | - | (19,785) | - |
| 58027 | கருவிகளதும் உதிரிப்பாகங்களதும் திரண்ட பெறுமானத்தேய்வு | - | 14,447,389 | - | 14,452,078 | - | (4,689) |
| 58032 | பயன்பாட்டு சேவைக் கிரயம் | 59,971,490 | - | 60,108,233 | - | (136,743) | - |
| 58033 | பயன்பாட்டு சேவைகள் - திரண்ட பெறுமானத்தேய்வு | - | 27,875,197 | - | 27,880,507 | - | (5,310) |
| 58040 | முதலீட்டு ஆதனம் மீதான காணி முன்னேற்றல்கள் | 930,963,288 | - | 931,135,635 | - | (172,347) | - |
| 58044 | நடைபெற்றுவரும் மூலதன வேலைகள் | 83,721,066 | - | 88,041,066 | - | (4,320,000) | - |

| பேரேட்டுக் குறியீடுகள் | | மாற்றங்களுக்கு முந்திய தொகை | | மாற்றங்களுக்குப் பிந்திய தொகை | | மாற்றமடைந்த அளவு (இலங்கை ரூபாவில்) | |
|---|---|---|---|---|---|---|---|
| 60001 | கையிருப்பு – சந்தைப்படுத்தல் - லக்கம் - முடிவுப்பொருள் | - | 21,006 | - | - | - | 21,006 |
| 60010 | கையிருப்பு - TSD | 701,194 | - | - | - | 701,194 | - |
| 60002 | கையிருப்பு – சந்தைப்படுத்தல் - பழுதுப்பட்ட துண்டுப்பொருள் - முடிவுப்பொருள் | 996,420 | - | 996,420 | - | 0 | - |
| 60021 | கையிருப்பு – பொறியியல் - மூலப்பொருள் | 2,171,520 | - | 484,700 | - | 1,686,820 | - |
| 60022 | கையிருப்பு – பொறியியல் - சிவில் - மூலப்பொருள் | 156,484 | - | 78,160 | - | 78,324 | - |
| 60023 | கையிருப்பு – பொறியியல் - மின் - மூலப்பொருள் | 1,329,265 | - | 374,383 | - | 954,882 | - |
| 60024 | கையிருப்பு – பொறியியல் - வார்ப்படம் - மூலப்பொருள் | 3,893,775 | - | 148,088 | - | 3,745,687 | - |
| 60025 | கையிருப்பு – பொறியியல் - வார்ப்படம் - இரசாயனம் - மூலப்பொருள் | 2,474,570 | - | 5,697,175 | - | (3,222,605) | - |
| 60026 | கையிருப்பு – பொறியியல் - பன்னல - மூலப்பொருள் | 982,137 | - | 1,369,808 | - | (387,671) | - |
| 60027 | கையிருப்பு – பொறியியல் - EPC - மூலப்பொருள் | 1,751,216 | - | 1,526,860 | - | 224,356 | - |
| 60028 | கையிருப்பு – பொறியியல் - CSC – மாத்தறை | 398,444 | - | 270,054 | - | 128,390 | - |
| 60029 | கையிருப்பு – பொறியியல் - பிலிமத்தலாவை | 176,761 | - | 292,732 | - | (115,971) | - |
| 60030 | கையிருப்பு – பொறியியல் - வார்ப்படம் - முடிவுப்பொருள் | 710 | - | - | - | 710 | - |
| 60041 | கையிருப்பு – பதனிட்ட தோல் - மூலப்பொருள் | 456,281 | - | 323,407 | - | 132,874 | - |
| 60062 | கையிருப்பு - இறப்பர் - இரசாயனம் - மூலப்பொருள் | 5,671,652 | - | 4,340,541 | - | 1,331,111 | - |
| 60081 | கையிருப்பு – CEDACS – அச்சீடு - மூலப்பொருள் | 40,350 | - | - | - | 40,350 | - |
| 60090 | கையிருப்பு – CEDACS – கைத்தொழில் - முடிவுப்பொருள் | 66,667 | - | - | - | 66,667 | - |
| 60101 | கையிருப்பு – பொது - எழுதுகருவிகள்-மூலப்பொருள் | 4,413,082 | - | 2,233,704 | - | 2,179,378 | - |
| 60102 | கையிருப்பு – பொது – பொதுவான - மூலப்பொருள் | 332,457 | - | 176,835 | - | 155,623 | - |
| 60103 | கையிருப்பு – பொது – அச்சீடு - மூலப்பொருள் | 217,078 | - | 53,546 | - | 163,532 | - |
| 60104 | கையிருப்பு – பொது – சீருடைத் துணி | 671,788 | - | 500,740 | - | 171,048 | - |
| 60105 | கையிருப்பு – பொது – வாகனப் பராமரிப்பு | 1,914,623 | - | 413,509 | - | 1,501,114 | - |

| பேரேட்டுக் குறியீடுகள் | | மாற்றங்களுக்கு முந்திய தொகை | | மாற்றங்களுக்குப் பிந்திய தொகை | | மாற்றமடைந்த அளவு (இலங்கை ரூபாவில்) | |
|---|---|---|---|---|---|---|---|
| 60106 | கையிருப்பு – பொது – நலன்புரி | 550,860 | - | 326,163 | - | 224,697 | - |
| 60107 | கையிருப்பு – பொது – கருவிகள் | 163,756 | - | 589,825 | - | (426,069) | - |
| 60110 | கையிருப்பு – கைத்தொழிற் பேட்டைகள் | 49,023 | - | - | - | 49,023 | - |
| 60901 | இன்வென்ட்ரி நேரடி விநியோகம் - தலைமை அலுவலகம் (தனியார் விளம்பரம்) | 33,147 | - | 33,147 | - | (0) | - |
| 70000 | வர்த்தக கடன்படுநர்கள் | 27,594,369 | - | 27,208,205 | - | 386,164 | - |
| 72005 | பொறியியல் கணக்கு - இலங்கை வங்கி, இடம கிளை 683144 | 147,012 | - | 147,012 | - | (0) | - |
| 72016 | இறப்பர் அபிவிருத்தி - இலங்கை வங்கி 4064199 | 174,103 | - | 174,103 | - | (0) | - |
| 72017 | மாவட்ட அலுவலக வங்கிக் கணக்கு 074791255 | 66,865 | - | 66,865 | - | (0) | - |
| 72127 | கிராம அபிவிருத்திப் பிரிவு (காசாளர்) | 10,549 | - | 10,549 | - | (0) | - |
| 72129 | முத்திரைத் தீர்வை | - | 7,450 | - | 7,525 | - | (75) |
| 79000 | வர்த்தகக் கடன்கொடுநர்கள் | 45,535,795 | 14,389,734 | 44,673,232 | 28,498,260 | 862,563 | (14,108,526) |
| 80034 | தொழில் வழக்குகளின்படி ஏற்பாடு | - | 5,373,294 | - | 4,294,311 | - | 1,078,983 |
| 80037 | ஊழியர் சேமலாப நிதியம் - நிருவாகக் கணக்கு | - | 7,213,321 | - | 7,212,273 | - | 1,047 |
| 80038 | ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய கட்டுப்பாட்டுக் கணக்கு | - | 983,635 | - | 983,492 | - | 143 |
| 80045 | செலுத்தப்பட வேண்டிய அமய கூலிகள் | - | 2,355,795 | - | 2,351,509 | - | 4,285 |
| 80102 | விற்பனைகள் மீதான பெறுமதிசேர் வரி | - | 9,169,777 | - | 8,656,093 | - | 513,684 |
| 80130 | செலுத்தப்பட வேண்டிய நிறுத்திவைத்தல்கள் (நிர்மாணமும் பிறவும்) | - | 3,697,389 | - | 5,374,984 | - | (1,677,595) |
| 80202 | கொள்வனவு அட்டுறு | - | - | - | 18,670,392 | - | (18,670,392) |
| 90000 | வருமானத்திற்கு எதிரான மிகைச் செலவு (திரண்ட) | 278,627,134 | - | 280,758,201 | - | (2,131,067) | - |
| 90028 | ரொபோ தொழில்நுட்பத்திற்கான சிறப்பு நிலையம் | 3,776,783 | - | 3,841,883 | - | (65,100) | - |
| 90040 | தரச் சான்றுறுதி பெற்ற உணவு ஆய்வுகூடம் - கட்டம் II | - | 62,560,869 | - | 62,525,869 | - | 35,000 |




# 06) நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மீளாய்வு

# ජාතික විගණන කාර්යාලය
# தேசிய கணக்காய்வு அலுவலகம்
# NATIONAL AUDIT OFFICE

**எனது இல:** IMT/A/IDB/FA/2022/16 **திகதி:** 2024 மார்ச் 11

தவிசாளர்,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை.

**<u>இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2022 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும் பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளும் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை</u>**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமைமாற்றக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்கு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனது அறிக்கையில் ‘முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை’ என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழுகின்ற பாதிப்பு தவிர, சபையின் நிதிக்கூற்றுக்களின் ஊடாக 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு, காசுப் பாய்ச்சல்கள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையொன்றைப் பிரபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் பற்றிய இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்திக்கு அமைய, சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்தபட்சம் எவ்வொரு நிதி ஆண்டிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன், பயன்கூர் ஆயுட்காலம் முன்னைய மதிப்பீடுகளை விட வேறுபடுமாயின், இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இற்கமைய கணக்கீட்டில் உட்படுத்தப்பட வேண்டுமென்ற போதிலும், 2022 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அளவிலும் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள தற்போது பாவனையிலுள்ள கிரயம் ரூ.470,023,623 ஆக அமையும். ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை மீளாய்வுசெய்து அதற்கமைய கணக்கீட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து வரும் மூலதனக் கொடைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூ.10,500,000 பெறுமதியான Cess Fund எனும் கொடை இலங்கை கணக்கீட்டு நியம இல. 20 இன் 26, 27 ஆகிய பந்திகளுக்கமைய இலதாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வு ஆண்டில் ஆய்வுகூடப் பிரிவின் அறிக்கைகளுக்கமைய சோதனை வருமானங்கள் ரூ.1,348,406 ஆக இருந்தபோதும், நிதிக்கூற்றுக்களுக்கமைய அது ரூ.683,115 ஆகக் காணப்பட்டமையால், வருமானத்தில் ரூ.665,291 வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ஈ) நிதிக்கூற்றுக்கமைய கைத்தொழிற் பேட்டை கடன்படுநர் மீதி ரூ.22,192,934 ஆக இருந்ததுடன், அதில் ரூ.2,582,297 அடையாளம் காணப்படாத பொது மீதியொன்று காணப்பட்டது.

(உ) கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினதும் 'நங்வமு லங்கா' நிகழ்ச்சித்திட்டத்தினதும் பண்டங்கள் மற்றும் களஞ்சியசாலை ஏடுகளுக்கமைய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மீதியொன்று காணப்படாதபோதும், நிதிக்கூற்றுக்களுக்கமைய முறையே ரூ.2,722,356, ரூ.5,117,669 மீதியொன்று காணப்பட்டது.

(ஊ) கைத்தொழிற் பேட்டை பிரிவிலிருந்து கிடைத்த அறிக்கைகளுக்கமைய 2022 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிலுவை வாடகை வருமானம் ரூ.19,091,044 ஆகக் காணப்பட்டதுடன், நிதிக்கூற்றுக்களுக்கமைய அப்பெறுமானம் ரூ.22,192,934 ஆக இருந்தமையால், ரூ.3,101,890 வித்தியாசமொன்று காணப்பட்டது.

(எ) நிதிக்கூற்றுக்களுக்கமைய 13 கைத்தொழிற் பேட்டைகளின் நீர்க் கட்டண வருமானம் ரூ.7,715,837 ஆகக் காணப்பட்டபோதும், கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் அறிக்கைகளின்படி அப்பெறுமானம் ரூ.7,191,834 ஆக இருந்ததன் மூலம் ரூ.524,002 வித்தியாசமொன்று காணப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைய என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமனங்களின் கீழான எனது பொறுப்புடைமை, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புடைமை என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் பொருண்மையானவையும் பொருத்தமானவையுமாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 சபையின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்க எதிர்பார்க்கப்படும் சபையின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளபோதும், நிதிக்கூற்றுக்களும் அவை பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் அடங்கியிராத தகவல்களும், ஏனைய தகவல்கள் என்பதால் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடங்கவில்லை என்பதுடன், அது சம்பந்தமாக எவ்விதமான உறுதிப்படுத்தலையும் அல்லது அபிப்பிராயத்தையும் நான் வெளிப்படுத்தவில்லை.

மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றபோது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு வகையில் பெறப்பட்ட எனது அறிவிற்கமைய பொருண்மையான விதத்தில் பொருந்தவில்லையா என்பதைப் பரிசீலிப்பது நிதிக்கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பாகும்.

சபையின் 2022 ஆண்டறிக்கையை வாசிக்கும்போது, அதில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுவதாக நான் முடிபு செய்வேனாயின், சீர்செய்வதற்கு கட்டுப்பாட்டுத் தரப்புகளுக்கு அவ்விடயங்கள் பற்றி அறிவிக்கப்படல் வேண்டும். மேலும் சீர்செய்யப்படாத பிறழ்கூற்றுக்கள் காணப்படும் பட்சத்தில், அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய என்னால் உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் அவை உட்சேர்க்கப்படும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டுத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்து நியாயமான முறையில் சமர்ப்பித்தலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை இயலச் செய்யும் வகையில் அவசியமாகின்ற உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, சபையை தொடர்ந்து நடாத்திச்செல்லும் ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பு என்பதுடன், சபையை ஒழிவுக்குட்படுத்த முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது வேறு மாற்று நடவடிக்கையொன்று இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்திவிட நடவடிக்கை எடுக்குமாயின் ஒழிய, தொடர்ந்து இயங்குவதன் அடிப்படையில் கணக்குவைத்தலும் சபையின் தொடர்ந்து இயங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

சபையின் நிதிசார் அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமாக பரீட்சிக்கும் பொறுப்பு, கட்டுப்பாட்டுத் தரப்பினரைச் சாரும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவிற்கமைய, சபையின் ஆண்டுக்குரிய மற்றும் பருவ நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதை இயலச் செய்யும் வகையில் தமது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியன பற்றி உரிய முறையில் ஏடுகளும் அறிக்கைகளும் பேணி வரப்படுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

முழுதுமளாவியதாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகளும் தவறுகளும் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாடொன்றை வழங்குவதும், எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்துகை, ஓர் உயர்மட்ட உறுதிப்படுத்துகையாக இருக்கின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உறுதிப்படுத்துகையொன்றாக அமையாது. மோசடிகளும் தவறுகளும் தனியான அல்லது கூட்டான பாதிப்பு காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படலாமென்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான பாதிப்பின் அடிப்படையில் அதன் பொருண்மை தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய கணக்காய்வின் ஒரு பகுதியாக உயர்தொழில்சார் நியாயப்படுத்தலுடனும் உயர்தொழில்சார் ஐயுறவுடனும் என்னால் செயலாற்றப்பட்டது. என்னால் மேலும் -

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வகுத்துக் கொள்ளும்போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக்களை அடையாளம் காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் வேளைக்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டன. தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்பை விட மோசடியொன்றினால் ஏற்படக்கூடிய பாதிப்பு வன்மையானது என்பதுடன் சூழ்ச்சிசெய்தல், போலி ஆவணங்களைப் புனைதல், திட்டமிட்ட திரித்துக்காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளைத் தவறவிடுதல் மோசடியொன்று இடம்பெறுவதற்குக் காரணமாக அமையும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் பயன்கூர்தன்மை பற்றிய அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு கருதப்படாத போதும், வேளைக்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு சம்பந்தமான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குதல் பற்றிய பொருண்மையான நிச்சமற்றதன்மையொன்று காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் பற்றிய அடிப்படையைப் பயன்படுத்தும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதிய நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுவதாக நான் முடிவு செய்வேனாயின், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியதாக இருக்காத பட்சத்தில், எனது அபிப்பிராயம் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடந்து இயங்குதல் ஒழிவுறலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புக்கும் உள்ளடக்கத்திற்கும் அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்களும் நிகழ்வுகளும் பொருத்தமாகவும் நியாயமான விதத்திலும் உள்ளடக்கியிருத்தலும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் முழுதுமளாவிய சமர்ப்பிப்பு மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் காண்புகளும், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்களும் பிற விடயங்களும் குறித்து கட்டுப்பாட்டுத் தரப்பினர்களை அறிவுறுத்துகின்றேன்.

**2. பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை**

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன:-

2.1.1 எனது அறிக்கையில் 'முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை' என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழக்கூடிய பாதிப்பு தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, கணக்காய்வுக்குத் தேவைப்படும் அனைத்துத் தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெறப்பட்டதுடன், எனது விசாரணையின் மூலம் தோன்றுகின்றவாறு உரிய நிதி அறிக்கைகள் சபையினால் பேணி வரப்பட்டிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாட்டுக்கு அமைய சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்கியொழுகுகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியின் (அ) இல் காட்டப்பட்டுள்ள அவதானிப்பு தவிர கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளது.

2.2 பின்பற்றப்பட்ட செயன்முறைகளும் பெறப்பட்ட சான்றுகளும் மீதும் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாட்டில் பின்வரும் கூற்றுக்களைத் தெரிவிக்குமளவுக்கு எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய சபையின் நிருவாக சபையின் அங்கத்தவர் ஒருவருக்கு சபை தொடர்பில், குறித்தவோர் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது வேறு வகையிலோ பொதுவான வியாபார நிலைமைக்கு அப்பால் தொடர்பொன்று உள்ளமை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்பு தவிர யாதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் பிறப்பிக்கப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட பணிப்புகளுடன் இணங்கியொழுகாத விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

| சட்டதிட்டங்கள்/ பணிப்புகளுடனான தொடர்பு | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆம் திகதிய, 28/2011 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து இலங்கை பொறியியலாளர் சேவை அலுவலர்களுக்கு மாதாந்தம் ரூ.15,000 கொண்ட படியொன்றைச் செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், அச்சுற்றறிக்கை மூலம் படிகளைச் செலுத்துவதற்கு அனுமதியளிக்கப்படாத நிறுவனங்களுக்கு படிகளைச் செலுத்துவதாயின், அமைச்சின் செயலாளர் ஊடாக நிதி அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றபோதும், கைத்தொழில் அபிவிருத்திச் சபை அவ்வாறான அனுமதியொன்றின்றி பணிப்பாளர் சபை அனுமதியின் பேரில் 12 அலுவலர்களுக்கு 2018 ஆம் ஆண்டு முதல் சேவைக் காலத்தைப் பொருட்படுத்தாமல் முழுமையாக படியை செலுத்தியதன் காரணமாக அனுமதித்த கொடுப்பனவைத் தாண்டி மீளாய்வு ஆண்டு இறுதி வரை ரூ.6,177,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2021 நவெம்பர் மாதம் 16 ஆம் திகதிய, 01/2021 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையில் அரசு வசமுள்ள தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைந்நூலின் பந்தி 6.6 | மீளாய்வு ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்களும் வரைவுகளும் ஆண்டறிக்கையின் பிரதியொன்றும் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றபோதும், சபையினால் மீளாய்வு ஆண்டு தொடர்பில் நிதிக்கூற்றுக்கள் 2023 நவெம்பர் மாதம் 02 ஆம் திகதி அதாவது 08 மாத காலத்திற்குப் பின்னர் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதேபோல், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஆண்டறிக் வரைவொன்றின் பிரதியொன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கமைய சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகளுக்கு இணங்கியொழுகாத விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கமைய பின்வரும் அவதானிப்பு தவிர சபையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்கூர் விதத்திலும் கால வரம்புகளினுள் சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைய பெறுகைசெய்து பயன்படுத்தியிருக்காமை.

விமலசுரேந்திர மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து புறத்தொதுக்கப்பட்ட கண்டி மாவட்ட அலுவலகத்தினால் 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பழுதுப்பட்ட செம்பில் ரூ.3,754,298 பெறுமதியான உலோகங்கள் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும், அத்தொகைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது பண்டங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வேறு விடயங்கள்

(அ) கைத்தொழில் அபிவிருத்திச் சபை வசமுள்ள 16 கைத்தொழிற் பேட்டைகளில் 733 காணித்துண்டுகள் காணப்படுவதுடன், அவற்றில் 52 காணித்துண்டுகள் கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமை காரணமாக பல வருடங்களாக பயன்பாடற்றவையாகக் காணப்பட்டன. மேலும் 05 கைத்தொழிற் பேட்டைகளின் 23 காணித்துண்டுகள் தனிப்பட்ட வதிவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. 2022 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு கைத்தொழிற் பேட்டைகளில் 29 தொழிற்சாலைகள் செயற்பாடற்ற நிலையில் மூடப்பட்டிருந்தன. வேறு கைத்தொழிலாளர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான மாத்தறை வேலைக்களத்திற்கு தேசிய அருங்கலைகள் பேரவையினால் ரூ.3,850,740 பெறுமதியான 3 இயந்திரங்களைத் தயாரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தபோதும், 2023 மார்ச் மாதம் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது பிரம்பை காட்டிலிருந்து இழுப்பதற்கான ரூ.351,000 பெறுமதியான இயந்திரம் தவிர ஏனைய 2 இயந்திரங்களின் வேலைகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2024 சனவரி மாதம் இறுதியாகும் போதும் இந்த மூன்று இயந்திரங்களின் வேலைகளைப் பூர்த்திசெய்து அருங்கலைகள் பேரவைக்கு ஒப்படைத்திருக்கவில்லை.

(இ) பொறியியல் பிரிவின் வேலைக்களத்தில், 2022 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 11 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான, பாவனைக்கெடுக்க முடியாத நிலையிலுள்ள இயந்திரங்களும், ஏனைய 34 உபகரணங்களும் காணப்பட்டபோதும், இந்த உருப்படிகளை பிரிவிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு அல்லது வேறு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஆவண செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல், பாரிய துளைகளை சிறிதாக்குதல், சிறிய துளைகளை பெரிதாக்குதல், உலோகத் துண்டுகளை வெட்டுதல் முதலான வெளிநிலைப் பணிகளுக்கு கேள்வி நிலவும் Boring Machine, Electrical Discharging Machine, Die Sinking Machine, Power Hammer for Black Smithy Work ஆகிய 04 இயந்திரங்களின்

இயக்குநர் இல்லாத நிலையில் 11 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலமாக பயன்பாடற்றுக் காணப்பட்டது.

(ஈ) பேலியகொட இறப்பர் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்திற்கு இறப்பர் சார்ந்த உற்பத்திகளின் பண்பை முன்னேற்றுதல், வீண்விரயத்தைக் குறைத்தல், உற்பத்திச் செயன்முறையின் வினைத்திறனை அதிகரித்தல், உற்பத்திக் கிரயத்தை குறைத்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு பாவனையை அறிமுகப்படுத்தல், ஊக்குவித்தல் முதலியவற்றை நோக்காகக்கொண்டு இறப்பர் இன்ஜெக்சன் மோல்டிங் இயந்திரமொன்று 2016 ஆம் ஆண்டில் ரூ.9,318,026 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து சுமார் 328 பயிற்சிபெறுநர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு முதல் 2023 கணக்காய்வுத் திகதி வரையிலும் இந்த இயந்திரம் செயற்படாத நிலையில் சபையின் பொறியியல் வேலைக்கள பூமியில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்கள் முற்கொடுப்பனவு மீதியில் 2021 ஆம் ஆண்டுக்கும் அதற்கு முந்திய ஆண்டுகளுக்கும் உரியதான தீர்க்கப்படாதுள்ள ரூ.6,050,081 மீதியொன்று காணப்பட்டது.

(ஊ) 33 வர்த்தக கடன்கொடுநர் மீதிகளின் பெறுமதி ரூ.12,238,482, வேறு 13 கடன்கொடுநர் மீதிகளின் பெறுமதி ரூ.9,587,167 தொகை இரண்டு ஆண்டுகளுக்கு கூடுதலான காலமாக முன்கொண்டு செல்லப்படும் மீதிகளாகக் காணப்பட்டன.

(எ) வர்த்தக மற்றும் வேறு கடன்கொடுநர் மீதியில் கடன்படுநர்களிடமிருந்து முற்கூட்டிய பெறுவனவுகளாக ரூ.52,628,070 காட்டப்பட்டிருந்ததுடன், முறைமை சரியாக இற்றைப்படுத்தப்படாமை காரணமாக இந்த மீதி உருவாகியுள்ளதாக தெரிய வந்தது.

(ஏ) வேறு நடைமுறைச் சொத்துக்களில் 2020 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாதுள்ள ரூ.7,357,288 பெறுமதியான 07 மீதிகள் காணப்பட்டதுடன், இவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு சபை மீளாய்வு ஆண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) 2016 ஓகத்து 17 ஆம் திகதிய අමප/16/1424/723/039 ஆம் இலக்க அமைச்சரவை முடிவின் மூலம் அரசின் பங்களிப்பொன்றுடன் ரொபோ தொழில்நுட்பத்திற்கான சிறப்புநிலை நிலையமொன்றை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன். அதற்காக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நவபிம பெரவெடும் (இன்குபேட்டர்) மையம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. நவபிம கட்டிடமொன்றில் 5 அறைகளைக் கொண்ட கீழ் மாடி மற்றும் இரண்டாம் மாடியின் நிர்மாணிப்பு, புதுப்பிப்பு, திருத்த வேலைகளுக்கு சுமார் 40 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. அதேபோல், இக்கருத்திட்டத்திற்காக கொள்வனவு செய்த சுமார் 35 மில்லியன் ரூபா பெறுமதியான ரொபோ தொழில்நுட்ப இயந்திர உபகரணங்கள் 2018, 2019 ஆம் ஆண்டில் இந்நிலையத்தில் நிறுவப்பட்டிருந்தது. இதனை அமுல்படுத்துவதற்காக

இணைத்துக்கொள்ளப்பட்ட நிறைவேற்று அலுவலருக்கு 2017 செத்தெம்பர் முதல் 2018 ஒக்தோபர் வரை மாதமொன்றுக்கு ரூ.725,000 வீதம் சம்பளமும் படிகளுமாக மொத்தம் ரூ.11 மில்லியன் அளவில் செலுத்தப்பட்டிருந்த போதும், தேவையான பணியாட்குழுவினரை ஆட்சேர்ப்புக்கும் அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் தோல்வியின் அடிப்படையில் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட இந்நிலையம் 2023 ஆம் ஆண்டளவில் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் காணப்பட்டபோதும், 2023 ஒக்தோபர் மாதம் மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள சோதனைக்கமைய இங்கு நிறுவிய 15 காற்றுச்சீராக்கி இயந்திரங்களும் சுமார் 7,200 சதுர அடி நிலப்பரப்பும், நிறுவப்பட்டுள்ள இயந்திர உபகரணங்களும் பயன்பாடற்றதாக 06 வருடங்களுக்கும் கூடுதலான காலமாக காணப்பட்டது. இருப்பினும், இலங்கையின் கைத்தொழில்களுக்கு உற்சாகமளித்தல், அவற்றை முன்னேற்றுதல், அபிவிருத்திக்கு உதவுதல் ஆகியன நோக்கில் இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், இதுவரை அது நிறைவேறவில்லை.

(ஒ) பேலியகொட இறப்பர் பொருள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் இறப்பர் சார்ந்த 64 இயந்திர உபகரணங்கள் காணப்பட்டன. அவற்றில் 26 இயந்திரங்கள் 1 வருடத்திற்கும் 37 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால இடைவெளியிலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன், ரூ.85,560 ஆன Compressor இயந்திரம் 2017 ஆம் ஆண்டு முதல் பாவிக்கப்படாமல் பொதிகளிலேயே களஞ்சியசாலையில் காணப்பட்டது. மேலும், அதிலுள்ள 17 வகையான மூலப்பொருள்களும் 284 வகையான இயந்திரங்களின் உதிரிப்பாகங்களும் 1-17 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து பாவிக்கப்படாமல் பயன்பாடற்றுக் காணப்பட்டன.

(ஓ) 2020 ஆம் ஆண்டில் யுனிடோ நிறுவனத்தினால் 101,130 ஐ.அ.டொலர் பெறுமதியான 12 இயந்திர உபகரணங்களையும் 1167.44 ஐ.அ.டொலர் பெறுமதியான பண்டங்களையும் சபைக்கு வழங்கி அவற்றை லக்சல கட்டிடத்தில் நிறுவி தற்காலிகமாக மூங்கில் மரப்பலகை பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2022 செப்டம்பர் மாதம் இப்பயிற்சி நிலையக் கட்டிடம் தேசிய அருங்கலைகள் பேரவைக்கு ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக அதில் இருந்த இயந்திர உபகரணங்களை அகற்றி கட்டுபெத்த நவபிம வளவில் கட்டிடமொன்றில் அடுக்கிவைப்பதன் மூலம் 2024 சனவரி அளவிலும் அவை பாவிக்கப்படாத நிலையில் பயன்பாடற்றுக் காணப்பட்டன.

(ஒப்பம்)
**டப்ளியு.பீ.சி.விக்ரமரத்ன**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**